Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Forgo your Ego and Pride

Your ego is the only thing that prevents you achieving your goals and dreams. It is said that Lord Shiva carried his **trishul** to keep his ego in check i.e. never letting his ego get the better of him. Nor does he allow other people's ego get in his way.





## Desire Leads to Obsession and Obsession Leads to Destruction

Lord Shiva is free from desires and never obsessed over things. It is a fact that desires always lead to obsessions, and these in turn make us self-destructive.



## Desire Leads to Obsession and Obsession Leads to Destruction

Lord Shiva is free from desires and never obsessed over things. It is a fact that desires always lead to obsessions, and these in turn make us self-destructive.



## Desire Leads to Obsession and Obsession Leads to Destruction

Lord Shiva is free from desires and never obsessed over things. It is a fact that desires always lead to obsessions, and these in turn make us self-destructive.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Lord BRAHMA





The Consort of Lord Brahma is Saraswathy Devi



Lord Brahma is recognized as the creator of the Universe. He is the originator and the generator of the mankind and all living being in the universe.

God Brahma can be seen as a four-faced, four-armed, bearded deity. He carries a lotus and a manuscript of vedas in the upper hands and a water pot (kamandala) in the lower hand and one hand is always there to bestow grace.

The faces represent the holy knowledge of the four Vedas namely, Riga, Yajur, Sama and Atharva. It symbolizes Brahma as the foundation of all the knowledge required for the creation of the universe. The four arms represent the four directions and therefore symbolize that Lord Brahma is the omnipresent and the omnipotent.

The white beard conveys wisdom and the long beard gives the idea that creation is a never-ending process. The crown on the head of Brahma implies that the Lord has the supreme power and authority over the process of creation. Brahma sitting on a lotus represents the creative power of the Supreme Reality.

As per the Hindu mythology, a swan is possessed with an exceptional discerning sense, which enables it to distinguish pure milk from a mixture of milk and water. Brahma uses the swan as a vehicle, which is known for its discerning abilities. This conveys the idea that, the Lord uses exceptional senses such as foreseeing the entire life of a mankind or other living being and also the entire universe.

Why there are not many worshipers for Lord Brahma?

Our fate or destiny and important aspects such as our gender, shape, whom we are to born and how our life is going to be are believed to be decided by Lord Brahma, the Creator, even before we are born and Hindus believe that these cannot be changed.

This means that there is less or no business with him after our birth and so it is understandable that there would not be many worshippers for Lord Brahma and we will not see many temples for him comparing.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lord MURUGAN

| Day of the week | God | Sub-sect |
|---|---|---|
| 1 Sunday | Sun | Souram |
| 2 Monday | Lord Siva | Saivam |
| 3 Tuesday | Sakthi Devi | Saatheyam |
| 4 Wednesday | Lord Vishnu | Vaishnavam |
| 5 Thursday | Lord Ganesh | Gaanapathyam |
| 6 Friday | Lord Murugan | Koumaram |
| 7 Saturday | Guru | Samayaatheetham |

**Devotees of Lord Muruga call their heartfelt God in several lovely names. Here are couple of those names:**

- Kumaran - One who is always young.
- Murugan - Gorgeous God
- Swamynathan - One who taught his father
- Saravanan - One who grew up at the pond, Saravana.
- Karthikeyan - One who was nursed by the six Karthigai maids
- Gankeyan - One who was developed by placing the six triggers of fire which originated from the third eye of Lord Shiva at the river Ganga.
- Kanthan - The name derived as Devi Uma merged up the 6 babies into one as Lord Muruga who was with six heads, twelve hands with single body.
- Sevvel - The God with red body.
- Kugan - One who dwells in caves and hillsides.
- Visagan - One who was formed as a form of light on the day of the star Visakam
- Velan - The God with the weapon, the spear that resembles knowledge.
- Subramaniyan - The God who is worshipped by the Gods, People and the asuras.
- Skandan - God who sits as a child with the parents at Somaskandamoortham.

Worshiping of Lord Muruga can be widely seen in India, Singapore, Malaysia, Sri Lanka, European countries, Canada, America, etc. We are able to see magnificent and beautiful temples for Lord Muruga in all these countries.

The great Hindu sage AadiSankarar had devised six sub-sects of Hinduism and they are called, Souram, Saivam, Saaththeyam, Vaishnavam, Ganapathyam and Koumaram.


Koumaram, is the sixth sect includes devotees who worship Lord Muruga.

Friday, the sixth day of the week is recognized as the special day for worshipping Lord Muruga. The table below outlines the detail:





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அருணகிரியின் அலங்காரம்



"புமியதனிற் ப்ரபுவான புகலியில்வித் தகர்போல
அமுதகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே"

பூமியிலே பிரபுவான புகலியைச் சேரந்த திருஞானசம்பந்தரைப்போல சுவையான கவிதைகளை அருளும் ஆற்றலை எனக்குத் தருவாயே என அருணகிரியார் முருகனிடம் வேண்டுகிறார். அருணகிரியார் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி எனப்பல அருட்பாடல்களை அருளியுள்ளார். இவையெல்லாம் சுவையாக இருப்பதற்கு, இப்படி முருகனிடம் வேண்டி அருள்பெற்றதும் ஒரு காரணமோ என்று எண்ணத்தோன்றுகின்றது. அவரின் பாடல்களில், குறிப்பாகக் கந்தரலங்காரப் பாடல்களில், இறையருள் பெறுவதெப்படி, ஈட்டிய பொருளை என்ன செய்யவேண்டும், மரணபயம் நீக்குவதெப்படி, தலையெழுத்தை மாற்றுவதெப்படி எனப் பல கேள்விகளுக்குப் பதில்கள் உள்ளன.

இறையருளை நாம் பெறவேண்டில், நம் மனம் சுத்தமாக இருக்கவேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவற்றை அகற்றினால் மட்டுமே இறைவன் எம் மனத்திலே இருக்க வருவான். இதையே அருணகிரியார் அழகாகச் சொல்கிறார். "மனத்தைக் கொடியவை செய்வதிலிருந்து தடுத்து நிறுத்துங்கள். கோபத்தை அடக்குங்கள். வறியவர்க்கு இயன்றவரை உதவுங்கள். உண்மையான நெறியில் ஒழுகுங்கள். அப்படியிருந்தால், ஏழுலகமும் உய்யவெனக் கொடுங்கோலனான சூரனை அடக்கவும் கிரவுஞ்சகிரியைக் கிழிக்கவும் வேலைவிட்ட முருகன் உங்களுக்கு அருளுவான்" என்பது அவர் வாக்கு.

தடுங்கோண் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்று
மிடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழப் பாருமுய்ய
கொடுங்கோ பச்சூருடன் குன்றந் திறக்கத் துளைக்க வைவேல்
விடுங்கோ னருள்வந்து தானேயுமக்கு வெளிப்படுமே 16

பிறவிகளுள் உயர;ந்தது மானுடப்பிறவி என்று பல தமிழ்ப் பாடல்கள் பாராட்டுகின்றன. அப்படிப் பெற்ற பிறவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் இறைவனை அடைதலே என்று அருட்பாடல்கள் அருளுகின்றன. மனிதராய்ப் பிறந்த நாம் வாழ்க்கைக்குத் தேவையான பொருளை ஈட்டுவது முக்கியமாகின்றது.

"அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லைப் பொருளிலார்க்
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" குறள் 247

என்பர் திருவள்ளுவர். அருளைப் பெறுவதற்கும் முதலில் பொருளை ஈட்டவேண்டும். அப்படி ஈட்டிய பொருளைச் சரியான வழியிலே செலவுசெய்து வாழ்ந்தால் மட்டுமே அருளைப் பெறலாம் என்றும் பல அருளாளர்கள் பாடியுள்ளார்கள். பெரும் பணம்படைத்த வணிகர் ஒருவர், "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்று பாடித் தனது செல்வம் அனைத்தையும் துறந்து பட்டினத்தடிகள் ஆனது நாம் அறிந்த செய்தி. "முருகனை வணங்கி, நீங்கள் உழைத்த பொருளில் பாதியையேனும் வறியவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். வெய்யிலுக்கு நிழல்கூடத் தராத உங்கள் உடம்பு அழிவது போல உங்கள் கையிலுள்ள பொருளும் உங்களுடன் வராது அழியும்" என்கிறார் அருணகிரியார்.

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்று
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள் உங்கட் கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவாவுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே 18

அப்பரடிகள், "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று பாடத் தொடங்கி, ஏன் இயமனை அஞ்சமாட்டேன் என்பதற்கு "கொய்ம்மலர;ச் சேவடியிணையே குறுகினோமே" என்கிறார். இறைவனின் திருவடிகளை நான் அண்டியிருப்பதால் இயமன் நம்மை அண்டமாட்டான் என்கிறார் அவர். மணிவாசகரும் அச்சப்பத்தில், "கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்" என்கிறார். அவரும் இறையருள் தனக்கு இருப்பதால் அப்படிப் பாடியிருக்கிறார்.

அருணகிரியாரும் இயமனுக்கு ஒரு சவால் விடுகிறார். "கொடிய எருமையில் ஏறிவரும் இயமனே! உன்னை வெட்டிப் புறமுதுகு காட்டி ஓடும்படி விரட்டாது விடமாட்டேன். சூரனை, அவனின் வலிமையை அழித்து வென்ற முருகப்பெருமானின் முன் நான் நிற்கிறேன். முருகனின் சக்திவாள் என் கையில் உள்ளது. முடிந்தால், உன் கவசத்தை அணிந்து என்னோடு மோதிப்பார்!" என்கிறார் அருணகிரியார்.

பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாறறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாள்திரு முன்பு நின்றேன்
கட்டிப் புறப்பட டாசக்தி வாளென்றன் கையதுவே 64

திருஞானசம்பந்தரை ஆலவாய் வரும்படி அழைக்கிறார் குலச்சிறையார். அப்போது அப்பருடன் திருமறைக்காட்டில் இருக்கிறார் ஞானசம்பந்தர். அப்பர், "நாள் நன்றன்று. அமணர் கொடியவர்கள். நீரோ சிறியவர். அங்கு செல்வது விரும்பத்தக்கதன்று" எனக் கருணையுடன் கூறுகிறார். அதுகேட்ட சம்பந்தர் கோளறு பதிகம் என்ற அருமையான தேவாரப் பதிகத்தை அருளுகிறார் "வேயுறு தோளிபங்கன்" என ஆரம்பிக்கும் பதிகத்தில்,

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே"

எனக் கோள்கள், நாள்கள் எதுவும் நம்மை வருத்தா என்று ஆணையிட்டுக் கூறுகிறார். அருணகிரியாரும் "முருகனின் திருவடிகள், சிலம்பு, சதங்கை, தண்டை, முருகனின் ஆறு முகங்கள், பன்னிரு தோள்கள் ஆகியவை எனக்குமுன்னே தோன்றும்போது, நாளென்செயும்? வினைதான் என்செயும்? கோள் என்செயும்?" என்கிறார்.

நாளென் செயும்வினை தானென் செயும்எனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையும் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் நாம் நினைப்பது நடக்காவிட்டால், அது எம் "தலையெழுத்து" என்போம், "விதி" என்போம். நல்லது நடந்தாலும் சரி, தீயது நடந்தாலும் சரி, இரண்டுமே நம் தலையெழுத்துப்படிதான் நடக்கின்றன. ஆனால் தலையெழுத்து என்ற சொல்லைத் தீமை நடக்கும்போதுமட்டும் நாம் பயன்படுத்துகிறோம். தீமை தருவதால் தலையெழுத்தை மாற்ற இயலுமா என்று சிந்திக்கிறோம். ஆனால் மாற்ற இயலாது என்று மருகுகிறோம். அருணகிரியாரோ, "மாற்றுவதென்ன? அழிக்கவே இயலும்" என்கிறார். எப்படி அழிக்கலாம் என்றும் சொல்லுகிறார் அவர். "முருகப் பெருமானின் திருவடித் தாமரைகள் என் தலையிலே பட்டவுடன் பிரமனின் கையெழுத்து; அதாவது என் தலையெழுத்து முற்றாக அழிந்துவிடும்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார் அருணகிரியார். "அவன் கால்பட்டழிந்தது என்தலைமேல் அயன் கையெழுத்தே" என்பது அவரின் வாக்கு. முருகனின் திருப்பாதங்கள் தலையிலே பட்டவுடன் அயனின் எழுத்து அழிந்துவிட்டதாம். இதோ அந்தப் பாடல்:

சேல்பட் டழிந்தது செந்தூர் வயல்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தன வேலையுஞ் சூரனும் வெற்பும் அவன்
கால்பட் டழிந்ததிங் கென்தலை மேலயன் கையெழுத்தே 40

இப்பாடலில் மூன்றாவது அடியில் வேல்பட்டழிந்தன என்று இருக்கிறது. மீதி மூன்று அடிகளிலும் அழிந்தது என்று உள்ளது. ஆனால் பல நூல்களில் மூன்றாவது அடியில் வேல்பட்டு அழிந்தது என்றே பிரசுரமாகியுள்ளது. அது தவறு. அழிந்தன என்பதே சரியான பாடம். க.ரா.ஜமதக்கினி சுவாமிகள் பதிப்பிலும், ஈழத்தில் திருவிளங்கம் என்பவர் பதிப்பித்த பதிப்பிலும் "வேல்பட்டழிந்தன" என்றே இருக்கின்றது.

அருணகிரியாரே இன்னொரு பாடலில் "அழித்துப் பிறக்கவொட்டா அயில் வேலன் கவியை அன்பால் எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர;" என்று பாடியுள்ளார். தவறைத் திருத்துவோம். தவறின்றிப் பாடுவோம்.

அயனின் பெயர் வந்தவுடன் அருணகிரியாரின் நகைச்சுவை உணர;வும் நமக்கு நினைவில் வருகிறது. அருணகிரியார் செழித்த வயல்கள் சூழ்ந்த திருச்செங்கோட்டு முருகனின் அழகிலே திளைக்கிறார். தன் இரு கண்களால் அந்த அழகைப் பருக இயலவில்லையே என்று பரிதவிக்கிறார். அயன்மேல் அவருக்குக் கோபம் வருகிறது. "நமக்கு ஒரு தலை, ஒரு மூளை, இரண்டு கண்கள் மட்டுமே உள்ளன. அயனுக்கோ (பிரமனுக்கோ) நான்கு முகங்கள். எனவே அந்த நான்முகனுக்கு எட்டுக் கண்கள், நான்கு மூளைகள் இருக்கவேண்டும் அல்லவா? அப்படி இருக்கும்போது, திருச்செங்கோட்டில் இருக்கின்ற முருகனின் அழகைக் கண்டு அநுபவிக்க, என்னைவிட நான்குமடங்கு மூளையுள்ள பிரமனுக்குப் புத்தி எங்கே போனது? நாலாயிரம் கண்களை எனக்குத் தந்திருக்கலாமே!" என்ற அவரின் ஆதங்கம் அழகான ஒரு பாடலாக உருவாகிறது.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயல்பொழிற் செங்கோட னைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே 90

திருமாலின் மருகனை, அம்பலத்தில் ஆடுகின்ற சிவனின் மகனை, தேவர்க்கெல்லாம் மேலானவனை, தத்துவ ஞானத்தை உபதேசிக்கும் தெய்வத்தை, சேல் மீன்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த செழிப்பான திருச்செங்கோட்டிலுள்ள முருகனைச் சென்று வழிபட்டு அவன் அழகைப் பருக, நாலுமுகம் கொண்ட அந்த அயன் எனக்கு நாலாயிரம் கண்களைப் படைக்காது விட்டானே! என்பது பொருள்.

கந்தரலங்காரத்தில் நூறு பாடல்கள் உள்ளன. அவற்றில் சில பாடல்களை மட்டுமே இங்கு சுவைக்க முடிந்தது. இவற்றை வழிபாடுகளில் பாடுவது மிகவும் அரிதாகி வருவது கவலையைத் தருகிறது. பன்னிரு திருமுறைகள், திருமுருகாற்றுப்படை, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருப்புகழ், அபிராமி அந்தாதி போன்றவை விளங்கவில்லை என்ற காரணத்தால் ஒதுக்கப்படுகின்றன. சிறு தெய்வ வழிபாட்டுக்குரிய, பகைவனை வெட்டு, பில்லி சூனியம் அகற்று, பகைவனின் கைகால்களை முறி, வேலால் குத்து என்றெல்லாம் சைவத்துக்குப் புறம்பான விடயங்களைக் கேட்டுப் பாடும் பாடல்களையே பலரும் பாட விரும்புகிறார்கள்; பாடுகிறார்கள். அருள் கொடு, என்னை ஆட்கொள், மனத்தில் அமைதி கொடு என்று பாடுவதை யாரும் விரும்புவதாகத் தெரியவில்லை. காலத்தின் கோலம் இதுபோலும். முருகன் முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் ஆயிற்றே! வாழவைப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதியுள் சோதி

முத்தமிழரசி டாக்டர் சரசுவதி இராமநாதன்

திருவிளக்கின் சுடர் சிவபெருமான், அதிலுள்ள வெம்மை சக்தி, சுடரின் ஒளி முருகன், விளக்கின் ஐந்து முகங்களும், அன்பு, நிதானம், சமயோசிதம், சகிப்புத் தன்மை, மனஉறுதி என்ற ஐந்து பன்புகளைக்குறிக்கும்.

இனி சோதியுள் சோதி யார் என்று பார்க்கலாம், சோதிப்பிழம்பு முருகன் என்கிறார் கச்சியப்பர்.

"அருவமும் உருவும் ஆதி, அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்கருணை கூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திரு மருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"

சோதி வடிவான சிவனின் நெற்றிக் கண்ணின் நெருப்புப் பொறியால் வந்துதித்த சோதிப்பிழம்பு திருமுருகன், கலியுகவரதன், கந்தன், கடம்பன், குகன், கார்மயில் வாகனன், குறத்தி மணாளன், குறிஞ்சிக்கிழவன், குறிஞ்சி வேந்தன், அழகன், அழகப்பன், முத்தப்பன், முருகையன், பன்னிருகையன், பழநியப்பன், ஆண்டியப்பன், வேலப்பன், வேலய்யன், கோழிக் கொடியோன், கருணாகரன், கார்த்திகேயன், சுப்பையன், சுவாமிநாதன், தகப்பன் சாமி, மாப்பிளைச் சாமி, குமரகுருபரன், தேவசேனாதிபதி, விசாகன், சுப்பிரமணியன், குமரன், ஞானபண்டிதன், ஸ்கந்தன், செந்தூரன், தண்டபாணி என்றெல்லாம் அடியவர் இதயக் குகையில் வசிப்பவன் என்றும், கந்தன் என்றால் பற்றுக் கட்டப்பட்டவன் என்றும், குமாரன் என்றால் மன்மதனைப் பழிக்கும் அழகுடையவன் என்றும் பொருள்!

'உல்லாச நிராகுல யோக இதச்
சல்லாப விநோதனும் நீயலையோ?
எல்லாமற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே!'

என்று அநுபூதியில் அருணகிரியார் பாடினார், ஆறுபடை வீட்டையும் இப்பாடல் குறிக்கின்றது.

1. உல்லாசம் – மணக்கோலம் – திருப்பரங்குன்றம்
2. நிராகுலம் – சூரனால் ஏற்பட்ட – திருச்செந்தூர் ஆகுலம் போக்கியது.
3. யோகம் – தனித்திருந்த தவக்கோலம் – பழநி (எ) திருவாவினங்குடி
4. இதம் – தந்தைக்கு இதமாகப் – ஏரகம் சுவாமி மலை பிரணவத்தின் பொருள் சொன்னது.
5. சல்லாபம் – வள்ளியுடன் காதம் மணம் – திருத்தணி
6. விரோதம் – பலகுன்றிலும் விளையாடல் – பழமுதிர் சேலை (குன்று தோறாடல்)

ஆறுபடை வீட்டுடன் ஏழாம் படை வீடாக அடியவர் இதயம் குடி கொண்டவன் குமரன். 'அடியவர் இச்சையில் எவை எவை உற்றன அவை தருவித் தருள் பெருமாளே!' என்றார் அருணகிரிநாதர் (திருப்புகழ்).

எவை எவை முருகனை வேண்டினால் கிடைக்கும்? பார்க்கலாமா ஒரு மாணவன் 'எனக்கு அறிவே இல்லையே' யாரை வணங்க வேண்டும்? என்றான். 'ஞானமே வடிவாகிய நாயகன் முருகனை வணங்கு என்றேன். ஒரு பெரும் தத்துவத்தின் சாறெடுத்து நல்ல ஒம் எனும் மந்திரத்தின் பொருள் உரைத்துத் தந்தை'கு உபதேசம் செய்த மலை எங்கள் தமிழ்த் திருநாடு கண்ட சுவாமி மலை' என்றார். கண்ணதாசன் அவனது ஞானம் அஃகி அகன்று, ஆழ்ந்து நிற்பது அவனது வேல் போன்ற கூர்மை, அகலம், ஆழம் உடையவேல் ஞானத்தின் சின்னம், கதிர்காமம், நல்லூர் போன்ற இடங்களில் வேலு'கே வழிபாடு நடக்கிறதன்றோ? உலகில் ஆயுதத்தின் பெயரை மனிதருக்கு வைப்பார்கள்? பீரங்கி, துப்பாக்கி என்று யாரும் பெயர் கொள்வதில்லை. ஆனால் பெருமாளின் சக்ராயுதம், சுதர்சனம், சக்ரபாணி எனவும், வில், கோதண்டம், கோதண்டபாணி, சாரங்கம், சாரங்கபாணி என்றும் மக்களிடையே பெயராக உலவுகிறது. முருகனின் வேல் தமிழரிடை எவ்வளவு பிரபலமென்பது பின்வரும் பெயர்களால் தெரிய வரும. வேலு, வேலப்பன், வேலுச்சாமி, வேலாயுதம், முத்துவேல், ரத்னவேல், சித்திரவேல், மயூரவேல், வெற்றிவேல், வைரவேல், ஞானவேல், சிங்கார வேல், சிங்காரவடிவேல், என்ற பெயர்கள் உலகெங்குமுள்ள தமிழரிடையே நின்று நிலவுவதே வேலையும் முருகனையும் பிரித்து பார்க்க முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் காட்டும்.

ஞான வடிவான வேலுடைக்குரன் அறிவு, ஞானம் தருவார். ஒருமுறை பிரம்மன் படைப்புத்தொழில் செய்து கொண்டிருக்கும்போது முருகன் அருகே வந்தாராம்.

"ஊத்தக் குழியிலே மண்ணை எடுத்து.
உதிரப் புனலிலே உண்டை சேர்த்து
வாய்த்த கயவனார் பண்ணும் பாண்டம் இது
வரை ஒட்டுக்கு ஆகாதென்று ஆடு பாம்பே"

என்றார் சித்தர். குவன் பிரம்மன், நாமெல்லாம் அவன் செய்யும் மண்பாண்டங்கள், முருகனை மதிக்காமலிருந்த பிரம்மனை 'யார் நீ? னுன்ன செய்கிறீர்?' என்று முருகன் வினவ. படைப்புத் தொழில் செய்வதாகவும், வேதம் சொல்லியே படைப்புச் செய்வதாகவும் விடை பகர்ந்தான்.

'வேதம் பகர்க' என்று விமலனாம் குமரவேள் சொல்ல, 'அரி ஓம்' என்று தொடங்கினான் நான்முகன். 'ஓம்' என்பதன் பொருள் யாதென ஆறுமுகன் கேட்க, பதிலறியாது விழித்த பிரமனைக் குட்டிச் சிறையிலிட்டு, முருகனே படைப்புத் தொழில் செய்ய ஆரம்பித்தான்.

'நாலுமுகன் ஆதி அரி ஓம் என ஆதாரமுரையாத
பிரமாவை விழ மோதி பொருளோதுகென
நாலுசிரமோடு சிகை தூளிபடத்தாளமிடும் இளையோனே!' – திருப்புகழ்

சிவபெருமான் முருகனிடம் காரணம் கேட்ட போது 'அறியாமை, ஆணவம் நிறைந்த அயன் படைத்தால் உயிர்கள் அப்படித்தானே பிறக்கும். ஆகவே அயனைச் சிறையிலிட்டு, நானே படைக்கிறேன்' என்றார். உனக்குப் பிரணவத்தின் பொருள் தெரியுமா என்ற மூக்கண்ணனைச் சீடராக்கி, தந்தைக்கு மந்திரத்தைச் சாற்றிப் பொருளுரைத்த மூதறிஞனானாள் முருகன், சிவத்தின் சாமி, மயில்மிசை நடிக்கும் சாமி, எமதுள்ளம் சிறக்கும் நாமி, சரவண தகப்பன் சாமி, சுவாமிநாதன் ஆனார். அவரே அறிவுக்குரிய கடவுள்.

'நாதபிந்து கலாதீ நமோநம
வேதமந்திர சொரூபா நமோநம
ஞானபண்டித சுவாமி நமோநம' – என்று துதிப்போம்.

அடுத்தொரு இளைஞன், அச்சம், பேரச்சம், பயம், எங்கும் பயமயமாக இருக்கிறதே என்றான்.

"வீவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்" உடைய வேலன் அச்சம் போக்குவான்.

"அவனிடம் சொன்னேன் என் அஞ்சுதலை
அந்த மன்னனே தந்துவிட்டான் ஆறுதலை" என்றேன்.
"வெற்றி வடிவேலன் அவனுடை
மிரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ பகையே
துள்ளி வருகுது வேல்" – என்றார் பாரதி.

பிரிட்டிஷ் படையை எதிர்த்து உரிமைக்குரல் தந்த வீரபாண்டியக் கட்டபொம்மனின் வீரமுழக்கம் 'வெற்றிவேல், வீரவேல்' என்பதே மற்றோர் இளைஞனோ என் காதல் கைகூட யாரை நான் வணங்கிடலாம் என்றதும் 'வள்ளி மணாளனை வாழ்த்து' உன் வதுவை சிறப்புற நடக்கும் என்றேன்.

'துள்ளுமத வேள் கைக்க கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுருகும் மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளல் தொழும் ஞானக்கழலோனே

வள்ளி மணவாளப் பெருமானே!'

என்ற திருப்புகழ், முருகன், வள்ளிமீது கொண்ட காதலால் உருகி வேடனாக, வேங்கையாக, விருத்தனாக மாறி அவளை மணந்த காதல் மணவாளன் என்பதைக் காட்டும். அவனருளால் காதல் திருமணம் கைகூடும் பெற்றோர் பார்த்து மணம் முடிக்கும் கற்பு மணமே சிறப்பு என்று நினைப்பவரும் முருகனை வேண்டுக. பெற்றோர் தாரை வார்த்துத்தர, தேவயானை என்ற தேவருஞ்சரியைப் பரங்குன்றில் மணந்தவன் செவ்வேள்.

'மணக்கோலம் திருமணக்கோலம்

திருப்பரங்குன்ற விழாக்கோலம்'

'குன்றத்திலே குமரனுக்குக் கொண்டாட்டம்

அங்கே குவிந்ததம்மா பெண்கள் எல்லாம்

வண்டாட்டம் கொண்டாட்டம்

தெய்வயானை திருமணமாம் திருப்பரங்குன்றம்

தெருமுழுவதும் பக்தர்களின் ஆனந்த மன்றம்'

என்ற பாடலடிகள் இனிமையானவை, குழந்தைச் செல்வம் தான் உலகில் மிகப்பெரிய செல்வம், அதைப்பெற சட்டி (சஷ்டி) விரம் இருப்பார் பலர். 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்பது பழமொழி சஷ்டி திதியில் விரதம் இருந்தால் கருப்பையில் குழந்தை வரும் என்பதே உட்பொருள்.

'பேராதரிக்கும் அடியவர்தம பிறப்பை ஒழித்துப்

பெருவாழ்வும் பெறும் கொடுக்கவரும்

பிள்ளைப் பெருமாள் என்னும் பேராளா!' – திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்

என வேண்டுங்கள். மடியில் மழலையாக முருகன் வருவான். உறவுக்கும் துறவுக்கும் அவனே கடவுள், வெண்ணீறணிந்து வேலைப்பித்து பண்டாராமாகிப் பழநியாண்டியான முருகன், துறவு மனப்பான்மை, (பற்றற்ற நிலை) தருவான் ஆக, வேண்டுவர், வேண்டிற்றே அருள்பவன் முருகன் என்பது நூற்றுக்கு நூறு உண்மைதான்!

'விளிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா

மொழிக்குத்துதுணை முருகா எனும் நாமங்கள், முன்பு செய்த

பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும் பயந்ததனி

வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே!' – கந்தர் அலங்காரம்

மமது விழி பார்த்திருக்க வேண்டிய துணை, விழுத்துணை, விழாத்துணை, ஒப்பற்ற துணை, உய்விக்கும் துணை இறைவனின் மலர்ப்பாதங்களே.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் அவன் திருப்பாதம் சேர்ந்தவர்களே என்று வள்ளுவம் கூறிற்று. மொழிக்குத் துணை முருகா என்பது ஒரு நாமம் தானே! அப்படியில்லை முருகா, குமரா, குகா, சண்முகா, அழகா, அதிகா, அமராபதி, காவலனே, சுரபூபதியே என்று எப்பெயரிட்ட அழைத்தாலும் நாமமே நாவிற்குச் சேமம். 'நாவினுக் கருங்கலம் நமசிவாயவே' என்றார் அப்பர். 'நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்றார் திருமங்கை ஆழ்வார் முருகா என ஓர்தரம் ஓது அடியார் முடிமீது இருதாள் புனைவானாம் முருகன், முருகா என்ற சொல் தமிழின் மெய்யெழுத்துக்களில் மூன்று இனமும் சேர்ந்தது. மு.மெல்லினம், ரு இடையினம், கா வல்லினம், அத்துடன் அகார, உகாரம், மகாரம் சேர்ந்து ஓம் என்பது போக் உள்ளது முருகா எனும் நாமம்.

'முருகன் என்றால் அழகன் என்று தமிழ் மொழி கூறும்' முருகு என்றால் இளமை, மணம், அருள், மூவா நலம், செம்மை, செழுமை என்றெல்லாம் பொருள், அத்தனையும் உடையவன் முருகனே!

நான் பாவம் செய்திருக்கிறேனே நாமத்தைச் சொல்லலாமா என்றால், முன்பு செய்த பழிக்குத் துணை அவன் பன்னிரு தோள்கள் போய் பிழையும் புகுதருவான் நின்றனவுமான பாவங்கள் அவர் நாமம் சொன்னதுமே தீயினில் தூசாகும், பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமும்.

அவன் திருவடி ஊழ்வினை எனும் தலையெழுத்தை அழித்து விடும் 'அவன் கால்பட்டு அழிந்தது இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்தலைமேல் அயன் கை எழுத்தே!' என்றது கந்தர் அலங்காரப் பாடல் தேவாதி தேவர்கள், தேவேந்திரன், இந்திராணி, பிரமன் முதலானோர் சூரபதுமன் ஆட்சியில் அல்லற்பட்டனர். அவர் தம் தலை எழுத்தை மாற்றி விடுதலை தந்தவன் முருகனே.

'அமரர் இடரும் அவுணர் உடலும்
அழிய அமர்செய் தருள்வோனே
அறமும் நிறமும் அயிலும் மயிலும்
அழகும் உடைய பெருமானே!' – திருப்புகழ்

நக்கீரர் மூதற்சங்கத்தின் தலைமைப்புலவர், சிவபக்தர், ஒருமுறை திருப்பரங்குன்றக் குளக்கரையில் சிவபூஜை செய்து கொண்டிருந்த போது மரத்திலிருந்து கற்கிமுகி என்ற பிரம்ம ராட்சதன் ஒரு தந்திரம் செய்து ஓர் இலையைக் கீழே வீழ்த்தியது. அது இரண்டாய்ப் பிரிந்து ஒரு பாதி பறவையாகி, மறுபாதி மீனாகியது. வேடிக்கை பார்த்து வியந்த நக்கீரர் பூஜையை மறந்தார். பூதம் பிடித்துப் பாதாளச் சிறையிலடைத்தது. ஏற்கனவே அங்கிருந்த 999 பேரும் நக்கீரரைத் திட்டனர். 'உம்மால் எங்கள் வாழ்வும் இன்றிரவு (அமாவசையில்) முடியப் போகிறது எங்கள் தலையெழுத்து இது' என்றனர். நக்கீரர் 'உலகம் உவப்ப' என்று தொடங்கித் திருமுருகாற்றுப்படை பாடினார். பூதாளச் சிறை பிளந்து அனைவரு விடுதலை பெறச் செய்தது கந்தனின் காலடி, 'பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்குமொரு கவிப்புலவன் இசைக்குருகி வரைக் குகையை இடித்து வழி காணும்' என்றது வேல் விருத்தம்.

ஊமையும் செவிடுமாய்ப் பிறந்த குமரகுருபரரை அவரது பெற்றோர் (சண்முக சிகாமணி' கவிராய் பகவதி அம்மை) செந்திலாண்டவன் திரு முன்பு விட்டுவிட்டு 'முருகா' இந்தப் பிள்ளை உன்னருளால் சஷ்டி விரதமிருந்து கிடைத்த பிள்ளை. இவன் எங்களை 'அம்மா, அப்பா' என்ற அழைக்க வேண்டாம். 'முருகா' என்று கந்தர்கவி வெண்பாப் பாடிற்று. வந்தகவி தீர்ந்தது. கந்தர்கவி வெண்பா நமக்குக் கிடைத்தது. தலையெழுத்தை மாற்றியது கவியுக வரதனின் காலடி தானே!

அருணகிரிநாதர் 'வாக்குக்கு அருணகிரி' 'கருணைக்கு அருணகிரி' என்றெல்லாம் போற்றப் பாடுகிறார். 'ஐயா அருணகிரி அப்பா, உன்னைப் போல் மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?

என்றார் தாயுமானவை சுவாமிகள் அந்த அருணகிரிநாதர் இன்பத்துறையில் (திக மோகத்தினால்) ஈடுபட்டு நோயுற்றதாகவும் தற்கொலை செய்து கொள்ள எண்ணி அருணைக் கோபுரத்திலிருந்து விழுந்ததாகவும் வரலாறு. விழந்தவரை இரு கரங்கள் தாங்கித் திருவடியில் இருத்தன. யாரப்பா நீ? என்னை ஏன் காப்பாற்றினாய்? னுன்ற அருணகிரியிடம் நான் தான் கோபுரத்து இளையன் முருகன்.

(மூத்தவன் பிள்ளையார்) நீ சாகக் கூடாது, வாழ வேண்டும் என்றார் முருகன், எதற்காக நான் வாழ வேண்டும்? அருணகிரியின் வினா 'என்னைப் பாட' கந்தனின் விடை உன்னைப்பாட எனக்கு என்ன தெரியும்? சட்டி முகத்தைச் சந்திர பிம்பம் என்றேன், ஊத்தையும் மலமும் ஒழுகும் உடலை அமுத கலசம் என்றேன். மட்டூர் சூழல் மங்கையர் மையல் வலைப்பட்டுசல் கொண்டலைந்தேன் என்றமுத அருணகிரியின் நாவில் ஷடாக்ஷரத்தை எழுதி, "முத்தைத்தரு பத்தித்திருநகை" என அடியெடுத்து என் திருப்புகழைப் பாடு எனப் பணித்தான் முருகன். பிறந்தது திருப்புகழ், மலர்ந்தன சத்தங்கள், பரவியது கந்தன் கருணை, செழித்தது தமிழ்.

'மல்லேபுரி பன்னிருவாகுவில் என் சொல்லே புனையும் சுடர் வேலவனே.'

'தாவடி ஓட்டும் மயிலிலும் தேவர் தலையிலும், என் பாவடி ஏட்டிலும் பட்டதன்றோ முருகனின் தண்டைச்சிற்றடி'

'அறிவலறிந்துன் இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சம்களைவோனே!'

என்றெல்லாம் பாடிப்பரவுவோம் சோதியுள் சோதியாய் வந்த முருகன் அடியார்மன இருள்நீக்கும் ஆதவன். நீலக்கடல் மீது சிவந்த சூரியன் உலகம் வாழ உதிக்கிறான். நீலமயில் மீது சிவந்த முருகன் உலகம் வாளம் வந்து அருள்கிறான். அந்தத் தீபமங்கள் சோதியைப்போற்றிடின், நம்வாழ்வு வளம்பெறும். ஒளிபெறும், நலம்பெறும், மங்கலம் யாவும் பெறும், நம் ஊழ்வினை அழிக்கப் பெறும், 'அவன் கால்பட்டழிந்த திங்கு என் தலைமேல் அயன் கையெழுத்தே' என்று நாமும் நிமிர்ந்து நின்று கூறுவோம்.

**லண்டனில் ஸ்ரீமுருகன் ஆலயம் ஓங்கி வளர்க! அடிகாலர் வாழுக!!**

வாழ்கசீர் அடியார் எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழில் திருவண்ணாமலை


அருணகிரியார்

திருவண்ணாமலை என்றதுமே முருகபக்தர்களின் நினைவுக்கு வருவன திருப்புகழ் ஆதிய நவமணி நூல்களும் அவற்றை நமக்களித்த அருணகிரிநாதருமே. சிவபெருமானுக்குத் தேவாரம் போன்று நாராயணனுக்கு ஆழ்வார்கள் பாசுரம் போன்று முருகப்பெருமானுக்கு உகந்தவை அருணகிரிநாதரின் சந்தப்பாக்கள் கயிலை முதல் கதிர்காமம் வரையிலுள்ள கோயில்களைத் தரிசித்துப் பாடியவர் திருவண்ணாமலையில் மட்டுமே சுமார் 78 பாடல்களைப் பாடியுள்ளார். நாற்பதாண்டுகளாகத் திருப்புகழ் பாடியும் பரப்பியும் தொண்டாற்றிவரும் எனக்கும் என் கணவர் ஈ.என். மூர்த்தி அவர்களுக்கும் அருணகிரிநாதரின் பார்வையில் அண்ணாமலைக்கோயிலை வலம் வர ஆவல் ஏற்பட்டது. அதன் விளைவாக் ஒரு புநித யாத்திரையும் ஏற்பாடாயிற்று.

திருவண்ணாமலைக்கோயிலின் முகப்பில் நின்று ராஜகோபுரத்தைத் தரிசித்ததுமே "அடல் அருணைத் திருக்கோபுரத்தே" என்று துவங்கும் கந்தர் அலங்காரச் செய்யுள் நினைவுக்கு வருகிறது. கோபுர தரிசனம் கோடி புண்ணியமாயிற்றே; ஆனால் அது என்ன 'அடல் அருணை?' அடல் என்பதற்கு வீரம் என்பது பொருள்; ஆனால் இங்கு அது ஞான வீரம் என்று பொருள்பட அமைந்துள்ளது" என்கிறார் கி.வா.ஜ. அவர்கள். குகைநமசிவாயர் குருநமசிவாயர் ரமணமகரிஷி சேஷாத்ரி ஸ்வாமிகள் யோகி ராம் சூரத்குமார் போன்ற ஞானிகளைப் பிற்காலத்தில் நமக்குக் காட்டித்தந்த அருணாசலம் அல்லவா! எனவே அன்றே தீர்க்கதரிசியாக நம்மவர் அடல் அருணை என்று பாடி வைத்துவிட்டார் போலும்!

முருகன் அருணகிரியாரது இஷ்ட தெய்வம்; குறிக்கோள் தெய்வமும் கூட; அதனால் கோபுரத்தின் வடவாயிலுக்கு அருகிலுள்ள முருகன் அவருக்கு முதலில் தென்படுகிறான்;ஆனால் அண்ணன் விநாயகரை வணங்காமல் பாடத் துவங்க முடியுமா? எனவே

**"அடல் அருணைத் திருக்கோபுரத்தே அந்த வாயிலுக்கு**

**வட அருகில் சென்று கண்டுகொண்டேன். வருவார் தலையில்.**

**தடபடெனக் குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்**

**கட தட கும்பக் களிற்றுக்கிளைய களிற்றினையே"**

என்று பாடுகிறார். நாமும் கோபுரத்திலுள்ள மூத்த களிறைத் தரிசித்தபின் 'கோபுரத்திளையனார்' என்றழைக்கப்படும் இளைய களிற்றைத் தரிசிக்க விரைகிறோம். வல்லாள அரசனால் புதுப்பிக்கப்பட்ட கோபுரத்தை ஒட்டி அமைந்துள்ளது கோபுரத்திளையனார் சந்நிதி. இவரைப்பற்றிப்பாடும்போது

**"ஆடக விசித்ர கன கோபுர முகப்பில்**

**அருணாபுரியில் நிற்கும் அடையாளக்கரனும்"**

என்கிறார் அருணகிரியார். வல்லாள கோபுரத்திலிருந்து கீழே குதித்து உயிரை மாய்த்துக்கொள்ளவிருந்த அருணகிரியாரைத் தாங்கிப்பிடித்து உலக வாழ்க்கையில் மிகச்சலிப்புற்றிருந்த அவருக்கு உபதேசமும் செய்தருளிய கருணாமூர்த்தி இவனே என்று நமக்கு அடையாளம் காட்டுகிறார். "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூவித் தம் பக்தரைக் காத்த சிவபிரானது மரபில் வந்தவனல்லவா இவன்! அருணகிரியாருக்கு நயனதீக்ஷை அளித்து 'அருணகிரிநாதன்' என்ற பெயரையும் கொடுத்து 'நம் புகழைப்பாடுவாயாக' என்று ஆணையும் இட்டான். எப்படித் துவங்குவது என்று பிரமித்து நின்றவருக்கு சுந்தரருக்குத் தன் தந்தை 'பித்தா' என்று அடி எடுத்துக் கொடுத்ததைப்போல 'முத்து' என்ற சொல்லை வைத்துப் பாடத்துவங்கும்படிக் கூறினவர் கோபுரத்திளையனார். (சந்நிதிக்கு அருகிலேயே பல திருப்புகழ் பாடல்களின் கல்வெட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.)

"உமைக்கு ஒரு முத்தாய் முளைத்த குருநாதக் குழந்தையாம் முத்துக்குமர"னாகிய தன்னை வைத்துப்பாடுவதற்காக அவ்வாறு அடியெடுத்துக் கொடுத்தானோ?முத்தம்மை என்ற பெயரை உடைய புலவரதுதாயார் பெயரை முதலாக வைத்துப் பாடச் சொன்னானோ குழந்தை?

எது எப்படி ஆனால் என்ன காலத்தால் அழிக்க முடியாத முத்துப் போன்ற தூய சந்தப் பாமாலையை நாம் அனைவருமே இறைவனுக்குச் சமர்ப்பிக்கும் படியாகத் தந்துவிட்டுச் சென்றிருக்கும் அருணகிரியாரின் கருணையை என்னென்று சொல்வது?

கோபுரத்திளையனாரையும் எதிரிலுள்ள சிவகங்கைத் தீர்த்தம் சர்வசித்தி விநாயகர் சந்நிதி இவற்றைத் தரிசித்தபின் தீர்த்தக் கரையிலிருக்கும் கம்பத்திளையனார் சந்நிதியை நோக்கிக் கால்கள் தாமாக விரைகின்றன. 'முத்தமிழ் விரகன் நாற்கவிராஜன்' முருகன் இங்குள்ள மண்டபத்தில்தானே ஒரு பெரிய நாடகத்தை அரங்கேற்றியிருந்தான்! அந்தக் கதையைச் சற்றுப் பார்ப்போம்.

அருணகிரியார் வாழ்ந்தகாலத்தில் ப்ரபுடதேவன் எனும் அரசன் திருவண்ணாமலையை ஆண்டு வந்தான். அருணகிரிநாதர்மீது பெரும் மதிப்பும் நட்பும் கொண்டிருந்தான். மன்னன். சிவபிரானது திருக்கோலத்தைக் காட்டியருளும்படி சோமாசிமாற நாயனார் சுந்தரரிடம் வேண்டிக்கொண்டது போல அரசனும் அருணகிரியாரிடம் முருகவேளைத் தமக்கு காட்டுமாறு வேண்டிக் கொண்டான். அரசனுடைய மற்றொரு நண்பனான சம்பந்தாண்டான் இதைக் கேட்டு மிகுந்த பொறாமை அடைந்தான். தான் தேவியைச் சபையில் வரவழைத்துக் காட்டுவதாகவும் அதே போல அருணகிரியாரும் முருகனைச் சபையில் வரவழைத்துக் காட்டினால் மட்டுமே அரசன் அவரிடம் நட்புப் பூணலாம் என்று சூளுரைத்தான். சிவகங்கைத் தீர்த்தக் கரையில் சபை கூடியது. எவ்வளவோ முயன்றும் சம்பந்தாண்டானால் தேவியை வரவழைக்க முடியவில்லை அருணகிரியாரின் முறை வந்ததும் சிவகங்கையில் மூழ்கி எழுந்து முருகனைத்துதித்துப் பாடலானார். முருகன் வரத் தாமதமான போதுகீழ்வரும் வரிகளை மனம் உருகப்பாடினார்.

> **"இருவர் மயலோ அமளி விதமோ,**
> **எனென செயலோ அணுகாத**
> **இருடி அயன் மால் அமரர் அடியார்**
> **இசையும் ஒலிதான் இவைகேளா[து]**
> **ஒருவன் அடியேன் அலறு மொழிதான்**
> **ஒருவர் பரிவாய் மொழிவாரோ."**

என்று தொடர்ந்து பாடினார். "தங்கள் இருமருங்கிலும் எழுந்தருளியுள்ள வள்ளி தெய்வயானை இவர்கள் மீதுள்ள அன்பின் பெருக்காலும் அதனால் ஏற்பட்ட மயக்கத்தாலும். என் முறையீடைக் கேட்கவில்லயோ? உனது சந்நிதியை நெருங்க முடியாத முநிவர்களும். பிரமன். தேவர்கள். அடியார் இவர்களது இரைச்சல் தான் காரணமோ? இவர்களுள் ஒருவர் கூட உன்னிடம் வந்து எனக்காகப் பரிந்துரைக்கமாட்டார்களோ" என்றெல்லாம் இங்கு முறையிடுகிறார். அடுத்ததாக "அதல சேடனார் ஆட அகிலமேரு மீதாட" என்று வரவேண்டியவர்களின் ஒரு பெரும் பட்டியலே போட்டு. "மயிலுமாடி நீ ஆடி வரவேணும்."

என்று பாடும்போது மயில் துள்ளிக் குதித்து முருகனிடம் சென்றதாம். பாட்டைக் கேட்டு மகிழ்ந்த அன்னயின் கைகள் நெகிழவும். முருகன் அவளது மடியை விட்டிறங்கிச் சென்று மயிலின் மீது ஏறி அமர்ந்தார்; கோயில் மண்டபத்திலுள்ள ஒரு தூணில் நொடியில் அனைவருக்கும் தரிசனம் தந்தார். மகிழ்ச்சி மிகுதியில்.

> **"உதயதாம மார்பான ப்ரபுடதேவமாராஜன்**
> **உளமுமாட வாழ்தேவர் பெருமாளே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்று பாடி முடித்ததும். சம்பந்தாண்டான் வெட்கித் தலை குனிந்தான். இப்படி நடந்தது சத்தியம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில்.

"சயிலம் எறிந்த கை வேற்கொடு
மயிலினில் வந்தெனை ஆட்கொளல்.
ஜகம் அறியும்படிக் காட்டிய குருநாதா"

என்று திருச்சிராப்பள்ளியிலும். 'எமன் வந்து என்னைக் கொண்டு போகு முன் அன்று ஒரு முறை அருணையில் வந்தாயே அது போல் மீண்டும் நீ வர வேண்டும்' எனத் திருச்செங்கோட்டிலும் கூறுகிறார். தற்போது கம்பத்திளையனாருக்கெனத் தனிச் சந்நிதி அமைத்து நமது கற்பனைக் காட்சியைச் சற்று சிதறடித்து விட்டனர் என்றே கூறலாம்.

வல்லாள அரசன் கோபுரத்தைத் தாண்டி. கிளி கோபுரத்தை நோக்கிச் செல்கின்றோம். [நமக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக கிளிச்சிற்பத்திற்கு பச்சை வண்ணம் அடித்து வைத்திருக்கிறார்கள்!] முந்தைய கதை இங்கேயும் தொடர்கிறது. கம்பத்திளையனாரைக் கண்ட அரசனின் கண்பார்வை பறிபோயிற்று. உடனே சம்பந்தாண்டான் மனதில் மேலும் ஒரு சூழ்ச்சி தோன்றியது.

"விண்ணுலகம் சென்று பாரிஜாதம் கொண்டு வந்தால் அரசருடைய பார்வை சரியாகிவிடும்." என்றும். பெரும் சித்தராகக் கருதப்படும் அருணகிரிநாதரே அதற்குத் தகுந்தவர்' என்றும் அறிவிக்கிறான்.

அரசன் மீது அளவற்ற அன்புடைய அருணகிரியார். இதற்கு ஒப்புக்கொண்டு அண்ணாமலையில் பூத உடலை விட்டுவிட்டு கிளிரூபத்தில் இந்திரலோகம் சென்றார். அவர் திரும்பி வருவதற்கு முன் அருணகிரி இறந்துவிட்டான் என்று கூறி அவரது உடலைத் தகனம் செய்துவிட்டான் சம்பந்தாண்டான். பாரிஜாதத்தை பூமிக்குக் கொண்டுவந்த அருணகிரியார் நடந்ததைக் கேள்வியுற்றுச் சற்றும் வருந்தினாரில்லை.

இருவினைக்குக் காரணமான இப்பூத உடலை இறைவன் எடுத்துக் கொண்டு விட்டதை எண்ணி மகிழ்ந்து கிளி ரூபத்தில் இருந்து கொண்டு கந்தர் அனுபூதி எனும் மஹாமந்த்ர நூலைப் பாடினார் என்பது செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பௌதிக உடம்பை மாற்றி இந்த உலகம் என்ற நினைவு இல்லாத சுகசொரூபமாக நின்ற பொழுது இறைவனுடைய மயமான ஒரு நிலையில். பசுகரணங்களெல்லாம் மாறிப் பதிகரணம் ஆன பொழுது பாடிய பாட்டு கந்தர் அனுபூதி' என்கிறார் கி.வா.ஜ. அனுபூதியில் 'சுகா என என் கிளை கூடி அழப் போகா வகை மெய்ப்பொருள் பேசியவா' என்றும் பின் கிளி ரூபத்திலே இருந்து கொண்டே பாடிய திருவகுப்பில் 'ஏழையின் இரட்டைவினையாயதொருடல் சிறையிராமல் விடுவித்தருள் நியாயக்காரன்' என்றும் பாடி மகிழ்கிறார்.

அருணகிரியாரின் ஏனைய பாடல்களைக் காட்டிலும் மிகுந்த ஞான வாசம் வீசுபவையாக அமைந்துள்ளன கந்தர் அனுபூதிப் பாடல்கள். கந்தர் அனுபூதி பெற்று கந்தர் அனுபூதி பாடிய அருணகிரியார். 'ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி. அனுபூதி அடைவித்ததொரு பார்வைக்காரன்' என்று நன்றி கூறுகிறார்.

'ஆடும் பரி. வேல். அணிசேவல் எனப் பாடும் பணியே பணியா அருள்வாய்' என்று அனுபூதி வரிகளைப் பாடிய வண்ணம் கிளியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது. இடப்பக்கத்திலுள்ள 'யானை திறை கொண்ட விநாயகர்' நம் கவனத்தை ஈர்க்கிறார். இவரை "யானை திறை கொண்டவனை என்னுள்ளத்தே கொண்டு" என்று சோணாசலமாலைக் காப்புச் செய்யுளும்.

"வயல் அருணை வாரணத்தானைத் திறை கொண்ட யானை" என்று கந்தரந்தாதிச் செய்யுளும் குறிப்பிடுகின்றன. இவருக்கு இப்பெயர் வரக் காரணம் என்ன? அதற்கும் ஒரு சுவையான கதை இருக்கிறது.

முகிலன் என்ற அரசன் அண்ணாமலையை ஆண்டு வந்தான். அடியார்களுக்கு அவன் மிக்க இடையூறுகள் செய்வதைக் கேள்வியுற்ற ஞானி குகை நமசிவாயர் 'சூலம் கரத்திருக்க. சோதி மழுவாளிருக்க ஆலமுண்ட காலத்தருள் இருக்க மேலே எரித்த விழியிருக்க. இந்நாட் சோணேசர் தரித்ததென்ன காரணமோ தாம்.' என்று துதித்துப் பாடினார்.

சிவனுடைய ஆக்ஞையால் அன்றிரவு விநாயகக் கடவுள் யானை உருவுடன் சென்று முகிலனைப் பலவாறாகப் பயப்படுத்தினார். தவறை உணர்ந்த முகிலன். திறையாக[காணிக்கையாக] விநாயகருக்கு அனேக யானைகளைக் கொடுத்தான். இவ்விநாயகருக்கு 'ஆனை திறை கொண்ட விநாயகர்' பெயர் வர இதுவே காரணமாயிற்று.

இவரையும் இங்குள்ள உண்ணாமுலை அம்மையையும் அருணகிரியார் கந்தர் அந்தாதிக் காப்புச் செய்யுட்களில் வைத்துப் பாடியிருப்பதால் கந்தர் அந்தாதியும் இங்கு தான் பாடப் பட்டிருக்க வேண்டும். என்று உறுதியாகிறது. மூலவர் அண்ணாமலையாரின் சந்நிதியை நோக்கிச் செல்கிறோம். இறைவனைக் கண்டு மெய் சிலிர்க்கிறோம். அங்கும் அருணகிரியாரின் வாக்கினாலேயே அவரைத் துதிக்கிறோம்.

'திருமுடி அடி பார்த்திடும் என இருவர்க்கு அடிதலை தெரியாப்படி நிண அருண சிவசுடர் சிகிநாட்டவன்' என்றும். 'மால். அம் பழமறை மொழி பங்கயன். இமையவர் தம் பயமுற விடமுண்டு எருதேறி. அரவொடு. மதி. அம் பொதி சடை மிசை கங்கையுமுற அனல் அங்கையில் மேவ. அரிவையும் ஒரு பங்கிடமுடையவர் தங்கு அருணை' என்றும் பாடி மகிழ்கிறோம்.

மூலஸ்தானத்தை ஒட்டிய ப்ராகாரத்தில் சுற்றி வரும் போது. அறுபத்துமூவரை அடுத்து கௌதம முநிவர் வீற்றிருப்பதைக் காண்கிறோம். 'கவுதம புனிதமுநி தொழ அருணையில் அறம் வளர் கருணை உமை' என்கிறார் அருணகிரியார்.

இறைவனது இடப்பாகத்தைப் பெற விரும்பிய பார்வதி தேவி இறைவன் ஆணைப்படி திருவண்ணாமலைக்குத் தவம் செய்ய வந்தபோது அங்கு கௌதம முநிவர் ஆசிரமத்தில் தான் வந்து தங்கியதாக அருணாசல புராணமும் கூறுகிறது. ['கோதமனார் ஆசிரமந் தன்னிற் குறுகினாள்.']

அருணாசலேஸ்வரர் சந்நிதியை வலம் வரும் பொழுது தவறாமல் கண்ணில் படுபவர் வேணுகோபாலன். 'வேயின் இசை கொண்டு கோ நிரை புரந்து மேயல்புரி செங்கண் மால் மரு' எனும் பழனிப் பதித் திருப்புகழ்ப் பாடல் நினைவுக்கு வருகிறது. ஒரு நாள் சேஷாத்ரி சுவாமிகள் திடீரென்று கிருஷ்ண பகவான் தன் கையிலிருந்த சுதர்சன சக்கரத்தைக் கீழே வைத்துவிட்டு வேணுகானம் செய்கிறார். உள்ளே இருக்கும் சிவம் கூத்தாடுகிறது' என்று கூறினாராம்.

அருணாசலேஸ்வரருக்குப் பின்னால் எழுந்தருளியிருக்கும் வேணுகோபாலனைத்தான் அவ்வாறு குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆதாரம்நாராயண சாஸ்த்ரிகள் எழுதிய மகான் சேஷாத்ரி சுவாமிகள் சரிதம்.) அடுத்ததாக உண்ணாமுலை அம்மையின் திருமுன்பில் சென்று நிற்கிறோம்.

'தமது ஊர் அருணையாதலின். கந்தர் அந்தாதிக் காப்புச் செய்யுளில். அருணகிரியார்.' ஒப்பில் உண்ணாமுலை உமை மைந்தா. சரணம். சரண் உனக்கே' என்று துதிக்கிறார். குமரக் கடவுளுக்கு ரத்னக்கிண்ணியில் தனது முலைப்பாலை எடுத்தூட்டிய உமையவள். இங்கு உண்ணாமுலை அம்மையாக வீற்றிருக்கிறாள்.

இதை 'அருணையில் உறையும் அருந்துணாமுலை அபிநவ வநிதை தரும் குமார' என்று பாடுகிறார். அம்மையையும் அப்பனையும் தரிசித்த பின்னர் வெளிப்ராகாரத்திற்கு வந்து. ஸ்தல விருக்ஷமாகிய மகிழ மரத்தின் கீழ் நின்று ஒன்பது கோபுரங்களையும் ஒரு சேரத் தரிசித்து மகிழ்கிறோம்.

'அறிவு வாய்ந்த பெரியோர்களும் என்னுடன் கூடி உன்னைப் பாட அண்ணாமலையில் கோபுரத்தில் வீற்றிருப்பவனே' என்ற பாடல் வரிகள் மனத்தில் நிழலிடுகின்றன. அப்படியே மூலவர் சந்நிதிக்குப் பின்னால் சென்று அண்ணாந்து பார்க்கும் போது கோயிலின் மேற்குக் கோபுரம் தெரிகிறது.

அதன் பின்னால் கம்பீரமாக எழுந்து நிற்கும் மலைச் சிகரத்தைப் பார்க்கும் பொழுது மெய் சிலிர்க்கிறது. இக்கோயிலில் இருக்கும் மிகப் பெரிய நந்தி மட்டும் சிவன் இருக்கும் திசையைப் பார்க்காமல். கார்த்திகை தீபம் ஏற்றப்படும் மலைச் சிகரத்தைப் பார்த்தபடி முகம் திருப்பியுள்ளது.

இதை 'தீபம் பார்க்கும் நந்தி' என்றழைக்கின்றனர். தம் பாடல்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அருணகிரியார் பாடிய அருணைப் பாடல். 'ஜெய ஜெய அருணாத்திரி. சிவய நம' என்று துவங்குகிறது இப்பாடலில் வரும் முக்கிய வரிகளை. மட்டும் இங்கே காண்போம்.

"ஜெய ஜெய அருணாத்திரித்னின் விழி வைத்து. ஹர ஹர சரணாத்திரி என உருகிஜெய ஜெய குரு பாக்கியம் என மருவிச் சுடர்தாளை. சிவ சிவ சரணாத்திரி ஜெய ஜெயென. சரண் மிசை தொழுதேத்திய சுவை பெருக. திருவடி சிவ வாக்கிய கடலமுதைக் குடியேனோ" என்று உருகுகிறார். பஞ்சாக்ஷரமும். நினைத்தால் முக்தி அளிக்கும் அருணாத்திரி எனும் திருநாமமும் இப்பாடலில் வருவதால். இது தினசரிப்பாரயணத்திற்கு மிகவும் உகந்த பாடல் என்பர் வாரியார் சுவாமிகள் போன்ற பெரியோர் பலர்.

'சரணாத்திரி' என வரும் இடங்களில் சரண அத்திரி. 'திருவடி மலை' என்று பொருள்படும். திருவடி சரணாத்திரி என வரும் இடங்களிலும் திருவடி என்பது சிவனையே குறிக்கும். ( திருவடியே சிவமாவது என்கிற்து திருமந்திரம்) திருப்புகழ்ப் பாக்களைத் தொகுத்து அவ்றறிற்கு உரை எழுதியுள்ள டாக்டர் வ.சு.செங்கல்வராயப்பிள்ளை அவர்கள். 'அருணாசலம். அண்ணமுடியாதவராய்ச் சிவம் நின்ற இடமாதலால் அது அண்ணாமலை சிவமலை' ஆகும் என்று கூறுகிறார்.

அண்ணாமலையே அருணாசலேஸ்வரர் தான் என்ற இக் கருத்திலிருந்து உதித்ததுதான். இன்றைக்கு மிகப் பிரபலமான கிரிவலம். கிரிவலப் பாதையில் முருக பக்தர்கள் கட்டாயம் தரிசிக்க வேண்டியது அடி அண்ணாமலை அல்லது ஆதி அருணாசலேஸ்வரர் கோயில் கிரிவலம் வரும் போது. அருணாசல சிவ என்று ஜபித்த வண்ணமே நடக்க வேண்டும்; நாம் நடக்கும் பாதை எண்ணற்ற சித்தர்கள் நடமாடும் பாதை; அவர்களுக்கு இடையூறு வராத வண்ணம் ஒதுங்கி அமைதியாக நடக்க வேண்டும் என்பதெல்லாம் நாம் ஏற்கனவே. அறிந்திருந்த விஷயங்களே.

ஆனால் அருணகிரியாரோ ஒருபடி மேலே போய். அருணாபுரி வீதிகளிலெல்லாம் முருகன் நிற்கிறான் என்று பாடுகிறார். அருணையின் தெற்கு. வடக்கு வீதிகளிலுள்ள முருகன் கோயில்களுக்கெல்லாம் சென்று பாடியுள்ள அருணகிரியார்.'மேதினியோர் தழைக்கவே அருணாசலத்து வீதியின் மேவி நிற்கும் முருகோனே' என்றும் பாடுகிறார்.

இரையைத் தேடி அலையாமல். இறையைத் தேடும் ஞானத் தபோதனரை வரவேற்றருளும் அருணாசல வீதிகள். இறைவனின் அகமாகத் திகழ்கிறது. ஞானத் தபோதனரை வாவென்று அழைக்குமலை அண்ணாமலை.'அருணகிரியாரின் அழகிய சந்தப் பாக்களின் மூலமாக அண்ணாமலையாரையும் அம்மையையும் மூத்த களிற்றினையும் இளைய களிற்றினையும் பாடித் துதித்து அருள் பெறுவோமாக. சித்ரா மூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமுருக கிருபானந்த வாரியார்

உ.தாமரைச்செல்வி

தமிழ் இலக்கியம் மற்றும் இந்து சமய ஆன்மிகச் சொற்பொழிவில் தனக்கென தனிப் பெயரை ஏற்படுத்திக் கொண்ட மிகச் சிறந்த சொற்பொழிவாளர் கிருபானந்த வாரியார். இவர் சொற்பொழிவைக் கேட்க எப்போதும் ஒரு கூட்டம் இருக்கும். எந்தச் சொற்பொழிவாக இருந்தாலும் அதில் நகைச்சுவை கலந்து, மகிழ்ச்சியைச் சேர்த்து வழங்கும் தனித்திறன் அவருக்குண்டு. சின்னக் குழந்தைகளைக் கூட தன் பேச்சால் கவர்ந்து வியப்படுத்தி வைத்திருந்த மகான் இவர். இந்தியா மட்டுமில்லாது, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளிலும் சிறப்பான சொற்பொழிவுகளை நிகழ்த்தி உலகத் தமிழர்கள் அனைவரது மனத்திலும் தனக்கென நீங்கா இடம் பெற்றிருந்தார் என்றால் அது மிகையில்லை.

**பிறப்பும் கல்வியும்:** வேலூர் மாவட்டம், காட்பாடிக்கு அருகில் பாலாற்றங்கரையில் அமைந்த காங்கேயநல்லூர் எனும் கிராமத்தில் செங்குந்த வீர சைவ மரபில் வந்த மல்லையதாசர் கனகவல்லி தம்பதியருக்கு மொத்தம் பதினோரு குழந்தைகள் பிறந்தன. இவற்றுள் 1906 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதியில் நான்காவது குழந்தையாகப் பிறந்தவர் கிருபானந்த வாரியார். இவருக்கு, இசையாலும், புராணச் சொற்பொழிவாலும் இறைவன் புகழ்பாடி வந்த மல்லையதாசர் முருகப்பெருமானின் பல நாமங்களில் ஒன்றான 'கிருபானந்த வாரி' எனும் பெயரைச் சூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கிருபை' என்றால் கருணை என்றும், 'ஆனந்தம்' என்றால் இன்பம் என்றும், 'வாரி' என்றால் பெருங்கடல் என்றும் பொருள். இவர் பெயருக்கேற்ப கருணையே உருவாக, பிறரை தன் சொற்பொழிவால் மகிழ்ச்சியில் ஆழ்த்தும் பெருங்கடலாகத் திகழ்ந்தார். தமிழ் இலக்கியத்திலும், ஆன்மிகத்திலும் தனித் திறன் பெற்றிருந்த இவருக்கு இவர் தந்தைதான் ஆசான். இவருடைய தந்தையார் இவருக்கு மூன்றாம் வயதிலிருந்து தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். எட்டு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்ற இவர் தேவாரம், திருப்புகழ், திருவருட்பா, கந்தபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலான நூல்களில் பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் அவர் மனப்பாடம் செய்துவிட்டார். கற்றறிந்த புலவருக்கே கடினமாக இருக்கும் அஷ்டநாக பந்தம், மயில், வேல், சிவலிங்கம், ரதம் முதலான பந்தங்கள், சித்திரக் கவிகள் முதலியவைகளை இயற்றினார்.

**சொற்பொழிவாளர்:** இசை மற்றும் புராணச் சொற்பொழிவாற்றி வந்த கிருபானந்த வாரியாரின் தந்தை மல்லையதாசர் ஒருநாள் சொற்பொழிவு ஒன்றுக்குப் போக முடியாத நிலை. தந்தைக்குப் பதிலாக அந்தச் சொற்பொழிவிற்கு வாரியார் சென்றார். சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள், "மல்லையதாசர் சொற்பொழிவிற்கு வருவதாக ஒத்துக் கொண்டு, தான் வராமல் இளம் வயது மகனை அனுப்பி வைத்திருக்கிறாரே" என்று வருத்தப்பட்டனர். வாரியார் அன்று முதன் முதலாக செய்த சொற்பொழிவைக் கேட்டவர்கள் அசந்து போய்விட்டனர். இந்த இளம் வயதில் இவ்வளவு அனுபவமா? என்று அவருடைய சொற்பொழிவைக் கேட்டவர்கள் மகிழ்ந்து போனார்கள். பதினெட்டு வயதில் சொற்பொழிவைத் தொடங்கிய வாரியாரின் பேச்சு, எளிமையான உரைநடையில் இருந்ததால் அதைப் படிப்பறிவே இல்லாதவர்கள் கூட எளிமையாகப் புரிந்து கொண்டார்கள். சிறுபிள்ளைகள் கூட இவருடைய சொற்பொழிவு என்றால் கேட்க விரும்புவார்கள். அவ்வளவு எளிமையாக இருக்கும். சொற்பொழிவில் அதிகமான நகைச்சுவைகள் அர்த்தத்துடன் இருக்கும்.

பொதுவாக இவர் சொற்பொழிவாற்றும் கூட்டங்களில் சிறுபிள்ளைகள் முன் வரிசையில் அமர்ந்திருப்பார்கள். சொற்பொழிவின் இடையிடையே எளிமையான கேள்விகளைக் கேட்பார். அந்தக் கேள்விகளுக்கு முதலில் பதிலளிக்கும் சிறுபிள்ளைக்கு விபூதியும், சிறிய கந்தசஷ்டிக் கவசப் புத்தகம் ஒன்றும் பரிசாக அளிப்பார். இந்தப் பரிசைப் பெற சிறுவர்களுக்கிடையே ஆர்வம் அதிகமிருக்கும். இதற்காக முன் வரிசையில் இடம் பிடிக்கப் போட்டியும் இருக்கும். (தேனி வரசித்தி விநாயகர் பேட்டை நவராத்திரித் திருவிழாவில் முன் வரிசையில் இடம் பிடித்து வாரியார் கேட்ட கேள்விக்குப் பதிலளித்து ஒரே ஒரு முறை சிறிய கந்தசஷ்டி கவசம் புத்தகத்தை வாரியாரிடமிருந்து பரிசாகப் பெற்றிருக்கிறேன்.)

வாரியார் சொற்பொழிவில் கூட்டம் கலைவது என்பது குறைவாகவே இருக்கும். கலையும் அந்தக் குறைவான கூட்டத்தையும் தக்க வைக்கும் கலையையும் அவர் கற்றிருந்தார்.

வாரியார் ஒரு சமயம் ஒரு ஊரில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அவர் மிகுந்த சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்த போது பாதியில் ஒவ்வொருவராக எழுந்து போய்க் கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்த்து வாரியார் சொன்னார் "ராமாயணத்தில் அனுமனை" "சொல்லின் செல்வர்" என்று குறிப்பிடுவார்கள். இந்த ஊரிலும் சொல்லின் செல்வர்கள் பலர் இருப்பதைப் பார்க்கிறேன்." என்றார்.

போய்க் கொண்டிருந்தவர்கள் யாரைச் சொல்லப் போகிறார் என்று தெரிந்து கொள்ள ஆவலுடன் நின்றனர்.

வாரியார் தொடர்ந்து, "நான் நல்ல பல விஷயங்களைச் சொல்லின் அதைக் கேட்காமல் செல்பவரைத் தான் சொல்கிறேன்." என்றார். இடையில் எழுந்து சென்ற அவர்கள் மீண்டும் அவர்கள் இடத்திற்கு வந்தமர்ந்தனர்.

**பெண்களை மதித்தவர்:** வாரியார் சொற்பொழிவில் கூட்டத்திற்குக் குறைவு இருக்காது. இந்தக் கூட்டத்தில் பெண்கள் எண்ணிக்கைக்கும் குறைவு இருக்காது. பெண்களைக் குறைவாகப் பேசுவதை வாரியார் விரும்ப மாட்டார். பெண்களை அடிமையாக நினைக்கும் ஆண்களை எச்சரிக்கும் விதமாக 'மனைவியைக் கோபிக்கும் ஆண்கள் இருக்கக் கூடாது. மனைவி கண்ணீர் சிந்தினால் அந்தக் குடும்பம் தளைக்காது' என்று சொல்வதுண்டு. குழந்தைகளுக்குப் பெற்றெடுத்த தாயின் பெயரை முதலெழுத்தாக (இன்சியலாக) போடவேண்டும் என்று பெண்களை முன்னிறுத்தும் கருத்தை முதன் முதலாகச் சொல்லியவரும் வாரியார்தான்.

பெண்கள் குறித்து உயர்வான எண்ணம் கொண்டிருந்த வாரியார் பத்தொன்பதாம் வயதில் தாய்மாமன் மகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தலட்சுமியை திருமணம் செய்து கொண்டார். தமிழ்நாட்டைப் பொறுத்த வரை கணவன் மனைவியை மதிப்பதே இல்லை. இவற்றையெல்லாம் மனதில் கொண்டு வாரியார் பல சொற்பொழிவுகளில் மனைவியை மதிப்புடன் நடத்த வேண்டும் என்று வலியுறுத்துவார்.

மனைவியிடம் மெத்தென்று பழக வேண்டும். "மலரினும் மெல்லிது காமம்" புஷ்பத்திடம் பழகுவதுபோல் மனைவியிடம் பழக வேண்டும். நான்குபேர் இருக்கும் பொழுது மனைவியைச் சத்தம் போட்டுக் கூப்பிடக் கூடாது. பத்துப் பேருக்கு எதிரே மனைவியைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டால் மனைவி கூசுவாள். மனைவியிடம் சைகையால் பேச வேண்டும். ஒரு மன்னர் பெருமான். இளம் மனைவி. அவன் மனைவியைப் பார்த்தான். அவள் புரிந்து கொண்டாள். தோழி பார்த்தாள். அவள் கண்ணால் கேட்டாளாம். அதற்கு அவள் கடைக்கண்ணாலே பதில் சொன்னாளாம். இதையெல்லாம் கம்பர் சொல்கின்றார்.

"தாழ நின்ற ததைமலர்க் கையினால்
ஆழி மன்னொரு வனுரைத் தான்அது
வீழி யின்கனி வாயொரு மெல்லியல்
தோழி கண்ணில் கடைக்கண்ணில் சொல்லினாள்."

தமிழனுடைய நாகரீகம். ஒரு தடவை சொன்னால் போதுமே. என்று தமிழன் நாகரீகத்தைச் சொல்லி, பெண்ணைச் சொல்லி, மனைவியை மதிக்க வலியுறுத்துவார்.

**முருகப் பெருமான்:** வாரியார் தன் சொற்பொழிவில் அடிக்கடி முருகப்பெருமான் தோற்றம் குறித்து சொல்வார். உலகம் தோன்றிய நாள்தொட்டுத் தாய்மார்கள் குழந்தைகளைப் பெறுவார்கள். அப்பா பெயர் வைப்பார். ஆனால் அப்பா குழந்தை பெற்று அம்மா பெயர் வைக்கின்றாள். இது ஒரு புரட்சி. உலகத்திலே எங்குமே ஆண்கள் மருத்துவ விடுதி கிடையாது. ஓர் ஆண் பிள்ளை குழந்தை பெற்றான் என்ற சரித்திரம் கிடையாது. கைலாயத்தில்தான் சிவபெருமான் நெற்றிக்கண்ணிலிருந்து முருகப் பெருமானை உண்டாக்குகின்றார். "ஆண்பிள்ளை" அவர் ஒருவர்தான். நாமெல்லாம் பெண்பிள்ளைகள். பெண் வயிற்றிலிருந்து பிறந்தால் பெண் பிள்ளைகள்தானே.

ஒரு பெண் என்றால் அடக்கமாக இருக்க வேண்டும். ஆண்கள் என்றால் வீரமாய் இருக்க வேண்டும். மாறியிருக்கக் கூடாது. அதேபோல் கடவுள் என்று சொன்னால் கடவுளுக்குச் சில இலக்கணங்கள் உண்டு. என்ன இலக்கணம்? முதல் இலக்கணம் இறப்பும் பிறப்பும் இல்லாமல் இருக்க வேண்டும். நான் சொல்வதையெல்லாம் எப்பொழுதும் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும். எத்தனையோ காலமாக எத்தனையோ நூல்களைப் படித்து அனுபவத்தில் சொல்கிறேன். பிறந்தான், இறந்தான் என்று சொன்னால் அது கடவுளல்ல. நம்மைப் போல பெரிய ஆத்மா என்றுதான் அர்த்தம். சிவபெருமானுக்கு இறப்பும் பிறப்பும் கிடையாது. சிவனே முருகன்; முருகனே சிவன். ஆகவே முருகனுக்கும் இறப்பும் பிறப்பும் கிடையாது.

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்"
என்கிறது அருணகிரியாரின் கந்தரனுபூதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமச்சந்திரமூர்த்தி அவதாரம் பண்ணின நாளை நாமெல்லாம் கொண்டாடுகிறோம்; ஸ்ரீ ராம நவமி. கண்ணபிரான் அவதாரம் பண்ணின நாளைக் கொண்டாடுகிறோம்; கிருஷ்ண ஜயந்தி. ஹனுமத் ஜெயந்தி,சங்கர ஜயந்தி, மத்வ ஜயந்தி, ஸ்ரீ இராமானுஜ ஜயந்தி, பரசுராம ஜயந்தி, வாமன ஜயந்தி. எந்தக் கோவிலிலாவது சிவ ஜயந்தி, சிவன் பிறந்தநாள் விழா, சுப்ரமணிய சுவாமி ஜயந்தி, முருகன் அவதாரம் பண்ணின நாள் என்று இதுவரையிலும் உண்டா? கிடையாது. பிறப்பு இறப்பு இல்லாதவன் இறைவன். அதுதான் இறைவனுடைய லட்சணம். இந்தப் பாட்டில் வருகிறது:

**"ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்**
**ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி**
**வேதமும் கடந்து நின்ற விமலஞர் குமரன் தன்னை**
**நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்"**

நீ தர வேண்டும். ஆண்டவனே குழந்தையை நீரே தர வேண்டும். 'நீ தர' அது தங்களிடத்திலிருந்து வர வேண்டும். 'நின்னையே நிகர்' என்றார்.

**குழந்தைப் பற்று:** வாரியார் தம்பதிகளுக்கு குழந்தைகள் ஏதுமில்லை என்றாலும் குழந்தைகள் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். தன் கூட்டங்களில் குழந்தைகளுக்கு முன் வரிசையில் இடமளித்த இவர், குழந்தைகளுக்காக "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பதை உணர்ந்து "தாத்தா சொன்ன குட்டிக்கதைகள்" என்ற நூலை அவர் படைத்தார். இதில் குழந்தைகளுக்குத் தேவையான நல்ல கருத்துக்களையும், எதிர்காலத்திற்கேற்ற சிந்தனைகளையும் அளித்திருந்தார்.

**இசைப்பயிற்சி:** இவருக்கு இருபத்தொரு வயதான போது மைசூரில் நடைபெறும் நவராத்திரித் திருவிழாவிற்கு அழைத்துச் சென்ற இவரது தந்தை வீணை சேஷண்ணாவிடமிருந்து ஒரு வீணை வாங்கிக் கொடுத்தார். பின்னர் சென்னையில் நாட்டுப் பிள்ளையார் கோயில் தெருவில் வசிக்கும் ஓர் இசை ஆசிரியரிடம் வீணை கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார். வாரியாருக்கு 23 வயதான போது, சென்னையில் உள்ள யானைக்கவுனி தென்மடம் பிரம்மஸ்ரீ வரதாசாரியாரிடம் ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் வீணைப் பயிற்சி பெற்றார்.

இதன் பிறகு இசை ஞானத்தால் இசைச் சொற்பொழிவு செய்யும் பொழுது திருப்புகழ், தேவாரம், திருவாசகம் முதலான தோத்திரப்பாக்களை இன்னிசையுடன் பாடினார். இசையில் ஈடுபாடுடைய இவர் இசை குறித்தும் பல்வேறு தகவல்களைத் தெரிவித்திருக்கிறார். சிவபெருமானும் முருகனும் இசையில் முதற்கடவுள்கள் என்று ஒரு கருத்தையும் தெரிவித்தார். இசையிலேயே ஆகப் பெரியவர் சிவபெருமான். சிவபெருமான் வீணை வாசிப்பார்.

**"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி"**

வீணா தட்சிணாமூர்த்தி. முதன் முதலிலே புல்லாங்குழல் வாசித்தவர் முருகப் பெருமான். கிருஷ்ணர் இல்லை. கிருஷ்ணர் காலம் ஐயாயிரம் ஆண்டு. முருகப் பெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவர். திருமுருகாற்றுப் படையிலே, "குழலன் கோட்டன் குறும்பல் வியத்தன்" என வருகிறது. குழல் என்றால் புல்லாங்குழல் என்று அர்த்தம். யாழ் செயற்கை வாத்தியம். குழல் இயற்கை வாத்தியம்.

**"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்"**

என்று வள்ளுவர், முதலில் குழலைச் சொல்லிவிட்டுப் பிறகு யாழினைச் சொல்கிறார். எது முக்கியமோ அதை முதலிலே சொல்லுகின்றார். முருகப்பெருமான் குறிஞ்சி நிலக்கடவுள். குறிஞ்சி நிலத்திலே (மலையிலே) வாழுகின்ற தெய்வம், மலையிலே விளைகின்ற மூங்கிலை வெட்டி அதைத் துளையிட்டுப் புல்லாங்குழல் வாசித்தாராம். யார்? சுப்பிரமணியசுவாமி. தன்னை அறியாது வாசித்தாராம். ஆகவே அந்தக் குடும்பமே சங்கீதக் குடும்பம். என்று சிவபெருமான் குடும்பத்தை இசைக் குடும்பமாக்கிய பெருமை வாரியாருக்கு உண்டு.

**சைவ சித்தாந்தம்:** சுவாமிகள் சைவ சித்தாந்தத்திலும் பெரும் புலமை பெற்றவர். அபாிதமான நினைவாற்றலும், நாவன்மையும் பெற்றவர். அவர் கூறும் நுட்பங்களைக் கேட்டு கல்வியில் சிறந்த புலவர்களும் தங்களுக்கு இது தெரியாதே என்றபடி வியந்து பாராட்டினார்கள். "வாரியார் வாக்கு கங்கை நதியின் பிரவாகம் போலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கெடுத்தோடுகிறது; மிக உயர்ந்த முத்துக்கள் அவர் வாக்கிலிருந்து உதிர்கின்றன" என்று அறிஞர்கள் புகழ்ந்தார்கள். இவருடைய சொற்பொழிவைக் கேட்பதற்காக ஆண், பெண், குழந்தைகள் என பலரும் கூடியிருப்பார்கள். சுவாமிகள் திருமுருகாற்றுப்படை, திருவாசகம், தேவாரம், திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், திருவகுப்பு, திருவருட்பா முதலான தோத்திர நூல்களில் இருந்து பல பாடல்களை, பாடல் வரிகளை தம்முடைய சொற்பொழிவுகளில், ஏற்ற இடங்களில் தட்டுத் தடங்கல் இல்லாமல் இசையோடு பாடுவார். கூட்டத்திலிருப்பவர்கள் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

இவருடைய இசை ஞானத்தைப் பாராட்டி, சென்னைத் தமிழிசை மன்றத்தினர் வெள்ளி விழாவின் போது அவருக்கு, "இசைப் பேரறிஞர்" பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். இவருடைய சொற்பொழிவுகளுக்கிடையிடையே குட்டிக் கதைகள் வரும். நகைச்சுவையும் நடைமுறைச் செய்திகளையும் நயம்படச் சொல்வதும் வாரியாருக்குரிய சிறப்பியல்புகளாகும்.

**இசுலாமியர் கருத்து:** ஒருமுறை திருப்பரங்குன்றத்தில் வாரியார் சுவாமிகள் சொற்பொழிவு நிகழ்த்திய போது கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து நின்று, "சுவாமி! இத்திருப்பரங்குன்றத்தை சிக்கந்தர் மலை என்று பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்று இசுலாம் சமயத்தைச் சார்ந்த சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்துத் தங்களின் கருத்து என்ன?' என்று கேட்டார்.

அதற்கு வாரியார், "இதில் என்ன தவறு இருக்கின்றது. அவர்கள் சிக்கந்தர் மலை என்று பெயர் வைத்தால் வைத்துக் கொள்ளட்டுமே." என்று கூற "அனைவரும் அது எவ்வாறு பொருந்தும்? என்ன சுவாமி தாங்களே இவ்வாறு கூறினால் சமுதாயத்தில் குழப்பம் ஏற்பட்டு சமயச் சண்டையாக இது மாறிவிடாதா?" என்று கேட்டனர்.

இதனைக் கேட்ட வாரியார், 'முருகனின் தந்தையார் பெயர் என்ன? சிவபெருமான். முருகனுக்கு வழங்கும் வேறு பெயர் என்ன? கந்தன். இதனைத்தான் சி.கந்தன், சிக்கந்தர் என்று குறிப்பிட்டு சிக்கந்தர் மலை என்று கூற முற்படுகின்றனர். இதில் தவறில்லை' என்று கூற, கூட்டத்தினர் ஆரவாரித்து மகிழ்ந்தனர். யாரும் எதிர்பார்க்காத இந்த விடையானது மக்களைச் சிந்திக்கச் செய்தது. இறைவன் ஒருவரே என்ற எண்ணத்தையும் அவர்களின் உள்ளத்தில் விதைத்தது. இவருடைய நகைச்சுவையான பேச்சுக்கு மாற்று மதத்தவர்களும் ரசிகர்கள் தான். இது போல் மாற்று மதத்தவர் கருத்தாக இருந்தாலும் சிறப்பானதை இவர் ஏற்றுக் கொண்டிருந்தார் என்பதும் உண்மை.

'எனக்கு அஜீரணம் என்பது என்னவென்றே இதுவரை தெரியாது. பசியெடுத்த பின் கையை வாய்க்குள் வைப்பவனும், பசி அடங்குவதற்கு முன் கையை வாயை விட்டு எடுத்துக் கொள்பவனும் நோய் வாய்ப்பட மாட்டான்' என்று ஒரு இசுலாமிய அன்பர் கூறியதை நினைவில் வைத்துக் கொண்டதுடன் அதைத் தொடர்ந்துக் கடைப்பிடித்தும் வந்தார். இதை அடிக்கடி அவருடைய சொற்பொழிவில் குறிப்பிடுவதுமுண்டு.



**தமிழ் பற்றாளர்:** வாரியார் தமிழ்க்கடவுள் முருகனை முதற்கடவுளாகக் கொண்டு தமிழில் சொற்பொழிவுகளை நிகழ்த்தினாலும், சிலர் இவரை வடமொழி ஆதரவாளர் என்று வாதிட்டவர்களும் உண்டு. தமிழை இவர் எவ்வளவு உயரமான இடத்தில் வைத்திருந்தார் என்பதை அவருடைய சொற்பொழிவாலேயே உணர முடிகிறது.

தமிழ் மிகத் தொன்மையானது. மற்ற மொழிகளைப் போலப் பின்னே வந்த மொழி அல்ல. தமிழின் பெருமையைச் சொல்லுகிறேன். கைலாயத்தில் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் திருமணம். முனிவர்கள், சித்தர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். அப்போது வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்து விட்டது. என்ன பண்ணுவது? இமயமலை உச்சியில் எல்லாரும் உட்கார்ந் திருக்கின்றார்கள். சிவபெருமான் அகத்திய முனிவரைக் கூப்பிட்டார். 'அப்பனே! வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்து விட்டது. என்ன பண்ணுவது? இமயமலை உச்சியில் எல்லோரும் உட்கார்ந்திருக்கின்றார்கள். சிவபெருமான் அகத்திய முனிவரைக் கூப்பிட்டார். 'அப்பனே வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்து விட்டது. நீ பொதிகை மலைக்குப் பே' என்றார். அவர் அடியார்.

அவர். 'அடிக்கடி நடக்கின்ற கல்யாணமா சுவாமி! இந்தப் பாவி இந்தக் கல்யாணத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே' என்றார். 'நீ வருத்தப்படாதே; இந்தக் காட்சியை உனக்கு அங்கே தருகின்றேன்' என்றார். அவருக்குத் தமிழ் தெரியாது. இது தமிழ்நாடு. மூன்றே முக்கால் நாழிகையிலே தமிழ் சொல்லிக் கொடுத்தாராம். கற்பூர புத்தி. உடனே தெரிந்து கொள்பவர்களும் உண்டுதானே? ஓரளவு தமிழ் பேசுவதற்கு ஞானம் வேண்டும். அப்புறம் அங்கு மகாவித்வான்கள் எல்லாம் வருவார்களே? அவர்களுடன் பேசத்தான் தமிழ் கற்றுக் கொண்டார். இலக்கணம் படித்தால்தானே எல்லோரும் மதிப்பார்கள். முருகப் பெருமானை வேண்டித் தவம் செய்தார். கந்தக் கடவுள் வந்தார். எனக்குத் தமிழ் சொல்லிக் கொடு என்றார். முருகப்பெருமான்தான் அகத்தியருக்கு இலக்கணம் சொல்லிக் கொடுத்தார். அவர் அகத்தியம் என்று ஓர் இலக்கணம் செய்தார். இது ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. அதில் சில பாடல்கள் மட்டும் கிடைத்திருக்கின்றன. கடல்கோள்களால் அநேக பாடல்கள் அழிந்து விட்டன. அந்த அகத்தியம் சிதைந்த பிறகு அவருடைய 12 சீடர்களில் ஒருவரான தொல்காப்பியர்தான் தமிழ் இலக்கணம் செய்தார். அதுதான் தொல்காப்பியம்.

நம்முடைய வாழ்க்கை நான்கு வகையாகும். கிடத்தல், இருத்தல், நிற்றல், நடத்தல். படுத்திருபோம்; எழுந்து உட்காருவோம்; நிற்போம்; நடப்போம். இந்த நான்கைத் தவிர வேறு கிடையாது. யுகங்கள் நான்கு. கிருதயுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம். நிலம் நான்கு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். பெண்மைக்கு நான்கு. அச்சம், மடம், பயிர்ப்பு, நாணம். ஆண்களுக்கு புருஷார்த்தங்கள் நான்கு. அறம், பொருள், இன்பம், வீடு. எழுத்து நான்கு. உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆயுத எழுத்து. சொல் நான்கு பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல். பாட்டு நான்கு. வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா. எல்லா மொழிகளிலுமே நான்கில்தான் அடக்கம். சுழி, பிறை, நேர்க்கோடு, குறுக்குக்கோடு. இரண்டு நேர்கோடு போட்டால் 'ப' இப்படி போட்டால் 'பி' . இப்படிப் போட்டல் 'லி'. இப்படிப் போட்டால் 'ட'. அறிவுக்குச் சிந்தனை. 'அ' கரத்தில் இந்த நான்கும் வைத்தார்கள்.

**"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவனும்" - தொல்காப்பியம்**

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு" - திருக்குறள்.**

**"அகர உயிர்போல் இறை" -திருவருட்பயன்.**

**"அகரமு மாகி, அதிபனு மாகி" - அருணகிரியார்.**

சில நுட்பங்களையெல்லாம் தொல்காப்பியத்திலே மிக அற்புதமாகச் சொல்லியிருக்கின்றார். நான்கு நிலங்களை வகுத்தார். அந்த நிலங்களுக்குத் தெய்வத்தைச் சொன்னார். நிலத்தை ஒப்புக் கொண்டால் தெய்வத்தை ஒப்புக் கொள்ள வேண்டும்.. இங்கு உயர்ந்த நிலை எது? மலை. 'தணிகை மால் வரையே' என்பது கந்தபுராணம். வரை என்றால் மலை. வரை என்றால் கோடு. எதுவரை நீங்கள் போனீர்? ஆகவே, மலைதான் உயரமாய் இருக்கும். அந்த உயர்ந்த இடத்தில் முருகப்பெருமானை வைத்துச் சொல்கின்றார் தொல்காப்பியர்.

'சேயோன் மேய மைவரை உலகு' தமிழைச் சொல்ல வந்தவர், தமிழின் நிலத்தைச் சொல்ல வந்தவர், அந்த நிலத்துத் தெய்வத்தைச் சொல்லுகின்றார்.

இப்படி தமிழின் பெருமையை உயர்த்திக் காட்டியவர் வாரியார். ஒருமுறை ஒரு சொற்பொழிவில் ஒரு பாடலைப் பாடி இந்தப் பாடல் முழுவதும் ஒரு மாத்திரையிலேயே எழுதியிருக்கிறார் அருணகிரிநாதர் என்று சொன்னார்.

அந்தப் பாடலில் 'அம்மை' என்று ஒரு சொல் வந்தது. சொற்பொழிவு முடிந்து திரும்புகையில்' சுவாமி! 'அம்மை'யில் வரும் 'ஐ' இரண்டு மாத்திரையாயிற்றே!' என்று ஒருவர் கேட்டார். அதற்கு உடனே வாரியார், 'ஆம், 'ஐ' க்கு 2 மாத்திரைதான், ஆனால் இந்த 'ஐ'க்கு பெயர் ஐகாரக் குறுக்கம், எனவே ஒரு எழுத்து தான்' என்று விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்படி தமிழை கரைத்துக் குடித்த வாரியாரைக் கண்ணதாசன் ஒருமுறை சந்தித்த போது,

'தாமரைக் கண்ணால் பெண்கள் நோக்கினர்' என்று கம்பர் கூறுகிறார். 'தாமரையோ செவ்வண்ணம் உடையது. மது அருந்தியவருக்கும், அளவுக்கு அதிக சினம் கொண்டவருக்கும் அல்லவா சிவந்த கண்கள் இருக்கும். அது எவ்வாறு பெண்களுக்குப் பொருந்து' என்று கண்ணதாசன் கேட்டார்,

அதை 'தாம் அரைக் கண்ணால்" என்று பிரித்துப் பொருள் கொள்ளலாம் அல்லவா?' என்று விளக்கம் கூறக் கவியரசர் அசந்து போனார்.

வேலூரில் உரை நிகழ்த்த வாரியார் வந்து இருந்தார். அப்போது திராவிடர் கழகத்தினர் 'கிருபானந்த 'லாரி' வருகிறது' என்று கிண்டல் அடித்துத் தட்டி வைத்திருந்தார்கள். தற்செயலாக வேறு ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்த தந்தை பெரியார்,அவர் தங்கியிருந்த வீட்டுச் சன்னல் வழியே வாரியாரின் விரிவுரையைக் கேட்க நேர்ந்தது. 'வாரியாரும் நம்மைப்போல தமிழ் வளர்க்கும் முயற்சியிலும், சமுதாயத்தை மேம்படுத்தவுமே பாடுபடுகிறார். அவரைக் கேலி செய்வதா? உடனே, தட்டியெல்லாம் அகற்றுங்கள்!' என்று தன் தொண்டர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறார் பெரியார்.

வாரியார் ஆன்மிகச் சொற்பொழிவாற்றினாலும் சரி இலக்கியச் சொற்பொழிவாற்றினாலும் சரி தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் உயர்வுக்கும் முன்னின்றவர் என்பதை இன்றும் யாரும் மறுக்க முடியாது. இவரிடம் திருமணம் மற்றும் விழாக்களுக்கு அழைப்பிதழ் கொடுத்தவுடனே அவர்களுக்கு வெண்பா மூலம் உடனுக்குடன் வாழ்த்துப்பாடல் அளிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் தமிழ் மேல் பற்று கொண்டிருந்தார் என்பதை விட தமிழ் இவர் மூலம் பலரிடம் பற்றிக் கொண்டது என்பதே பொருத்தமானது.

**எழுத்தாளர்:** வாரியார் சுவாமிகள் இலக்கியம் மற்றும் ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் மட்டுமில்லாமல் எழுதுவதிலும் சிறப்பு பெற்று விளங்கினார். இவரது திருப்புகழ் விரிவுரைகளைக் கேட்டு மகிழ்ந்த சிலர் திருப்புகழ் விரிவுரையை நூலாக எழுதி உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். வாரியார் 1936ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழாவுக்காக வடலூர் சென்றிருந்தார். அங்கு சத்திய ஞான சபையில் அமர்ந்து 'திருப்புகழ் அமிர்தம்' என்ற மாதப் பத்திரிகையை வெளியிடக் கருதினார். அதற்காக 'கைத்தல நிறைகனி' என்று தொடங்கும் திருப்புகழ் பாவுக்கு உரை எழுதினார். அது முதல் 'திருப்புகழ் அமிர்தம்' எனும் மாத இதழைத் தொடங்கினார். இந்த இதழை சுமார் முப்பத்தேழு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். இந்த இதழில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திருப்புகழ் பாடலுக்கு விளக்கவுரையும், கந்தர் அலங்கார உரையும், கற்பு நெறிக்கதையும், வேறு பல கட்டுரைகளும் எழுதினார். இந்தப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள் பின்னர் தொகுக்கப்பட்டு தனித்தனி நூல்களாக வெளியிடப்பட்டன. திருப்புகழ் அமிர்தம் என்ற இதழ் பலருடைய வாழ்க்கையைத் திருத்தியிருக்கிறது என்று வாரியார் சுவாமிகள் எழுதியுள்ள அவரது வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். இதற்கான சில நிகழ்ச்சிகளையும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்த பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படியாக 500க்கும் அதிகமான ஆன்மிகக் கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். இவையனைத்தும் இலக்கியத்தரம் வாய்ந்தவை மட்டுமன்றி, தெளிவான நடையில் அமைந்தவையும் ஆகும். இவர் 150க்கும் அதிகமான நூல்களையும் எழுதியுள்ளார். இவற்றுள் சிவனருட்செல்வர், கந்தவேள் கருணை, இராமகாவியம், மகாபாரதம் போன்றவை சிறப்பு பெற்றவை. இவரது சொற்பொழிவுகளில் 83 குறுந்தகடுகளாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதும் இங்கு குறிப்பிடத் தகுந்தது.

**தமிழ்த் திரையுலக ஈடுபாடு:** வாரியார் எழுத்துத் துறையில் மட்டுமில்லாது தமிழ்த் திரைப்படத்துறையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன்னைச் சேர்த்துக் கொண்டார். தியாகராஜ பாகவதர் நடித்த 'சிவகவி' எனும் படத்திற்கு வசனங்கள் எழுதியதுடன் தேவர் பிலிம்ஸ் தயாரிப்பாளர் சாண்டோ சின்னப்பா தேவர் வேண்டுகோளுக்கேற்ப 'துணைவன்', 'திருவருள்', 'தெய்வம்', போன்ற சில தமிழ்த் திரைப்படங்களிலும் நடித்தார். திரைப்பட நடிகராகவும், தமிழ்நாட்டின் முதல்வராகவும் இருந்த எம்.ஜி.ஆருக்குப் பொன்மனச் செம்மல் என்ற பட்டத்தை அளித்தார். இந்தப் பட்டம் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் அனைவராலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட பட்டம் என்பதும் இங்கு குறிப்பிடக்கூடியது.

**இறை வழிபாடும் இறை சேவையும்:** 20ஆம் நூற்றாண்டின் இரண்டாவது அருணகிரிநாதராக விளங்கிய பாம்பன் சுவாமிகள் சண்முகநாதனை மும்முறை நேரில் தரிசித்த மகான் என்று போற்றப்படுபவர். இவரை சென்னையில் ஒரு கீற்றுக் கொட்டகையில் சந்தித்து ஆசி பெற்ற வாரியார் ஒருமுறை விரிவுரை செய்வதற்காக திருநாரையூர் சென்றிருந்த போது, விடியற்காலை பாம்பன் சுவாமிகள் தம்முடைய கனவில் தோன்றி சடக்கரமந்திரம் உபதேசம் செய்ததாக இவரின் வாழ்க்கை வரலாற்று நூலில் எழுதியுள்ளார்.

வாரியார் சுவாமிகள் வாழ்நாள் முழுவதும் கோயில், பூசை, சொற்பொழிவு என்று ஆன்மிக வழியில் சரியாகச் சென்று கொண்டிருந்தார். ஒருநாள் கூட முருகனுக்குப் பூசை செய்யாமல் இருந்ததில்லை. இவரின் மூச்சு கூட முருகா! முருகா!! என்றுதான் இருந்தது. தனி மனித ஒழுக்கத்தையும், பல நல்ல உபதேசங்களையும் வழங்கிய வாரியார் அதன்படி வாழ்ந்தும் காட்டினார். கார்த்திகை மாதம் சோமவாரம் (திங்கட்கிழமை) தொடங்கி ஐந்து சோமவாரம் உபவாசம் (உண்ணா நோன்பு) இருந்ததுடன் இவ்விரதத்தை தனக்குத் தெரிந்தவர்கள் அனைவரையும் இருக்கச் செய்தார்.

உலகில் எங்கெங்கு முருகன் கோவில் இருக்கிறதோ, அங்கெல்லாம் சென்று முருகனை வழிபட்டவர் வாரியார். ஆனாலும் வயலூர் முருகன் மீது அவருக்கு தனி ஈடுபாடு உண்டு. வாரியார் தனது சொற்பொழிவை தொடங்கும் போதெல்லாம் 'வயலூர் எம்பெருமான்ஞ்' என்று கூறிதான் சொற்பொழிவை தொடங்குவது வழக்கம். இது போல் இவரிடம் நினைவுக் குறிப்புக் (ஆட்டோகிராப்) கையெழுத்து வேண்டுவோரிடம், 'இரை தேடுவதோடு இறையையும் தேடு' என்ற வாக்கியத்தையே பெரும்பான்மையாக எழுதிக் கையெழுத்து இடுவார் .

ஒரு முறை பழநி ஈசான சிவாச்சாரியார் என்பவர் லியோ டால்ஸ்டாய் எழுதிய 'நாம் என்ன செய்யவேண்டும்?' என்ற நூலை வாரியாரிடம் தந்தாராம். அந்த நூலைப் படித்த வாரியாருக்கு பொன், பொருள் உலகம் என்ற பற்று பறந்து போயிற்று. தான் அணிந்திருந்த தங்க நகைகளை காங்கேய நல்லூர் முருகனுக்குக் காணிக்கை ஆக்கினார். திருச்சியிலிருந்து கரூர் செல்லும் வழியில் திருப்பராய்த்துறை எனுமிடத்தில் பிரம்மச்சாரி ராமசாமி என்பவர் தொடங்கிய இராமகிருஷ்ண குடில் எனும் அமைப்புக்கு இவர் பல ஆண்டுகள் நன்கொடை வசூல் செய்து கொடுத்து வந்தார். அனாதைக் குழந்தைகளுக்கு அடைக்கலம் அளித்து வரும் இந்த அமைப்பு இன்று வளர்ந்திருப்பதற்குக் காரணம் வாரியார் சுவாமிகள்தான். ஏழை எளிய குடும்பத்து மாணவர்களின் கல்விச் செலவுக்காக இவர் பல நன்கொடைகளைக் கொடுத்திருக்கிறார். இவர் பிறந்த காங்கேயநல்லூரில் பல கல்வி நிறுவனங்களைத் தொடங்கியிருக்கிறார். இன்றும் இவருடைய பெயரால் மேல்நிலைப் பள்ளிகள் பெண்களுக்கும், ஆண்களுக்கும் தனித்தனியாக நிறுவியிருப்பதைக் காணலாம்.

வாரியார் சுவாமிகள் ஏராளமான கோவில்களுக்கு திருப்பணி செய்து கொடுத்த பெருமையும் இவருக்கு உண்டு. இவர் திருப்பணி செய்ய உதவி புரிந்த கோயில்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காது. வயலூர் முருகன் கோயில், மோகனூர் அருணகிரி அறச்சாலை, வடலூர், காஞ்சி ஏகாரம்பரநாதர் ஆலயச் சுற்றுச்சுவர், சமயபுரம் கோயில், வள்ளிமலை சரவணப் பொய்கை ராஜகோபுரம் போன்ற பல கோயில்கள் இவரது திருப்பணிகளைப் பெற்றிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இறைவனை ஏன் வணங்க வேண்டும்? இறைவனை வணங்காவிடில் கடவுளுக்கு என்ன நஷ்டம்? மனித வாழ்வில் இறையுணர்ச்சி இல்லாமல் வாழ முடியாதா? என்ற கேள்விகளை நாத்திகப் பெருமக்கள் கேட்கிறார்கள். விலங்குகளும் உண்கின்றன. உறங்குகின்றன; உலாவுகின்றன; இனம் பெருக்குகின்றன; மனிதர்களாகிய நாமும் உண்கிறோம். உறங்குகிறோம். உலாவுகிறோம்; இனம் பெருக்குகிறோம். இவை விலங்குகட்கும், மனிதர்கட்கும் ஒன்றாகவே அமைந்திருக்கின்றன. விலங்குகளினின்றும் மனிதன் உயர்ந்து விளங்குவது தெய்வ உணர்ச்சி ஒன்றினாலேயாகும்' என்று இறைவழிபாட்டிற்கான காரணத்தைச் சொன்னார் வாரியார்.

**மறைவு:** உள்நாட்டில் மட்டுமின்றி, அமெரிக்கா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, லண்டன், சுவிட்சர்லாந்து என பல நாடுகளில் சொற்பொழிவுகளை நிகழ்த்தி இருக்கிறார். இதற்காகப் பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றிருக்கிறார். இவற்றில் கலைமாமணி, திருப்புகழ்ஜோதி, பிரவசன சாம்ராட், இசைப்பேரரசர், அருள்மொழி அரசு போன்றவைகளைக் குறிப்பிடலாம். இப்படி பல பட்டங்களையும் விருதுகளையும் வாங்கிச் சேர்த்த வாரியார் சுவாமிகள் 1993 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் லண்டன் நகருக்குச் சொற்பொழிவாற்றச் சென்றார். அங்கு திடீரென ஏற்பட்ட உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்றுக் கொண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி லண்டனிலிருந்து திரும்பினார். 7 ஆம் தேதி அதிகாலை மும்பை வந்து சேர்ந்தார். அங்கிருந்து காலை 6 மணிக்கு சென்னைக்கு விமானத்தில் கிளம்பினார். சென்னை வருவதற்கு முன்பாகவே அவர் உயிர் இறைவனிடம் சென்று சேர்ந்துவிட்டிருந்தது. நவம்பர் 8 ஆம் தேதியில் அவர் சமாதி நிலையடைந்தார்.

'ஆன்மீக தமிழ்ப்பழம் அனைத்து நாட்டு தமிழர்களையும் கவலைக்குள்ளாக்கி இதோ தருவில் இருந்து உதிர்ந்து விட்டது. அந்த சிவந்த மேனியில் சினம் அரும்பி பார்த்ததில்லை. எதனையும் சிரித்த முகத்துடன் எதிர்கொள்ளும் இனிய இயல்புக்குச் சொந்தக்காரரான வாரியார், ஆன்மீகத் தமிழ்ப் பழமாக விளங்கி, என்றும் அழியாத புகழை நிலைநாட்டி விட்டு, இயற்கை தாயின் மடியில் விழுந்துவிட்டார்' என்றார் கருணாநிதி. வாரியார் இறந்த போது, தமிழ்ப் பெருங்கடல் என்று நாத்திகரான கலைஞர் கருணாநிதியே போற்றினார்.

ஜெயலலிதா வெளியிட்ட அனுதாப செய்தியில், 'முருகப்பெருமானின் பெருமைகளைப் பரப்புவதையே தனது வாழ்நாள் லட்சியமாகக் கொண்டு நம்மிடையே வாழ்ந்து வந்த வாரியார் சுவாமிகள் அவர்களின் மறைவு ஆன்மீகத் துறைக்கு மட்டுமின்றி தமிழ் மொழிக்கும், தமிழ் இசைக்கும் ஏற்பட்டுள்ள ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்' என்று குறிப்பிட்டார். இவர்களைப் போல் அரசியல் தலைவர்கள், அனைத்து சமயப் பெரியோர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பலரும் இவருடைய இழப்பு ஈடு செய்ய முடியாதது என்று குறிப்பிட்டார்கள்.

**சிறப்புகள்:** கிருபானந்த வாரியாரின் சொந்த ஊரான வேலூரை அடுத்துள்ள காங்கேயநல்லூருக்கு அவரது உடல் எடுத்துச் செல்லப்பட்டது. காங்கேய நல்லூரில் உள்ள முருகன் கோவில் எதிரே 'சரவண பொய்கை குளம்' என்ற மண்டபம் ஒன்றை கிருபானந்த வாரியார் ஏற்கனவே உருவாக்கி இருந்தார். அந்த மண்டபத்தில் உயரமான மேடை அமைத்து அதில் உட்கார்ந்த நிலையில் வாரியார் உடல் வைக்கப்பட்டது. தற்போது இது 'திருமுருக கிருபானந்த வாரியார் திருக்கோயில்' ஆகியிருக்கிறது.

காங்கேயநல்லூரில் அவர் வாழ்ந்த வீடு இன்று நினைவில்லமாக்கப்பட்டு இருக்கிறது. இந்திய அரசு இவருடைய உருவம் பொறித்த தபால்தலையை 2006 ஆம் ஆண்டில் வெளியிட்டு சிறப்பு செய்திருக்கிறது.

சிங்கபுரி நடராஜர் சன்னதி பிரகாரத்தில் வடகிழக்கே திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமி திருமேனி நிருவப்பட்டுள்ளது.

**64வது நாயன்மார்:** நாயன்மார்கள், தினம் மூன்று வேளை கோயிலுக்குப் போவார்கள். ஆனால், சிவபெருமானைப் பார்த்துப் பொன்னைக் கொடு; பொருளைக் கொடு, எனக்கு செல்வத்தைக் கொடு, மக்களைக் கொடு, வழக்கில் வெற்றியடைய வேண்டும், பதவி உயர்வு வேண்டும் என்று ஒருநாளும் கேட்க மாட்டார்கள். நாயன்மார்கள் ஆண்டவனிடத்திலே இதுவரை ஒன்றையும் கேட்டதில்லை. அதனால் அவர்கள் பெரியவர்கள். குலத்தினால் பெரியவர்கள் அல்லர். சலவைத் தொழிலாளி ஒருவர் அதிலே இருக்கிறார். திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தீண்டாத குலத்திலே பிறந்தவர்கள் இருக்கின்றார்கள். அப்படி என்னென்னமோ குலத்தவர்கள் எல்லாம் அங்கே தொண்டராயிருக்கிறார்கள். அவர்கள் செல்வத்தினாலே பெரியவர்கள் அல்லர். கண்ணப்ப நாயனாருக்கு எழுத்து வாசனையே கிடையாது. ஆனால், அவர்கள் எதிலே பெரியவர்கள்? வேண்டாமையிலே பெரியவர்கள். நாமெல்லாம் இந்த உலகத்திலே பெரியவர்கள் ஆக வேண்டுமென்றால் யாரிடமும், கடவுளிடம் கூட ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கக் கூடாது. ஆண்டவனே! எனக்கு ஒன்று கொடு என்று கேட்காதீர்கள்.


"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்"

என்பார் திருவள்ளுவர். அதனாலே நாயன்மார்கள் பெரியவர்கள்.

இந்த நாயன்மார்களை அறிமுகம் செய்து வைத்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். இவர் பாடிய நாயன்மார்கள் 60 பேர். 63 பேர் அல்லர். அநேகம் பேர் 63 என்பார்கள். அவர்களெல்லாம் தெளிவாகப் படிக்காதவர்கள். 50, 60, 70 என்றுதானே தருவோம். 63 என்று யார் தருவார்கள்?

சுவாமிமலைக்குப் படிகள் 60. ஆண்டுகள் 60. மனிதனுக்கு விழா செய்வதும் 60 ஆம் ஆண்டு. ஒரு நாளைக்கு நாழிகை 60. ஒரு மணிக்கு நிமிடம் 60. ஒரு நிமிடத்துக்கு வினாடி 60. அப்படியானால் கணக்கு 60 என்றுதான் வரும். 63 வராது. சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்கப் பாடிய நாயன்மார்கள் 60 பேர். அப்புறம் எப்படி 63 பேர் ஆனது? சுந்தரமூர்த்தி நாயனார் மறைந்து 100 வருடங்கள் கழித்து நம்பியாண்டார் நம்பி அடிகள் எனும் ஆதிசைவ இளைஞர் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய 60 நாயன்மார்களை சற்றி விரிவாகப் பாடுகிறார். அப்போது அவர் 60 நாயன்மார்களைப் பாடி, அந்த 60 நாயன்மார்களைப் பாடிக் கொடுத்த சுந்தரர், அவரைப் பெற்றுக் கொடுத்த அவரது தந்தை, தாயைச் சேர்த்து 63 ஆக மாற்றினார்.

வாரியார் 60 நாயன்மார்கள் 63 நாயன்மார்கள் ஆன வரலாற்றைச் சொன்னார்கள். வாரியாரைப் பற்றி முழுமையாக அறிந்தவர்கள் சொல்கிறார்கள் நாயன்மார்கள் 60 என்றும், 63 என்றும் சொல்வது தவறு. மொத்தம் 64 நாயன்மார்கள். 64 வது நாயன்மார் வேறு யாருமல்ல. திருமுருக கிருபானந்த வாரியார்தான். ஆன்மிகப் பற்றுடைய பலரும் சொல்கிறார்கள். ஆயகலைகள் 64 என்று சொல்வதுண்டு. அதுபோல் நாயன்மார்கள் 64 என்று சொல்வதில் தவறேதுமில்லை. அறுபத்து நான்காம் நாயன்மார் திருமுருக கிருபானந்த வாரியார் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. வாரியாரும் நாயன்மார்களைப் போல் இறைவனிடம் எதையும் வேண்டாத பெரியாராகவேதான் வாழ்ந்தார். மனித வாழ்க்கையில் பிற்காலத்திலும் நினைத்துப் போற்றக்கூடியவர்களாக வாழ்பவர்கள் சிலரே. அந்த மிகச் சிலருள் வாரியார் சுவாமிகளும் ஒருவர் என்பதை நாமும் நினைவில் கொள்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்பரங்குன்ற வரலாறு

மதுரை ரயில் நிலையத்தின் தென்மேற்குப் பகுதியில் சுமார் மூன்று மைல் தொலைவில் உள்ளது இந்த ஆலயம். சுப்பிரமணியர் தான் தங்குவதற்கு புனித இடமாக தேர்ந்து எடுத்துக் கொண்ட ஆறு இடங்களில் இதுவும் ஒன்று. இந்த ஆலயத்தின் மகத்துவம் என்ன என்றால் இங்குதான் அவர் இந்திரனின் மகளான தெய்வயானையை மணந்து கொண்டார். பராசர முனிவரின் ஆறு புதல்வர்களும் ஒரு சாபத்தின் விளைவாக சரவணா பொய்கை நதியில் மீனாகப் பிறந்து இருந்தார்கள். அவர்கள் சாப விமோசனம் பெற வேண்டும் என்றால் சுப்பிரமணியரிடம் வேண்டிக் கொள்ளுமாறு கூறப்பட்டு இருந்தார்கள். அவருடைய தரிசனம் கிடைத்ததும் அவர்கள் சாப விமோசனம் பெறுவார்கள் என்றும் அதனால் அவர் அசுரனான சூரபத்மனை அழித்தப் பிறகு திருப்பரங்குன்றத்துக்கு வருவார் எனத் தெரிந்ததும் அவருடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்து அவர்கள் அங்கு காத்துக் கிடந்தார்கள்.

தம்முடைய கடமையான சூரபத்ம சம்ஹாரத்தை திருச்செந்தூரில் முடித்துக் கொண்டப் பிறகு அவனால் பல்வேறு கொடுமைகளை அனுபவித்துக் கொண்டு இருந்த தேவர்களை விடுவித்து விட்டு அவர்களுடன் சேர்ந்து சுப்பிரமணியர் திருப்பரங்குன்றத்துக்கு வந்து கொண்டு இருந்தார். அவர் அங்கு வந்து சேர்ந்ததும் பராசர முனிவரின் மைந்தர்கள் அவரை அன்புடன் வரவேற்றார்கள். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அவர் அங்கு தங்க முடிவு செய்ததுடன் விஸ்வகர்மாவை அழைத்து தனக்கும் தன்னுடன் வந்துள்ள தேவர்களுக்கும் தங்குவதற்குத் தேவையான அற்புதமான இடத்தை கட்டுமாறு ஆணையிட்டார். அது மட்டும் அல்ல அந்த இடத்தை சுற்றி நல்ல சாலைகளையும் அமைக்குமாறுக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களை சூறை ஆடிய சூரபத்மனை சுப்பிரமணியர் அழித்ததின் நன்றிக் கடனாக அவருக்கு தனது மகளான தேவசேனாவை திருமணஞ் செய்து கொடுக்க இந்திரன் ஆசைப்பட்டார். அங்கு கூடி இருந்த பிரும்மா மற்றும் விஷ்ணு போன்றவர்களிடம் அதை அவர் தெரிவிக்க அவர்களும் அதை பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். அது குறித்து அவர்கள் சுப்ரமணியரிடம் கூறியவுடன் அவரும் அதை ஏற்றுக் கொண்டார். ஆகவே இந்திரன் தனது மனைவி இந்திரியாணி மற்றும் மகள் தேவசேனாவை அழைத்து வருமாறு தூதுவர் ஒருவரை அனுப்பினார். திருப்பரங்குன்றத்தில் திருமணம் நடப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்த திருமணத்திற்கு சிவனும் பார்வதியும் வந்து சுப்ரமணியருக்கு வாழ்த்து கூறி ஆசிர்வதித்தார்கள். அது முதல் அந்த இடம் புகழ்பெற்ற தலமாயிற்று.




தேவயானி இடதுபுறத்தில் அமர்ந்து இருக்க நாரத முனி வலது புறத்தில் அமர்ந்த காட்சியில் சுப்பிரமணியர்

அதற்கு முன்னர் சுப்பிரமணியர் கண்டவீரப்பு என்ற இடத்தில் தங்கி இருந்தபோது, மகாவிஷ்ணுவின் இரண்டு புதல்விகளான அமிருதவல்லியும் சுந்தரவல்லியும் தங்களுக்கு சுப்பிரமணியருடன் திருமணம் நடக்க வேண்டும் என ஆசைப்பட்டு சரவணா பொய்கைக்கு வந்து தவம் இருந்தார்கள். அவர்களது தவத்தை மெச்சிய சுப்பிரமணியர் அமிருதவல்லியிடம் "நீ இந்திரனின் மகளாகப் பிறந்தவுடன் தக்க சமயத்தில் வந்து உன்னை மணப்பேன்' என்றார். அது போலவே இளையவளான சுந்தரவல்லிக்கும் காட்சி தந்தார். அவளும் சிவ முனி என்ற முனிவரின் மகளாகப் பிறந்து நம்பி என்ற வேடனால் வளர்க்கப்பட்டு சுப்ரமணியரை மணந்து கொண்டார்.



சுந்தரவல்லியும், அமிருதவல்லியும் தமது தந்தை விஷ்ணுவிடம் முருகனை மணக்க அருள் புரிய வேண்டும் என வேண்டுகிறார்கள்

அமிருதவல்லி ஒரு சிறிய பெண்ணாக வடிவெடுத்து மேரு மலையில் இருந்த இந்திரனிடம் சென்று 'நான் மகா விஷ்ணுவின் மகள் ஆவேன். ஆகவே என்னை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை அவர் உங்களிடம் தந்து உள்ளார் என்பதினால் இங்கு வந்தேன் என்றாள். அதனால் மகிழ்ச்சி அடைந்த இந்திரனும் யானை ஐராவதரை வரவழைத்து அந்தக் குழந்தையைப் பாதுகாக்குமாறுக் கூறினார். அந்த யானையும் அதைக் கேட்டு மனம் மகிழ்ந்து அவளை எடுத்து வளர்த்தார். அதனால்தான் யானையினால் வளர்க்கப்பட்ட அவள் தெய்வ யானை என்றப பெயரைப் பெற்றாள். அவளுக்கு திருமண வயது ஆயிற்று. சூரபத்மனை அழித்துவிட்டு சுப்பிரமணியர் திரும்பியதும் அவருடன் அவளுக்கும் திருமணம் ஆயிற்று.



பின்புறத்தில் மலை இருக்க திருப்பரங்குன்றம் ஆலயக் குளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI PONGAL









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI PONGAL









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI PONGAL









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## THAI PONGAL













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## AATTUKAAL PONGAL


















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!

முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென்
செவியில்

எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு)
அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ASHFORDS GOYAL
## Partnership LLB

**Chartered Certified Accountants**
**Registered Auditors**
**114/116 Goodmayes Road, Ilford,**
**Essex 1G3 9UZ**

Auditors to the temple


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

**தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி**
**அல்லர் அறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே எல்லை**
**மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம் என்னும் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்தான் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க (5)

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க (10)

ஈசனடி போற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி (15)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான் (20)

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன் (25)

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள் (30)

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே (35)

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே (40)

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே (45)



கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய (55)

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெள;வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று


போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ தேவராய சுவாமிகள் அருளிய

# 'கந்தர் சஷ்டி கவசம்'

**குறள் வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

**காப்பு**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

1

நூல்:

சஷ்ட்டியை நோக்க சரவணபவனார்
சிஷ்ட்டருக் குதவும்செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வாகனனார்

கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திர முதலா எண்திசை போற்
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக

2

நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரஹணபவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டா யுதம் பாச அங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன்வருக



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

3

ஐயும் கிலியும் அடைவுடன்சௌவும்
உய்யொளி சௌவும் உயிர் ஐயும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலை பெற் றென்முன் நித்தம் ஒளிரும்

சண்முகம் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம் சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந்தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து தவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோதனென்று

உன்திரு வடியை உருதி யென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என் உயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

4

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கையிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனை வேல் காக்க

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனக வேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அறையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க

பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக்கலங்கிட
இரிசிக் காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டினும் எதிர்படும் அண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோடனே வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக்கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோட
படியினில் முட்ட பாசக்க யிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோட

6

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோட

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர ங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்

எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனே
இடும்பனை ஏற்ற இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத் தாக வேலா யுதனார் (185)

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன் (190)

வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன் கடன் (195)

பெற்றவள்குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீது உன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய (200)

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகி
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச் (205)

சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர் (210)

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை (215)

வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி (220)

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்

8

வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும் (225)

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி (230)

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓரரசே (235)

மயில்நட மிடுவோய் மலர் அடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## CHANDI HOMAM







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## CHANDI HOMAM













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிய

# சண்முக கவசம்

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருள (து) ஆகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகள் அறு தெய்வமாகி
எண்திசை போற்ற நின்ற என்அருள் ஈசன் ஆன
திண்திறள் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க (1)

ஆதியாம் கயிலைச் செல்வன்அணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசுஇலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்தி கேயன் நாசியை நயந்து காக்க (2)

இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க, வாயை
முருகவேள் காக்க, நாப்பல் முழுதும்நல் குமரன் காக்க
துரிசஅறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க (3)

ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை ஈராறு ஆயுதன் காக்க, எந்தன்
ஏசிலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக்கோன் காக்க (4)

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறம்கையை அயிலோன் காக்க, பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால்மருகன்காக்க, பின்முதுகைச் சேய் காக்க (5)

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்த்தியோன் காக்க, வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க, குய்ய
நாணினை அங்கி கௌரிநந்தனன் காக்க, பீஜ
ஆணியை கந்தன்காக்க, அறுமுகன் குதத்தைக் காக்க (6)

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அம்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண நேச ஆசான் திமிரு முன் தொடையைக் காக்க (7)

ஏரகத் தேவன்என்தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க (8)

ஐயுறு மலையன்பாதத்து அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாத பரன், அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும், ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க (9)

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூத ப்ரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க, கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க (10)

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணிவில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடி பரசு ஈட்டி யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சின்,
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க (11)

ஔவியமுளர் ஊன் உண்போர் அசடர் பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவா ராயின், சராசரம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கைஅயில் காக்க காக்க (12)

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோணாய் குரங்கு கோல மார்ச்சாலம் சம்பு
நடையுடை எதனா லேனும் நான் இடர்ப் பட்டி டாமல்
சடுதியில் வடிவேல் காக்க சானவிமுளை வேல் காக்க (13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஙகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க, வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடை ஓந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால், எற் குஓர் ஊறுஇலாது ஐவேல் காக்க (14)

சலத்தில் உய்வன்மீன் ஏறு, தண்டுடைத் திருக்கை, மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால், நான் வருத்தம் கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க, பாவகி கூர்வேல் காக்க (15)

ஞமலியம் பரியன்கைவேல், நவக்கிரகக்கோள் காக்க
சுமவிழி நோய்கள், தந்த சூலை, ஆக்கிராண ரோகம்,
திமிர்கழல் வாதம், சோகை, சிரமடி கர்ண ரோகம்
எமை அணுகாமலே பன்னிருபுயன் சயவேல் காக்க (16)

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி, கண்ட மாலை
குமுறு விப்புருதி, குன்மம், குடல்வலி, ஈழை காசம்,
நிவீரொணாது இருத்தும்வெட்டை, நீர்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க (17)

இணக்கம் இல்லாத பித்த எரிவு, மாசுரங்கள், கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம், மூலவெண்முளை, தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்த
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும்சக்தி வடிவேல் காக்க (18)

தவனமா ரோகம், வாதம், சயித்தியம், அரோசகம், மெய்
சுவறவே செய்யும் மூலச்சூடு, இளைப்பு, உடற்று விக்கல்,
அவதிசெய் பேதி சீழ்நோய், அண்டவாதங்கள், சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க (19)

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு, சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழுநோய் கக்கல்
இமைக்குமுன் உறு வலிப்போடு எழுபுடைப்பகந்த ராதி
இமைப்பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க (20)

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர், வரினும் என்னை
ஒல்லையில் தார காரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க (21)

மண்ணிலும் மரத்தின்மீது மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும்சாரி செய் ஊர்தி மீதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறு எந்த இடத்தும் என்னை
நண்ணிவந்து அருள் ஆர்சஷ்டி நாதன் வேல் காக்க காக்க (22)

யகரமேபோல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவ மோலி திகழ் ஐவேல் கீழ்மேல் காக்க (23)

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க, அங்கி
விஞ்சிடு திசையில் ஞான வீரன் வேல் காக்க, தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோன் இகலுடைக் கரவேல் காக்க (24)

லகரமே போல் காளிங்கன்நல்லுடல் நெளிய நின்று
தகர மர்த்தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்,
நிகழ்எனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க, மேற்கில்
இகல் அயில்காக்க, வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க (25)

வடதிசை தன்னில் ஈசன்மகன்அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கும்ஞான்றும் நவில்கையில் நிமிர்கையில், கீழ்க்
கிடக்கையில் தூங்குஞான்றும் கிரிதுளைத்துள வேல்காக்க (26)

இழந்துபோகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்,
வழங்கும் நல் ஊண் உண்போதும் மால்விளையாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழுங்குணத்தோடே காக்க, திடமுடன் மயிலும் காக்க (27)

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலை, முன்எல் ஓம் சிவ சாமி காக்க
தெளிநடு பிற்பகல் கால், சிவகுரு நாதன் காக்க (28)

இறகுடைக்கோழித் தோகைக்கு இறைமுன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப்பகைத்தே, திகழ்பின் இராவில் காக்க
நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க (29)

இனம்எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவண பவனார் காக்க
நனி அநுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவோடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்கவந்தே (30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Mahishasura Mardini

1

Ayi giri nandini, nandhitha medhini,
Viswa vinodhini nandanuthe,
Girivara vindhya sirodhi nivasini,
Vishnu Vilasini Jishnu nuthe,
Bhagawathi hey sithi kanda kudumbini,
Bhoori kudumbini bhoori kruthe,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Suravara varshini, durdara darshini,
Durmukhamarshani, harsha rathe,
Tribhuvana poshini, Sankara thoshini,
Kilbisisha moshini, ghosha rathe,
Danuja niroshini, Dithisutha roshini,
Durmatha soshini, Sindhu suthe,
Jaya Jaya Hey Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Ayi Jagadambha Madambha , Kadambha,

2

Vana priya vasini, Hasarathe,
Shikhari siromani, thunga Himalaya,
Srunga nijalaya, madhyagathe,
Madhu Madure, Mdhukaitabha banjini,
Kaitabha banjini, rasa rathe,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Ayi satha kanda, vikanditha runda,
Vithunditha shunda, Gajathipathe,
Ripu Gaja ganda , Vidhaarana chanda,
Paraakrama shunda, mrugathipathe,
Nija bhuja danda nipaathitha khanda,
Vipaathitha munda, bhatathipathe,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Ayi rana durmathaShathru vadhothitha,
Durdhara nirjjara, shakthi bruthe,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

Chathura vicharadureena maha shiva,
Duthatkrutha pramadhipathe,
Duritha Dureeha, dhurasaya durmathi,
Dhanava dhutha kruithaanthamathe,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Ayi saranagatha vairi vadhuvara,
Veera varaa bhaya dhayakare,
Tribhuvana masthaka soola virodhi,
Sirodhi krithamala shoolakare,
Dimidmi thaamara dundubinadha mahaa
Mukharikruthatigmakare,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Ayi nija huum kruthimathra niraakrutha,
Dhoomra vilochana Dhoomra sathe,
Samara vishoshitha sonitha bheeja,
Samudhbhava sonitha bheejalathe,
Shiva shiva shumbha nishumbhamaha hava
Tarpitha bhootha pisacha rathe,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Dhanu ranushanga rana kshana sanga,
Parisphuradanga natath katake,
Kanaka pishanga brushathka nishanga,
Rasadbhata shrunga hatavatuke,
Kritha chaturanga bala kshithirangakadath,
Bahuranga ratadhpatuke,
Jaya Jaya He Mahishasura Mardini,
Ramya Kapardini Shaila Suthe

Jaya Jaya hey japya jayejaya shabda,
Parastuti tatpara vishvanute,
Bhana Bhanabhinjimi bhingrutha noopura,
Sinjitha mohitha bhootha pathe,
Nadintha nataartha nadi nada nayaka,
Naditha natya sugaanarathe,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Ayi sumana sumana,
Sumana sumanohara kanthiyuthe,
Sritha rajani rajani rajani,
Rajaneekaravakthra vruthe,

4

Sunayana vibhramarabhrama,
Bhramarabrahmaradhipadhe,
Jaya Jaya He Mahishasura Mardini,
Ramya Kapardini Shaila Suthe

Sahitha maha hava mallama hallika,
Mallitharallaka mallarathe,
Virachithavallika pallika mallika billika ,
Bhillika varga Vruthe,
Sithakruthapulli samulla sitharuna,
Thallaja pallava sallalithe,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Avirala ganda kalatha mada medura,
Matha matanga rajapathe,
Tribhuvana bhooshana bhootha kalanidhi,
Roopa payonidhi raja suthe,
Ayi suda thijjana lalasa manasa,
Mohana manmatha raja suthe,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Kamala dalaamala komala kanthi,
Kala kalithaamala bala lathe,
Sakala vilasa Kala nilayakrama,
Keli chalathkala hamsa kule,
Alikula sankula kuvalaya mandala,
Mauli miladh bhakulalikule,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Kara murali rava veejitha koojitha,
Lajjitha kokila manjumathe,
Militha pulinda manohara kunchitha,
Ranchitha shaila nikunjakathe,
Nija guna bhootha maha sabari gana,
Sathguna sambrutha kelithale,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Kati thata peetha dukoola vichithra,
Mayuka thiraskrutha Chandra ruche,
Pranatha suraasura mouli mani sphura ,
Damsula sannka Chandra ruche,
Jitha kanakachala maulipadorjitha,
Nirbhara kunjara kumbhakuche,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Vijitha sahasra karaika sahasrakaraika,
Sarakaraika nuthe,
Krutha sutha tharaka sangaratharaka,
Sangaratharaka soonu suthe,
Suratha Samadhi samana Samadhi,
Samadhi Samadhi sujatharathe,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Padakamalam karuna nilaye varivasyathi,
yo anudhinam sa shive,
Ayi kamale kamala nilaye kamala nilaya
Sa katham na bhaveth,
Thava padameva param ithi
Anusheelayatho mama kim na shive,
Jaya Jaya He Mahishasura Mardini
Ramya Kapardini Shaila Suthe

Kanakala sathkala sindhu jalairanu
Sinjinuthe guna ranga bhuvam,
Bhajathi sa kim na Shachi kucha kumbha

6

This saint belonged to the family called 'Eyarkudi' which produced Commanders-in-Chief to Chola kings. He was a great devotee of Lord Siva. Lord Siva brings about a reconciliation between the two Nayanars in a wonderful and mysterious manner. KalikamaNayanar also belonged to the same age as SundaramurthiNayanar and he heard the news that SundaramurthiNayanar had sent Lord Siva Himself as his messenger to settle a domestic quarrel. It terribly annoyed Kalikamanar. Sundarar came to know about Kalikamar and realized his fault and entreated the Lord to appease Kalikamar's anger. Lord caused Kalikamar to suffer from colic and made Sundarar to attempt to cure him.ButKalikamar gave up his life by cutting his bowel open, preferring so ,rather than getting cured by Sundarar. Sundarar was not let to know this but after persuation gets to see Nayanar's body .In desperation, Sundarar also attempts to cut his throat. By the grace of Lord Siva, Kalikamar at once came back to life. They embraced each other. Kalikamar spent the rest of his life in the service of the Lord and His devotees and finally reached His Abode

ThirumulaNayanar was a Saiva Siddha and was called Thirumular because he entered into the mortal frame of Mulan. Lord Siva wanted Thirumular to write a book on Saiva Philosophy, containing the essence of all Siva Agamas, in Tamil. Thirumular understood His wish and returned to Thiruvavaduthurai. He worshipped the Lord and sat under the near-by peepul tree in deep meditation.He was in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Samadhi for three thousand years. But, every year, he would come down from Samadhi and compose a stanza: thus, in three thousand years he wrote three thousand stanzas. This book is called Thirumandiram.

Dandiadigal was born blind. But, he always repeated the Panchaksharam and visualised the Lord with his inner eyes. DandiAdigal wanted to extend the area of a tank in a temple in Thiruvarur, in the Chola kingdom. Though he was blind, he had the determination and complete faith in the Lord. He not only finishes his mission but also gains eyesight with his great devotion to God

This saint was great devotee of Lord Siva and was doing Maahesvara Puja by regularly feeding bhaktas at any cost. He had spent all his wealth in such feeding. He used to gamble and use the money for feeding Siva Bhaktas.The name MurkhaNayanar meant wicked Nayanar since he used to resort to violence if someone refused to gamble. All the money was for lord's bhakta

SomasiraNayanar lived in Thiruvambur. He was a great devotee of the Lord and served His Bhaktas, irrespective of their caste. He did Yagas and worshipped the Lord, without expecting any reward. He went to Thiruvarur and lived with SundaramurthiNayanar to whom he had totally surrendered himself. Thus he got His grace. He was a true Jnani and Karma Yogi

SakkiyaNayanar had an appearance of Buddhist, But he adored Lord Siva. He believed that, whatever be the external appearance or conduct of one, if he had intense devotion to the Lord, he would attain Liberation. One day, as he was sitting in an open Siva temple and meditating on the Lingam, completely absorbed in the divine bliss, he self-forgetfully threw a stone at the Lingam. On the next day, he realizes that his action was lord's intent and meant that Lord would accept anything offered by His Bhakta in devotion. It became his daily worship. One day, the Lord appeared before him, blessed him and took him to Kailasa

SirappuliNayanar was very religious who lived in Thiruvakur in the Chola kingdom. He was an ardent devotee of Lord Siva and His Bhaktas. A special spiritual practice of this Nayanar seems to have been the ceaseless repetition of the Panchakshara Mantra (Om NamahSivaya) with and sincerity, throughout the day and night. He attained the ultimate bliss with sincere devotion to Lord Siva

SiruthondaNayanar had an original name Paranjyoti. He realised that devotion to the Feet of Lord Siva was the best means of obtaining Liberation from Samsara and so, he clung to Them. He would not eat



SOMAASI MAARAR



CHAAKKIYAR



CHIRAPPULI NAAYANAAR



CHIRUTHONDAR



KAZHARITRARIVAAR
(CHERAMAAN PERUMAAL)



GANANAATHAR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


KOOTRUVA NAAYANAAR


PUGAZCHOZHAR


NARASINGA MUNAIYARAIYAR


ADHIPATHTHAR


KALIKKAMBAR


KALIYAR NAAYANAAR

without first feeding a Siva Bhakta. He regarded himself as the lowly servant of the Lord and His Bhaktas: hence the name Siruthondar (small servant)

CheramanPerumalNayanar was born in Kodunkolur.The name Cheraman was the common name for all Cheras. Perumal was the title adopted by him after his coronation. By his many acts of devotion and piety, he earned the grace of Lord Siva. The Lord sent to him a renowned musician and devotee, Banapatirar, with a palm leaf on which was the Lord's own song in praise of Cheraman! In Kailasa, Cheraman became the chief of Lord Siva's Ganas (servants).

Gananathar was a pious Brahmin of Sirkali. He was a great Bhakta of Lord Siva. People admired his virtue and devotion and came to him for advice. He invariably gave them some work connected with the temple, according to their ability like cleaning the temple, making garlands, working in the gardens, burn lamps in the temples, etc. Thus he infused devotion in them for the Lord and transformed them into Siva Bhaktas. He was greatly devoted to GnanaSambandar. All these earned Siva's grace for him.

This saint was a chieftain of Kalandai. He used to repeat the Panchakshara Mantra, and serve the Bhaktas. Nayanar captured many places in the Chola and Pandyan kingdoms and also wanted the three thousand Brahmins of Tillai to crown him king and they refused to do so. The Lord knew that Nayanar's intent was only to spiritualise the coronation. When the Brahmins feared political repercussions, the Lord Himself fulfilled the devotee's wish

PugalCholaNayanar a great devotee of Lord Siva and his Bhaktas was a Chola king living in Uraiyur. Noticing that his troops killed a Siva Bhakta in a war, he placed the head of Siva Bhakta on a golden plate in his hand and entered fire, thus entering the Lord's Abode

This saint a petty chieftain was highly devoted to Lord Siva, lived in ThiruMunaipadi. On one day when feeding Siva Bhaktas in Thiruvathirai, he fed and paid great respect to a naked Bhakta who came with sacred ashes and also gave him 200 gold coins. Thus taught by example to other Bhaktas that outlook is not important for a Nayanar, and all devotees are manifestations of Lord Siva

This saint was a fisherman born in Nulaipadi near Nagapattinam. It was his practice to let go one fish from his catch daily, as an offering unto the Lord. The Lord wanted to reveal his greatness to the world. Once it so happened that for many consecutive days he could catch only one fish. He let it go, in the name of Lord Siva, and went without food. One day he caught a golden fish, again only one for the day.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

And, he stuck to his vow and let it go, in the name of Lord Siva. The Lord appeared before him and blessed this illiterate, fisherman saint

This saint lived in Pennagadam in the Chola kingdom. One day while doing service in the temple his former servant came to his house in the guise of a Bhakta. Nayanar, as usual, welcomed him, washed his feet and worshipped him. But, his wife who recognised the former servant did not join. Nayanar understood her lack of devotion, continued his worship of the Bhakta. Practising this form of Yoga Sadhana, he attained the ultimate bliss

KaliaNayanar was an oil monger of Thiruvotriyur. His adoration of the Lord, to whom he was highly devoted, took the form of lighting the temple lamps daily. He was rich but, in order to reveal his greatness the Lord made him poor. His family people also refused help. He began to work as a labourer to earn the oil. Even this became impossible. At last, in despair, he wanted to cut his own throat and use the blood instead of oil, to burn the lamps. In that attempt, Lord Siva caught hold of his hand and blessed him. What greatness, and what intensity of devotion is portrayed in this simple life! Self-forgetfulness is the key-note in devotion. Remembering God always, the devotee is so thoroughly absorbed in Him, that nothing but God and His worship matters to him

SattiNayanar was born in Varinjiyur in the Chola kingdom. He was a sincere devotee of Lord Siva and honoured His devotees. He could not tolerate anyone speaking ill of them. Lord Siva understood his pure inner Bhav and showered His grace on him

AiyadigalKadavarkonNayanar was a Pallava king who ruled over Kanchi and a siva devotee. He renounced his kingdom and undertook pilgrimage of different shrines. He set an example for all to lead the path of virtue and Godlines. He served his subjects by percept and his own personal example

KanampullaNayanar was a wealthy man in Irukkuvelur. He was a great Siva Bhakta. He wanted to utilise all his wealth in His service only. So, with unswerving devotion he would light the lamps in Siva shrines and sing His praise. He attained the ultimate state of bliss with his sincere devotion to Lord Siva

This ardent devotee of Lord Siva was a native of Thirukadavur. He was a scholar in Tamil. He used to go to the three Tamil kings, and get money by singing Tamil Kovais (anthology). He earned a lot and built temples. Thus he spread the cause of Saivism. He also served Siva Bhaktas and earned His grace. A true devotee of the Lord lives for His


SATHTHI NAAYANAAR


LYADIGAL KAADAVARKON


KANAMPULLAR


KAARIYAAR NAAYANAAR


NEDUMAARA NAAYANAAR


MANGAYARKARASIYAAR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



VAAYILAAR

sake only. All that he has is offered to the Lord as the devotee's worship

Nayanar Koon Pandyan, the Pandyan king, was ruling in Madura. He was called Koon Pandyan because of his hunchback. When Sambandar came to Madura and was staying outside the city, KulacchiraiNayanar invited him into the city. When Sambandar sang a song, the king's hunchback was cured, as also his burning pain. He came back to Saivism. Since then he was known as Ninra Seer NadumaraNayanar. The Pandyan king then defeated the northern kings at Thirunelvely and spread Saivism there. Mangayarkarasiyar helped her husband a lot in this. Both the husband and the wife worshipped Sambandar with great faith and devotion. Their devotion to the Guru and love of Saivism earned His grace for them. Thus himself and his wife attained the state of eternal bliss



MUNAIYADUVAAR

VayilarNayanar belonged to Mylapore. He was a Siva Bhakta. He constructed temples mentally and did Manasic (mental) worship. He built the temple of non-forgetfulness, lit the shining lamp of Self-illumination, bathed the Lord in the waters of immortal Ananda (bliss) and worshipped Him with the elixir of supreme love. Thus he obtained salvation. His life is an example for the hymn of Thirunavukkarasar in which he says "For the Lord of thiruvaiyaru there is no temple other than the minds of the servants who serve Him; love Him; prostrate in front of Him



KAZHARCHINGAR

MunaiyaduvarNayanar was a great Bhakta of Lord Siva and His devotees. He was always the hope of the desperate, the weak and the vanquished.He used to feed Siva bhaktas and used to earn money by working as a professional fighter and hence he was called 'Munaiyaduvar'. Lord Siva was highly pleased with his devotion and blessed him



CHERUTTUNAI NAAYANAAR

KazharsingaNayanar was enlightened Master who attained the ultimate throught Saivism philosophy. KazharsingaNayanar was an ardent devotee of the Lord Siva. He was a Pallava monarch, belonging to the family of Kadavar. SeruthunaiNayanar was his wife who also achieved the state of eternal bliss with devotion to Lord Shiva



IDANGAZHI NAAYANAAR

This saint was the king of Velas in Kodumbalur. He was a devotee of Lord Siva. He had made arrangements with all the Siva temples to perform worship according to the Siva Agamas. He displayed his zeal for the spread of Saivism. Thus he earned Lord Siva's grace, too and reached the eternal bliss



TIRUNEELAKANDA YAAZHPAANAR



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ThiruNeelakantaYazhpanar lived in ThiruErukattapuliyur in Chola Kingdom. He was an expert in playing the Yazh (similar to Veena, a musical instrument). Hence the name Yazhpanar. It was his habit to visit many sacred shrines and sing His glories on the Yazh. He attained the ultimate with this music

This saint was a pious Adi Saiva of Seruviliputhur. He was an ardent Siva Bhakta. He was a Pujari (priest) in the temple. His daily duty was to bathe the image, uttering the Mantras and do the Puja, according to the Siva Agamas. In spite of a famine swept over the land and people leaving the place, he loved his god and his duty and did not want to leave and continued doing his puja in spite of being emaciated. One day, in spite of his weakness, he fetched water for the Lord's Bath (Abhishekam) and, when he was pouring the water on the Lingam, the water-pot slipped from his hand and fell on Him. Nayanar forgot himself in sheer exhaustion and fainted away. The Lord appeared in his dream and said that He would leave one coin in the temple every day till the famine was over so that he could procure the necessary food with that money and appease his hunger. Nayanar woke up and found that the dream was true! The Lord thus enabled His Bhakta to get over the famine. He continued his daily Puja in the temple and finally reached the Lord's Abode

Sadayanar, who lived in Thirunavalur was married to Isaijnaniyar, his dutiful wife. Both were devoted to the Lord and as such, due to their virtuous deeds in their past life, a divine child was born to them. He was none other than Sundaramurthi Nayanar

Pusalar was a Brahmin of ThiruNinravur in ThondaiMandalam. He excelled in the mental worship of the Lord. He strongly desired to build a temple for Lord Siva, but being poor, mentally gathered the necessary materials for the purpose and laid the foundation stone on an auspicious day. He raised the temple and had even fixed an auspicious day for the installation of the deity in it. Pulasar installed the Lord in his mental temple and continued to worship Him till he attained His Abode

This saint was the native of Kampili. He was highly devoted to the Lord Siva and His Bhaktas. His mind was well fixed on the lotus feet of the Lord. His lips always uttered the Panchakshara (Siva mantra) Mantra. His hands were ever busy in the service of His Bhaktas. These three virtues gained the Lord's grace for him


PUGAZHTHUNAI NAAYANAAR


CHADAYA NAAYANAAR


ISAIJAANIYAAR


POOSALAAR NAAYANAAR


NESA NAAYANAAR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# LONDON SRI MURUGAN TEMPLE

## REMEMBER











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# SRI MURUGANS ENTERPRISES LTD



177, Church Road, Manor Park, LONDON, E126HB
Tel : 0208-553-5233

**Off License, All Groceries, Fresh Vegetables, Frozen Food, Oyster, Western Union, Pay Point & Free Cash Machine**



# JAYANTHINI

**FREE NURSERY SCHOOL**

Dr. Subramaniyam Road, Chunnakam,
Jaffna, SRI LANKA.
Tel : 0094-21-3001417


## WEDDING & PARTY HALL

K.K.S. Road, Chunnakam, Jaffna,
SRI LANKA.
Tel : 0094-77-8965977



Director,
Mr. I.Sivapathasuntharam
(Green)
Mr. S.Mayurathan
(Son of Green)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மஹா கும்பாபிஷேகம்

## (விளக்க உரை)

**திரு. ஆர். அன்பானந்தர்**
அறங்காவலர், இலண்டன் ஸ்ரீ முருகன் திருக்கோவில்

ஆலயமொன்றிலே திருவுருவத்தை ஸ்தாபித்து அங்கு தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதே மாகும்பாபிஷேகம் என்னும் பெருவிழாவாகும். பிதிஷ்டை எனவும் இதனைக் கூறுர். பிரதிஷ்டை என்பது நன்கு நிலைநிறுத்தல் எனப் பொருள்படும்.

பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளைச் சிவாசாரியர் மந்திரம், பாவனை, கிரியைகளின் மூலமாக அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து வழிபட்டு அங்கு ஸ்தாபிக்கப்பட்ட திருவுருவத்திலே சேர்த்து நிலை பெற்றிருந்து ஆன்மகோடிகளுக்கு அருள்புரியுமாறு செய்தலே மஹாகும்பாபிஷேகத்தின் நோக்கமாகும்.

இக்கிரியையின் தத்துவார்ந்த உட்பொருளை சிறிது சிந்திக்கலாம். இறைவன் பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ளவன் என்பதும், கட்புலனாகாதவனாயும், உணர்வுகளுக்கு எட்டாதவனாயும், அதே நேரம் அடியார்க்கு எளியவனாகவும் இருப்பவன் என்பதும சாஸ்திர நூற்றெளிவு.

பாலிலே தோன்றாது மறைந்திருக்கும் நெய்யைப் படிப் படியான கிரியை முறைகளினால் தோற்றுவித்து கையிலே பெறுவது போல, (பாலைக் காய்ச்சி தயிராக்கி அதனைக் கடைந்து வெண்ணெய் எடுத்து உருக்கி நெய்யைப் பெறுதல் படிமுறையான கிரியைகள்.) பிரபஞ்ச மூலங்களான பஞ்ச பூதங்களின் மார்க்கமாக படிப்படியாக பரம் பொருளை அண்மி வரச் செய்பவை கும்பாபிஷேகக் கிரியைகள்.

நிலம், நீர், காற்று, ஆகாயம் என்பன் பஞ்பூதங்கள். கலப்பினால் பஞ்சபூதங்களின் வடிவாக இருப்பவன், பரம்பொருள், பஞ்சபூதங்கள் வடிவமாக மட்டுமின்றி சூரியன், சந்திரன், யஜமானன் ஆகியனவும் சேர்ந்த அட்டமூர்த்திகளின் வடிவமாகவும் இறைவன் இருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாய வடிவில் எங்கும் பரந்துள்ள ஆண்டவனை உணருதல் மிகவும் சிரமம். எமது புலன்களால் சிறிது உணரும் வகையில் வாயுவாக அவனை அறிதல் முதற்படி, வாயும் கண்ணால் தரிசிக்க முடிவதில்லை. அதற்கடுத்த படியில் அக்கினியாக ஆண்டவனைக் காண்கின்றோம். மூன்றாவது படி நீராக இறைவனை அறிதல். அற்கும் அடுத்த படி எந்நேரமும், எல்லாவகைகளிலும் எம்மோடு தொடர்புற்றதும், நிலைபெற்றிருப்பதும், நாம் நிலைபெற்றிருக்க வகை செய்வதுமாகிய மண் என்னும் ஐந்தாவது நிலை. இந்நிலையில் இறைவனைக் கண்டு வழிபடுதலே எம்மானோர்க்கு இசைந்த எளிய நிலை. இவ வகையில் மண்ணோடு தொடர்பு கொண்டிருக்கும் கருங்கல்லும், செம்பு முதலிய உலோகங்களும் இறையருளை ஆகர்ஷித்து எமக்கு வழங்கும் பெருஞ்சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன.

ப்ரம்மண ஆகாசாத் ஸம்பூத:
ஆகாசத் வாயு:
வாயோரக்நி:
அக்நேராப:
அத்ப்ய:ப்ருதிவீ:

என்று இந்தப் பஞ்ச பூதப் படிமுறையை எடுத்துக் கூறுகிறது தைத்திரிய உபநிஷத்து. இவ்வைந்தும் தழுவியதாகக் கும்பாபிஷேகக் கிரியைகள் அமைவது கண்கூடு. யாகசாலையில் ஆகாய வெளியும், காற்றும் உள்ளன. அங்கு அக்கினி வளர்க்கப்படுகிறது. கும்பங்களில் நீர் நிறைக்கப்பெற்று அதிலேயே இறையருட் சக்தி ஆவாகனமாகிப் பின் மூர்த்தியில் அபிஷேகமாகிறது. கும்பம் உருவாக்கப்பட்ட உலோகம் பிருதுவி அம்சம் மண்ணோடு தொடர்புப்பட்டது. (மண் குடமே பயன்படுத்தப்படுவதும் உண்டு). இறுதியில் அபிஷேகமாகி ஸ்தாபிஷகப்பெறும் ஸ்தானமும் பிருதுவியுடன் தொடர்பான கருங்கல் விக்கிரகம் அல்லது உலோக விக்கிரகமாகும்.

இத்தகைய பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரிதம் என நால்வகைப்படுமென்று அமைத்து அங்கு புதிதாக ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது அநாவர்த்தனப் பிரதிஷ்டை. முன்பிருந்த ஆலயம் முற்றாக அழிந்து விட்டால், அவ்விடத்தில் மறுபடி ஓர் ஆலயத்தை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்தல் ஆவர்த்தனப் பிரதிஷ்டை. பூஜை வழிபாடுகள் நடைபெறும் கோயிலில் திருத்த வேலைகளுக்காக பாலஸ்தாபனம் செய்து திருத்த வேலைகள் முடிந்தபின் மறுபடி மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்துவ புனராவர்த்தனப் பிரத்திஷ்டை. ஆலயத்தினுள் மரணம் நிகழுதல், கள்வர் முதலிய ஆசாரக் குறைவுடையோர் நுழைதல் போன்ற காரணங்களால் நிகழும் பிரதிஷ்டை அந்தரிதப் பிரதிஷ்டை.

இந் நான்கு வகைளில் அந்தரிதப் பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்த நிர்ணயம் கிடையாது. ஏனைய மூன்று வகைப் பிரதிஷ்டைக்கும் சுபமுகூர்த்தம் நிர்ணயித்தல் அவசியம். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்தும் சுத்தமாக இருக்கும்படியும், லக்கினம் ஸ்திரராசியாக இருககும் படியும், கிரகங்கள் அநுகூலமாகன இடங்களில் இருக்குமாறும் நன்கு கவனித்து முகூர்த்தம் நிர்ணயிக்கப்படும்.

மேலும் மஹா கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கும் சிவாசாரியாருக்கும், ஆலய தர்மகர்த்தாவுக்கும் அநுகூலமானதாகவும் இம் முகூர்த்தைக் கணித்துக்கொள்வர்.

கும்பாபிஷேக விழாவானது பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்வதால் இதனைத் தரிசித்தல் பெரும் பேறாகும். யாக தரிசனம் செய்தலும், ஓமப்புகையைச் சுவாசித்தலும், மந்திர ஒலிகளைக் கேட்டலும் உடல் நலத்தையும், புண்யத்தையும் ஒருங்கே தருவன என்று அறிஞர் கூறுவர்.

கும்பாபிஷேகமானது பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறையாது நடைபெற வேண்டும் என்பது விதி. தெய்வ சாந்நித்தியத்தை வலுப்படுத்தி, அருட்சக்தியை அதிகரிக்கச் செய்ய இது அவசியம். கருங்கல்லினால் செய்யப்பட்ட பீடத்திலே கருங்கல் விக்கிரகத்தை வைத்து எட்டுப் பொருட்களின் கலவையான அஷ்டபந்தனம் என்ற மருந்தினால் அவை இணைக்கப்படுகின்றன.

பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் ஆகிய அஷ்ட மூர்த்திகளின் அம்சமான குங்கிலியம், கொம்பரக்கு, சக்கான்கல், தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமைவெண்ணெய், சாதிலிங்கம் என்னும் எட்டுப் பொருட்களையும் உரிய அளவில் சேர்த்து இடித்துத் தயாரிக்கப்படுவதே அஷ்டபந்தனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணமான ஒரு மஹா கும்பாபிஷேகமானது அறுபத்து நான்கு வகையான அங்கக் கிரியைகளைக் கொண்டது எனச் சில ஆகமங்கள் கூற, வேறு சில ஆகமங்கள் அதனைச் சுருக்கி ஐம்பத்தைந்து கிரியைகளையுடையது எனவும் விதிக்கின்றன.

இவற்றுள் முகூர்த்த நிர்ணயம், ஆசார்ய வரணம், சல்ய உத்தாரணம், திரவியபாகம், கர்ப்ப நியாசம், கணேச பூஜை, அநுஜ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்கின ஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்து சாந்தி, நவக்கிரக மகம், மிருத்சங்கிரகணம், அங்குராப்பணம், ரட்ஷாபந்தனம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயோன்மீலனம், கிராமப் பிரதட்சணம், சயனாரோபணம், அக்கினி காரியம், நாமகரணம், பிம்பசுத்தி, பிம்பப்பிரதட்ஷணம், கர்ப்பக்கிரக பதவிந்நியாசம், ரத்நநியாசம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், ஷடத்துவநியாசம், சாங்கோபாங்கப் பிரத்தியங்க நியாசம், ஸ்பர்சாகுதி, யாத்ராதானம், கும்ப உத்தபானம், சகளீகரணம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், ரட்சாவிசர்ஜனம், அவபிருதம், ஆசார்யோற்சவம் எனபன முக்கியமான கிரியைகளாகும்.

சல்யோத்தாரணம், ஜலாதிவாசம், தானயாதிவாசனம், நயோன்மீலனம், கிராமப் பிரதட்சணம், முதலிய கிரியைகள் புதிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும்போது நடைபெறும். ஏனையவற்றுக்கு இவை இல்லை.

கும்பாபிஷேகத்தின் அங்கக் கிரியைகளை நோக்குமுன் பாலஸ்தாபனம் என்பது பற்றிச் சிறிது நோக்குவோம். வழிபாடு நடந்து வரும் ஓர் ஆலயத்திலே திருத்த வேலைகள் செய்யவேண்டி ஏற்பட்டால், அல்லது குறிப்பிட்ட பன்னிரண்டு வருட காலகட்டம் கடந்துவிட்டால் அங்கு புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும். அதற்காக அங்குள்ள மூலமூர்த்தியிலே உள்ள தெய்வ சாந்நித்தியத்தை 'கலாகர்ஷணம்' முதலிய கிரியைகளின் மூலம் கும்பத்திலும் சித்திரத்திலும் ஆவாகனம் செய்து, பின்னர் மூர்த்தியை ஆலயத்தின் வேறொரு பாகத்தில் புதிதாக விதிமுறைப்படி அமைக்கப்பெற்ற பாலாலயத்தில் (இளங்கோயில்) ஸ்தாபித்து அங்கு அபிஷேகம் செய்து மூர்த்தியை மறுபடி ஆவாகனம் செய்து வைப்பர். இதுவே பாலஸ்தாபனம் எனப்படும்.

கும்பாபிஷேகத்தின் சில முக்கியாமன அங்கக் கிரியைகளின் அர்த்தமும், நோக்கமும் இனிக் கூறப்படும். இக்கிரியைகள் மிக விரிவானவை என்பதால் கிரியைகளின் போது நடைபெறுகின்ற யாவற்றையும் விரிவாக எடுத்துக் கூறுவதற்கில்லை.

### ஆசாரிய வரணம்:

பிரரிஷ்டா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தப் போகும் சிவாசாரியரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துமாறு வேண்டுவதே இதன் அர்த்தம். சிவாசாரியரை சிவனாகவே பாவித்து அவரைப் பூஜித்து கும்பாபிஷேகத் திரவியங்களை அவரிடம் ஒப்புவித்தல் எஜமானது கடமையாகும். (வரணம் வரித்தல்)

### அநுஜ்ஞை:

அநுஜ்ஞை என்பது அனுமதி பெறுதல் ஆகும். ஒரு தாம்பாளத்தில் பச்சரியைப்பரப்பி அதில் தேங்காய், வாழைப்பழம், வெற்றிலைபாக்கு, சந்தணம், மஞ்சள், நாணயம், புஷ்பம், பத்திரம், தர்ப்பை என்பவற்றை வைத்து அவற்றைப் புண்ணியாக தீர்த்தம் தெளித்துத் தூய்மைப்படுத்தி அவற்றுக்குப் பூஜை நிகழ்த்துவர்.

அங்கு வந்திருக்கும் பிராம்மணோத்தமர்களிடமும், விக்கினேஸ்வரப் பெருமானிடமும், மூலமூர்த்தியிடமும், அஸ்திரதேவரிடமும், உற்சவ மூர்த்தியிடமும் சென்று பூஜை செய்து கும்பாபிஷேகத்தை நன்முறையில் நடத்த அனுமதியும், ஆசியும் தந்தருளுமாறு வேண்டுவர்.

### திரவிய சுத்தி, திரவி பாகம்;

கும்பாபிஷேகத்திற்கான திரவியம் சிவத்திரவியமாகுவதே திரவிய சுத்தி. கும்பாபிஷேகத்திற்குரிய பொருட்களை முறைப்படி மந்திர சகிதமாக அந்தந்த தேவைகளுக்கேற்ப பிரித்தலே திரவிய விபாகம் எனப்படும். கும்பாபிஷேகத்திற்கென ஒதுக்கிய பணத்தை (ஏறக்குறைய ஆலய நிர்மாணத்திற்குச் செலாவன தொகைக்குச் சமமான தொகையையே கும்பாபிஷேகத்திற்கும் செலவிட வேண்டும் என்பது ஆகமநூற் கருத்து) பதினொரு பங்காக வகுத்து இரண்டு பங்கு யாகசாலைக்கும், ஒரு பங்கு அபிஷேத்திற்கும், ஒருபங்கு சிவாசாரியாருக்கும், இரண்டு பங்கு இருத்துவிக்குகளுக்கும், ஒரு பங்கு வேதாத்தியானத்திற்கும், ஒருபங்கு தட்சிணைகளுக்கும், ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு பிராமண போஜனம், அன்னதானம் என்பவற்றுக்கும், ஒரு பங்கு பரிசாரகர், வாத்தியகாரர், சிற்பாசாரி முதலியவர்களுக்கும், ஒரு பங்கு யாகத் திரவியங்களுக்குமாகச் சிற்பாசாரி முதலியவர்களுக்கும், ஒரு பங்கு யாகத் திரவியங்களுக்குமாகச் செலவிட வேண்டு மென்பது ஆகமக் கருத்து. இதற்கமையப் பதினொரு பங்கு என்பதற்கு அடையாளமாகப் பதினொரு நாணயங்களை எடுத்து அவற்றைப் பால் முதலியவற்றாலும் புண்யாக ஜலத்தாலும் அபிஷேகம் செய்து சிவாஸ்திரத்தை அங்கு ஆவாஹனம் செய்து பூசித்தபின் மேற்கூறிய வகையில் அவற்றைக் குரு பங்கிட்டுக் கொடுக்க, தர்ம கர்த்தா பெற்றுக்கொள்வார்.

கிராமசாந்தி:

ஆலயம் அமைந்துள்ள கிராமத்திலுள்ள தீயசக்திகள், துஷ்டத்தன்மைகள் முதலியவற்றால் பெருவிழாவுக்கு இடையூறு ஏற்படாமல் மங்கலமுண்டாகும்படி காவற்தெய்வமாகி வைரவப் பெருமானுக்கு விஷேட பூஜை, ஓமம், பலி என்பன செய்தலே கிராமசாந்தியாகும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு பகைகள் முதலியவற்றால் ஏற்படும் தீமைகளும் அசுரர், ராடசதர், பூதர், பைசாசர் என உருவக்கப்படுத்தப்படுகின்றன. எவையானாலும் தீயனவற்றை ஒழிப்பதே கிராமசாந்தி.

ஆலயத்தின் கிழக்கு, மேற்கு அல்லது நிருதி திசையில் ஒரு தற்காலிக மண்டபம் அமைத்து வைரவருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பம் வைத்து ஒழுங்குசெய்தபின் அஸ்திர தேவரை மங்கல வாத்தியம் சகிதம் வீதிவலம் வரச் செய்து அங்கு எழுந்தருளச் செய்வர். கும்பங்களை மட்டுமின்றி யந்திரங்களை வைத்து அவற்றிலும் வைரவர் முதலானோரை ஆவாகனம் செய்து பூஜைகள் நிகழ்த்துவர். ராட்சதர்களுக்கும், தசாயுதங்களுக்கும் பலி உருண்டைகள் வழங்கித் திருப்தி செய்தபின் வைரவரை அக்கினியிலும் ஆவகனம் செய்து அன்னம், வடை முதலியனவும் ஆகுதியாக இடுவர். பலிப்பொருளான நீற்றுப்பூசனிக்காய், கத்தி அவற்றையும் பூஜித்து பசுகாயத்ரியை உச்சரித்து நீற்றுக்காயை வெட்டிப்பலி கொடுத்து அதன் உட்பாகத்தை ஓமம் செய்வர். பூர்ணாகுதி கொடுத்தபின் சகல தேவர்களுக்கும் பலதாம்பூலம் நைவேத்தியம் செய்து நீராஜனம் செய்தபின் சுவஸ்தானங்களுக்கு எழுந்தருளுவிப்பர். இதன் பின் வலம் வந்து கைகால்களைச் சுத்தம் செய்தபின்னர் ஆலயத்தினுள் செல்லுதல் மரபு.

பிரவேசபலி:

இடையூறுகள் நீங்கி, ஆரம்பிக்கும் காரியம் இனிது நிறைவேறும் பொருட்டாகவும், குற்றங்குறைகள் தவிர்க்கப்படுவதற்காகவும் செய்யப்படும் இக்கிரியையும் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி இவைகளைப் போன்றதே. ஆயின் இதில் பிரம்மஸ்தானம், இந்திரஸ்தானம் முதல் ஈசானஸ்தானம் வரையிலான ஸ்தானங்களாகிய நவசந்திகளிலும் அந்தந்த சக்திகளை அவர்களுக்குரிய மண்டலங்களை அரிசி மாவினால் வரைந்து அங்கு ஆவாகனம் செய்து, வெற்றிலை பாங்கு, பழம், தேய்காய், கமுகம்பூ, நெற்பொரி இளநீர் என்பவற்றை நிவேதித்து பலியுருண்டைகளையும் வழங்கி மகிழ்விப்பர். அதன்பின் இறைகாரியத்திற்கென அப்பிரதேசம் பயன்படுத்தப்படுவதால் தீய சக்திகள் யாவும் கடல், காடு, மலை நதி முதலிய இடங்களுக்குச் சென்றுவிட வேண்டுமென வேண்டியபின் அட்டதிக்குப் பாலகர்களை அவ்விடத்தில் ஆவாஹனம் செய்து பூசிப்பர்.

ரஷோக்ன ஹோமம்:

ரஷோக்ன தேவரைத் (ராஷசர்களை அழிப்பவர்) திருப்தி செய்யும் இக்கிரியையின் நோக்கமும், பிரவேசபலி, கிராமசாந்தி என்ற இவை போன்றதே. பிரவேச பலி மூலம் அகற்றப்பட்ட தீய சக்திகளில் ஏதாவது ஆலயத்தின் உட்பிராகாரத்தில் நுழைந்திருக்கக்கூடும் என்பதற்காக இந்த தேவரைப் பூசித்தபின் அக்கும்பத்தின் நீரால் ஆலய உட்பிராகாரம் தெளிக்கப்படும். கருவரையிலிருந்து ஆரம்பித்து வலம்வந்து கோபுரவாசல்வரை இந் நீர் தெளிக்கப்படும்.

திசாஹோமம்,

சிவாஸ்திரம், அகோராஸ்திரம், பாசுபதாஸ்திரம், முதலிய அஸ்த்ர சக்திகளை நான்கு கும்பங்களில் தனித்தனியே பூசித்து அவற்றுக்குரிய ஹோமங்களையும் செய்தபின் அந்தக் கும்ப நீரிகால் ஆலய உள்வீதியின் நான்கு திசைகளிலும் தெளிப்பதன் மூலம் ஆயுதப்படையின் காவல் நிறுவப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தீமைகளையகற்றிக் காவலிடும் பூர்வாங்கக் கிரியைகளின் தொகுப்பு நோக்கு:

கிராம சாந்தியில் பூத பைசாச, ராட்சச, பிரம்மராட்சசர்கள் அவர்களுக்குரிய பலியானால் திருப்திசெய்யப்பட்டு அனுப்பப்பட்டபின் கிராமத்தின் காவலரான வடுகபைரவரிடம காவல்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பிரவேச பலிமூலம் ஆலயத்தின் வெளிப்புறச் சூழலில் இருந்திருக்கக்கூடிய தீய சக்திகளைத் திருப்தி செய்வித்து தூர இடங்களுக்கு அகற்றியபின் அந்தத்திசைகளின் காவலர்களான இந்திரன், அக்னி முதலியவர்களை அழைத்து அவர்களிடம் காவல் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதற்குப்பின்னரும் உட்புறங்களில் இவற்றையும் மீறி வந்து ஒளிந்துகொண்டிருக்கும் தீய சக்திகளை ரட்சோக்ன ஹோமம் மூலம் அகற்றித் திசாஹோமத்தில் ஆயுதப்படை மூலம் உள்வீதிக்கான காவல் ஸ்திரப்படுத்தப்படுகிறது.

### சம்ஹிதா ஹோமம், மூர்த்திஹோமம், சாந்திஹோமம் முதலியன:

சம்ஹிதா மந்திரங்கள், பிராதன மூர்த்தி, அட்டமூர்த்திகள் இவர்களைத் தனித்தனியே கும்பங்களில் ஆவாகனம் செய்து பூஜித்து அக்கினி வளர்த்து அங்கும் இவர்களை ஆவாகனம் செய்து ஹோமங்கள் நடத்தப்படும்.

பூரணமான பூஜையின்றி இருந்த மூல விக்கிரகத்தில் தெய்வ சாந்நித்தியத்தைப் படிப்படியாக உருவாக்கும் கிரியைகள் இவை. சிவாகமங்களில் கூறப்படும் மந்திரங்களில் மிக முககியமானவையும் அதிக இடங்களில் பயன்படுபவையும் சம்ஹிதா மந்திரங்கள் ஆகும். ஈசானம் முத,லய பஞ்சப்ரம்ம மந்திரங்களும் ஹ்ருதயம் முதலிய ஆறு அங்க மந்திரங்களுமாகப்பதினொரு மந்திரங்கள் இவை. இறைவனுடைய லயாங்கமாக அணிசெய்திருக்கும் இம் மந்திரங்கள் அவரது போகாங்கமாகவும் முதலாவது ஆவரணத்தில் அவரைச் சுற்றி அமர்ந்திருந்து அருள் செய்யும் வலிமை வாய்ந்தவை. இம் மந்திரங்கள் ஒரு கும்பத்திலும் அக்னியிலும் பூசிக்கப்படுவது சம்ஹிதாஹோமம்.

அட்ட மூர்த்திகளின் வடிவானவன் இறைவன். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் (ஆன்மா) ஆகிய அட்ட மூர்த்திகளையும் அவற்றுக்குரிய அதிபதிகளையும் ஒரு கும்பத்திலும் அக்கினியிலும் பூசிப்பது மூர்த்தி ஹோமம்.

அஸ்திர சக்தியானது தீமையைப் போக்கவல்லது. காவல் செய்வது. மனச்சாந்தி தருவது. நமது ஆலயக் கிரியைகள் பலவற்றிலும் அவ்வப்போது பாசுபதாஸ்திர தருவது. நமது ஆலயக் கிரியைகள் பலவற்றிலும் அவ்வப்போது பாசுபதாஸ்திர மந்திரம் பூசிக்கப்படுவது வழக்கம். இங்கேயும் பாசுபதாஸ்திரமும் அதனைச் சுற்றி தசாயுதங்களும் பூசிக்கப்படுவது சாந்தி ஹோமம். இந்த மூன்று ஹோமத்தின் முடிவிலும் இக்கும்பங்கள் மூவரும்க்கு அபிஷேகம் செய்யப்பட்டு அங்கு அருள்விளக்கம் ஏற்படுத்தப்படுகிறது.

### நவக்கிரக மகம்:

பரிவார தெய்வங்களில் நவக்கிரகங்களுக்குத் தனியிடம் உண்டு. ஆன்மகோடிகளோடு நேரடித் தொடர்பு கொண்டு தமது கதிர்வீச்சுக்களால் உலகியல் வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களையும், பலாபலன்களையும் செய்கின்றவர்கள் நவக்கிரக நாயகர்கள். இவர்களைக் கும்பத்திலும், அக்கினியிலும் ஆவகனம் செய்து உபசாரங்கள், ஆகுதிகள் வழங்கி வழிபடுவது நவக்கிர மகம் எனப்படும். (மகம் யாகம்)

### வாஸ்து சாந்தி:

நிலத்தில் உள்ள குற்றங்குறைகளை நீக்குவதற்காக செய்யப்படுவது வாஸ்து சாந்தி என்னுங் கிரியை.

பூமிக்கு அதிபதி பிரம்மா, மழைக் கடவுள் இந்திரன். இவர்களை மகிழ்வித்து வழிபாடியற்றுவது. வாஸ்து சாந்தியில் இடம்பெறுகிறது. வாஸ்து சாந்தி ஆலய மண்டபத்திலே செய்யப்படுகிறது.

வாஸ்து சாந்திக்குரிய வாஸ்து மண்டலம், நெல்லினை மேடையாகப்பரப்பி அதன் மேல் வாழையிலை இட்டு அதன்மேல் அரிசியைப் பரப்பி அதன் மேல் எள்ளினால் அல்லது அரிசி மாவினால் கோடுகள் வரைந்து அமைக்கப்படும். மண்டூகபத வாஸ்து சாந்தி மண்டலம். பெண் தெய்வங்களுக்குரியது பரமசாயிபத வாஸ்துசாந்தி மண்டலம். சக்தி அம்சமான முருகனுக்கும் இதுவே உரியது.

இம் மண்டலத்துக்கு ஈசான திக்கில் காயத்திரி, சாவித்திரி ஆகிய இரு சக்திகளுடன் கூடிய பிரம்மாவிற்கும், சிவம் வர்த்தனிக்கும், மண்டலத்துக்கு கிழக்கில் புண்ணியாக வாசனத்துக்கும் கும்பங்கள் வைத்து அதன்முன் ஓமகுண்டம் அமைக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இங்கும் விக்னேஸ்வர பூஜை, புண்ணியாக வாசனம், முதலிய பூர்வாங்கக்கிரியைகளைச் செய்து சிவம் வர்த்தனியையும், பிரம்மாவையும் கும்பத்தில் பூஜித்து மண்டலத்தில் வாஸ்துபுருஷனையும் பிற தேவதைளையும் பூஜித்து நெற்பொரியினால் பலிதானமும் கொடுத்து முறைப்படி அக்கினி காரியமும் செய்வர்.

இங்கு கிராமசாந்தியைப் போலவே நீற்றுக்காயொன்றைப் பலியிடுவர். அதன்பின் வைக்கோல், தர்ப்பை முதலியவற்றால் மனித உருவாகச் செய்யப்பட்ட வாஸ்துபுருஷனைப் பூஜித்து அக்கினியில் பொருத்தி எரிமூளச் செய்தபின் அவ்வுருவத்தை ஆலய மண்டபங்கள், வீதிகள் முதலிய இடங்களில் இழுத்து வந்து ஈசான திக்கில் போட்டு விடுவர். இவ்வுருத்தின் பின்பாக வாஸ்துகும்ப நீர் தெளித்துச் செல்வர். வெட்டிய நீற்றுப்பூசணிக்காயையும் இதனுடன் எடுத்துச் சென்று போட்டுவிடுவர். இவற்றைக் கொண்டு சென்றவர்கள் நீராடிவிட்டு ஆலயத்தினுள் வருதல் வேண்டும். (கைகால்களையாவது நன்கு சுத்தம் செய்தல் அவசியம்.)

### மிருத்சங்கிரணமும் அங்குரார்ப்பணமும்:

நற்காரியங்கள் எதனையும் தொடங்கும் போது முளைப்பாலிகையிடுதலாகிய அங்குரார்ப்பணம் மிக முக்கியமாகச் செய்யப்படும். இதற்கு வேண்டிய மண்ணை மந்திரசகிதமாகப் பெறுவதே மிருத் சங்கிரகணமாகும். (மிருத் மண்: சங்கிரகணம் சேகரித்தல்.)

அஸ்திர தேவரையும், அதற்கு முன் (கிழக்கே) சப்த வாரிதி கும்பத்தையும் ஸ்தாபிப்பர். அற்கு கிழக்கே நவபதம் அதற்கும்முன் அஷ்டதள பத்மம் (எட்டிதழ்க் கமலம்) அதற்கும்முன் நாற்கோணம் என்பவற்றை அரிசிமாவினால் அமைப்பர். நாற்கோணத்தில் மண்வெட்டி ஒன்று கூர்ச்சம், மாவிலை என்பன கட்டப்பட்டதாக வைக்கப்பட்டிருக்கும். பூர்வாங்கக்கிரியைகளை நிறைவேற்றியபின் கும்பத்திலே ஏழு சமுத்திரங்களையும்,, நவகோஷ்டத்தில் பிரம்மாவையும் எட்டு மண்டல தேவர்களையும், பத்மத்திலே நீக்கத்திற்காக தைலம், பால் தயிர், இளநீர், என்பவற்றால் அபிஷேகித்த பின் மும்முறை மண்ணை வெட்டி ஒரு தட்டிலிட்டு பட்டினால் மூடுவர். சப்தரிஷி கும்ப ஜலத்தினால்மண் எடுத்த இடத்தை அபிஷேகம் செய்து நவதானியமிட்டு சமதளமாக்குவர்.

சகல தேவர்களையும் உத்வாசனம் செய்து (தத்தம் இடத்திற்கு எழுந்தருளச் செய்து) மண் நிரப்பிய தட்டத்துடன் வீதி வலம் வந்து யாகசாலையை அடைவர்.

யாகசாலையின் பின் வாயுதிக்கிலே (வடமேற்கு) கார்த்திகை, ரோகினி சகிதமாக அமிர்தேஸ்வர கும்பம் வைத்து (அமிர்தேஸ்வர சந்திரன்) சுற்றிவர துவாதசாத்தியர்களுக்கு (பன்னிரு சூரியர்கள்) பன்னிரண்டு சிறிய மண்சட்டிகளும் வைக்கப்பட்டிருக்கும். மிருத்சங்க கிரகணத்தில் எடுத்துவந்து மண்ணினால் இவை நிரப்பட்டு வில்வம், அரசு, மாவலை இவற்றால் அலங்கரிக்கப்படும்.

பூர்வாங்கக் கிரியைகளை அடுத்து சந்திரனையும், பன்னிரு சூரியர்களையும் பூஜித்தபின் தூய்மையான பாத்திரமொன்றிலே பசுப்பால் விட்டு அதில் நவதானியத்தை இட்டுப் பூஜித்து உரிய மந்திரங்களுடன் பாலிகைகளில் (மண்சட்டி) அதனை விதைப்பர். சந்திரகும்ப நீரை இவற்றுக்கு வார்த்து மீண்டும் கும்பத்தை நீரால் நிரப்பி ஸ்தாபிப்பர்.

இவ்வங்குரார்ப்பண முளையானது பசுமையாக நன்கு செழித்து வளர்ந்தால் கிராமம் சிறக்குமென்பது ஐதீகம். (அங்குரம் முளை).

### ரட்சாபந்தனம்:

ரட்சா என்பது காப்பு. காவலுக்காக கட்டப்படுவது. காப்புக்கட்டுதல் எனவும் கூறுவர். எடுத்த கருமம் தடையின்றி நிறைவேறுவதற்கும், அக்கருமமன்றி வேறுசெயல்களில் ஈடுபடாது தடுப்பதற்கும் காப்புக் கட்டப்படும்.

சிவாச்சாரியாரும், ஏனைய குருமாரும் தர்மகர்த்தாவும் ரட்சாபந்தனம் செய்துகொண்ட பின் கும்பாபிஷேகம் முடியும்வரை ஆலயச் சூழை விட்டு அப்பாற் செல்லாகாது. இக்கால எல்லையில் அவர்களின் உறவினரால் ஏற்படும் ஆசௌசம் முதலியன அவர்களைத் தீண்டா.

காவலுக்காக கட்டப்படும் காப்பு மூர்த்திகளுக்கும் கட்டப்படுவது வழக்கம். எல்லா உலகங்களையும் காக்கும் அவருக்கே காவல் என ஐயுறலாம். சகல பிரபஞ்சங்களுக்கு காவல் செய்யும் காரணமாகவே அத்திருவுருவங்களுக்கு காவல் செய்யப்படுகிறது. மேலும் தன் குழந்தைகளின் நோய் தீரத் தான்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மருந்துண்ணும் தாய் போல நமக்காக இறைவன் காப்புக்கட்டும் பாவனையும் இதில் தொனிக்கிறது.

'கங்கணம் கட்டுதல்' என்ற மரபுச் சொற்றொடர் இங்கு நோக்கற்பாலது. ஒரு காரியத்தை விடாது முயன்று செய்து முடிக்கத் தீர்மானிப்பதைக் கங்கணம் கட்டுதல் என்று சொல்லுவர். கங்கணம் என்பது காப்பு. ஏடுத்த காரியத்தை நிறைவேற்றி முடிக்கும் தீர்மானம் கொள்வது இக்கிரியையின் நோக்கமெனவும் கொள்ளலாம்.

ஒருதட்டில் அரிசி பரப்பி அதில் தேங்காய், வெற்றிலை பாக்கு, பழம், மாவிலை, வீபூதி என்பனவும், ரட்சா சூத்திரம் (காப்புக் கயிறு) எனப்படும் மஞ்சள் பூசிய நூலும் வைக்கப்பட்டிருக்கும்.

சிவாச்சாரியர் பூர்வாங்க கிரியைகளைச் செவ்வனே நிறைவேற்றிய பின் ரட்சாபந்தன பொருள்களைப் பூஜிப்பர். இதன் பின் மங்கல வாத்தியங்கள் முழங்க சிவாச்சாரியர் தனது வலக்கை மணிக்கட்டில் ரடசை நூலைக் கட்டி விபூதியால் முடிச்சிலே காப்பிட்டுக்கொள்வார்.

### நூதன மூர்த்திகளுக்கான அதிகவாசாதி கிரியைகள்:

புதிதாகச் செய்யப்பட்ட விக்கிரங்களுக்கு மாத்திரம் நயனோன்மீலனம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், சயனாரோபணம் ஆகிய கிரியைகள் செய்யப்படும்.

### நயோன்மீலனம்:

நயன உன்மீலனம் எனப் பிரித்து கண்திறத்தல் என்ற பொருளை இச்சொல் வெளிப்படுத்தும், ஓவியம், சிறபம் என உருவாகி முடிந்ததும் இறுதியாகவே கண்திறத்தலைச் செய்வர். இங்கு முறைப்படி பூஜை அக்கினி காரியம் என்பவற்றை நிகழ்த்தி திரையிட்டு மூர்த்தியின் திருவுருவத்திலே தங்க ஊசியால் கண்களைத் திறந்து தானியக் குவியல் மீது விக்கிரகத்தை வைத்து பொன். சேதுன், நெய், தானியங்கள், பிராமணர்கள் தீபம் கண்ணாடி நிறைகுடம் சந்நியாசி, பக்த ஜனங்கள் ஆகியோரை தரிசிக்கச் செய்வர். சிற்பாசாரி சம்பாவனை செய்து கௌரவிக்கப்படுவர்.

### ஜலாதிவாசம்:

நயன உன்மீலனம் செய்யப்பட்ட விக்கிரகத்தை நீரில் அமிழ்த்தி வைத்தலே ஜலாதிவாசம் எனப்படும். இதற்கென தயார் செய்யப்பட்ட சிறு தொட்டியிலே புனித தீர்த்தங்களை நிரப்பி அதனுள் ஆசனத்தின் மீது கழுத்தளவு நீரில் கிழக்கு நோக்கி விக்கிரகத்தை இருக்கச் செய்வர். தொட்டி தயார் செய்யும் சிரமத்திற்காக பெரிய பாத்திரங்களை பயன்படுத்துவதும் உண்டு.

மீன். தவளை, பாம்பு முதலிய நீர் வாழ் பிராணிகளை பொன்னால் அல்லது வெள்ளியால் செய்து இதனுள் போடுவதும் உண்டு.

### தான்யாதி வாசம்:

இதன் பின் விக்கிரகத்தை தானியங்களால் மூடி வைப்பர். இதுவே தான்யாதி வாசம் எனப்படும். இவ்விரு அதிவாசக் கிரியைகளும் பிருதுவி, அப்பு ஆகிய இரு அம்சங்களுடனும் பரம்பொருளுக்குள்ள தொடர்பை வலுப்படுத்துவதாக அமைகிறது.

### சயனாரோகணம்:

தானியங்களைப் பரப்பி மான்தோல் முதலியவற்றை விரித்து அதன்மேல் மெத்தை, தலையணை, விரிப்பு என்பவற்றை அமைத்து மூர்த்தியை அங்கு எழுந்தருளச் செய்து கிழக்கே தலை வைத்து மேல்நோக்கியபடி சயனிக்கச் செய்து செந்நிறத் துணியால் மூடி இறைவனை துயில வைக்கும் பாவனையே சயனாரோபனம் ஆகும். (ஆரோபணம் ஏற்றுதல்)

### பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை:

புனராவர்த்தன கும்பாபிஷேகத்திற்கு மட்டும் இக்கிரியை உண்டு. மூல மூர்த்தியிலுள்ள தெய்வசாந்நித்தியத்தை கும்பத்திலே ஒடுக்குமுன் விசேஷஸ்நபனாபிஷேகம் செய்து தீபாராதனை, பூஜைகள் செய்வது மரபு. இதுவே பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூஜை எனப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடஸ்தாபனம்:

கும்பம் வைப்பதற்கான நெல், அரிசி, பயறு, உழுந்து, எள், நவதானியம், நெற்பொரி, தர்ப்பை இவற்றை உரிய மந்திரங்கள் ஓதியவாறு முறைப்படி பரப்பி குடத்தை கழுவி நூல்சுற்றிதூபம் காட்டி இதனுள் சந்தனம், நீர், பவித்திரம், நவரத்தினம், பொன் முதலியவற்றை இட்டு மாவிலை தேங்காய் என்பவற்றை வைத்து பட்டு, பூணுல் மாலை கூர்ச்சம் பூ, சந்தனம் இவற்றை சாத்தி கும்பாபிஷேகத்திற்குரிய பிரதான கும்பங்களை அமைத்தலே கடஸ்தாபனமாகும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வேத மந்திரங்கள் ஓதப்படும்.

கலாகர்ஷணம்:

பிம்பம் எனப்படும் விக்கிரகத்திலிருந்து இறையருள் சக்தியை தெய்வசாந்தியத்தை கும்பத்திலே வரச்செய்தலே கலாகர்ஷணம் ஆகும். பலவிதமான நியாசங்கள் மூலமாக இதனைச் செய்து கடஸ்தாபனம் செய்யப்பட்ட கும்பதில் மூர்த்தியை எழுந்தருளச் செய்த பின்னர் கும்பத்தை யாகத்தில் ஸ்தாபிப்பர்.

விஷேச சந்தி:

பூர்வாங்கக் கிரியைகள் நிறைவுற்றதும் சிவாச்சாரியர்கள் தமது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்தபின் ஓரிடத்தில் வரிசையாக அமர்ந்து விஷேச சந்தியாவந்தனத்தில் ஈடுபடுவர். இது சகளீகரணம், அங்கநியாசம், காயத்திரி ஜபம் மற்றும் பல்வேறு வையான தர்ப்பணங்களும் அடங்கி கிரியைகாகும். (தர்ப்பணம் மந்திரநீர் சொரிந்து தேவர்கள் முதலானோரை மகிழ்வித்தல்)

தீபஸ்தாபனம்:

மண்டபத்திலே வைத்து சர்வாலங்காரங்களுடன் கூடிய தீபம் ஒன்றை ஏற்றி அதனை அர்ச்சித்து சுமங்கலிப் பெண் அதனை ஏந்தியபடி வீதி வலம் வரச் செய்து மூலஸ்தானத்தில் அதனை வைத்தலே தீபஸ்தாபனம் எனப்படும். பிம்பஸ்தாபனம்.

சயனத்திலிருந்து மூர்த்தியை எழுந்தருளச் செய்து வீதி வலமாக கொண்டு வந்து இந்த ஆசனத்தின் மீது வைத்து அஷ்டபந்தன மருந்தினைச் சாத்தி மூர்த்தியை பீடத்துடன் இறுகப் பொருத்துவர்.

யந்திரபூஜை:

இங்கு பதிக்கப் பெறும் யந்திரமானது உலோகத்தகட்டில் வரையப்பட்ட அந்தந்த மூர்த்தியின் அம்சங்களைக் கொண்டதாக அமையும். இது கும்பாபிஷேகத்திற்கு சுமார் ஒரு மண்டலம் முன்பதாகவே தயார் செய்யப்பட்டு தினமும் அபிஷேகம் பூஜை செய்து தெய்வசாந்தியத்தை பெற்றதாக இருக்கும்.

தைலாப்பியங்கம்: (எண்ணெய் சாத்துதல்)

விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டதும் சிவாச்சாரியர் அதற்கு எண்ணெய் சாத்திய பின் பக்தர்கள் யாவரும் தாமே தமது கைகளால் எண்ணெயை சாத்தி வணங்குவர். நல்லெண்ணய், சந்தானாதி தைலம் முதலிய வாசனை தைலங்கள் இதற்கு பயன்படும். இது பாப நிவர்த்தியை செய்யும்.

பிம்பசுத்தி:

மூர்த்தியின் திருவுருவத்திலுள்ள தோஷங்களை நீக்குவதற்காக விம்பசுத்தி செய்யப்படுகிறது. பலவிதமான புண்ணிய தீர்த்தங்களாலும் இதற்கென விதிக்கப்பட்ட பலவிதமான புண்ணிய தீர்த்தங்களாலும் இதற்கென விதிக்கப்பட்ட பலவிதமான மரப்பட்டை கஷாயங்களாலும் மூர்த்திக்கு அபிஷேகம் செய்வர். இதனால் விம்பம் சுத்தம் அடைகின்றது.

விஷேச திரவிய ஹோமம்:

பலவிதமான சமித்துக்கள் தானிய வகைகள் என்பவற்றை அவற்றுக்குரிய மந்திரங்களை ஓதி அக்கினியில் இட்டு ஆகுதி வழங்குவர். இந்த விஷேச திரவியங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன் விஷேசமாக சொல்லப்பட்டுள்ளது.

யாகசாலையின் அமைப்பு:

பஞ்சபூத விளக்கமாக யாகசாலை அமைவதை முன்னர் கண்டோம். யாகசாலை கோயில் பிரகாரத்தின் உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசானம், அக்கினி, வடக்கு, மேற்கு, ஆகிய திசைகளில் அமையலாம். நன்கு மெழுகி தூய்மைப்படுத்திய தரையையும் நடுவிலே வேதிகை என்று சொல்லப்படும் மேடையையும் யாகசாலையின் பிரமாணத்திற்கு ஏற்ப எண்ணிக்கையுள்ள தூண்களையும் கொண்டதாக மேலே வேயப்பட்டு வெள்ளை கட்டிய விதானத்துடன் யாகசாலை அமையும்.

ஐந்து வகையான யாகசாலைகள் உள்ளன. யாகசாலையை பதங்களாக பிரிப்பதில்தான் இந்த வேறுபாடு ஏற்படுகிறது. மாவில் தோய்த்த நூலினால் சூத்திரங்களை அடித்து (கோடுகள்) பதங்களை ஏற்படுத்துவர். 44 சூத்திரங்களையும் இருபுறமும் இடுவது ருத்திர சூத்திரக் கிரமம் எனப்படும். இதில் 43ஙீ44=1849 பதங்கள் உண்டாகும். 34 சூத்திரங்கள் அடிப்பது விஷ்ணு சூத்திரக் கிரமம். 24 சூத்திரங்கள் அடிப்பது பிரம்ம சூத்திரக் கிரமம். 14 சூத்திரங்கள் அடிப்பது மனு சூத்திரக் கிரமம். 12 சூத்திரங்கள் அடிப்பது ரவி சூத்திரக்கிரமம்.

ரவி சூத்திரக் கிரமத்தில் 121 பதங்கள் உருவாகும். கும்பங்களுக்கான வேதிகை நடுவில் அமையும். அதனைச் சுற்றிலும் சஞ்சார பதங்கள், ஓமகுண்டங்கள் பரிவார யாக கும்பங்கள் என்பன அவற்றுக்குரிய இடங்களில் அமையப்பெறும்.

ருத்திர சூத்திரக் கிர யாகசாலையில் முப்பத்து மூன்று குண்டங்களும், விஷ்ணு சூத்திரக்கிரமத்தில் இருபத்தைந்து குண்டங்களும், பிரம்ம சூத்திரக்கிரமத்தில் பதினேழு குண்டங்களும், மநுசூத்திரக்கிரமம், ரவி சூத்திரக்கிரமம் இரண்டிலும் ஒன்பது குண்டங்களும் அமையும்.

வசதி குறைந்த இடங்களில் ரவி சூத்திரக்கிரம யாகசாலை அமைத்து அங்கு ஐந்து குண்டங்கள் அமைப்பர். ஒவ்வொரு வரிசையிலும் கிழக்கே சதுரக் குண்டமும், தென்கிழக்கே யோனி குண்டமும் தெற்கில் அர்த்தசந்திரக் குண்டமும் தென்மேற்கில் திரிகோண குண்டமும், மேற்கில் விருத்த குண்டமும் வடமேற்கில் அறுகோண குண்டமும், வடக்கில் பத்மகுண்டமும் ஈசானத்தில் எண்கோண குண்டமும் அமையும். பிரதான குண்டம் வேதிகைக்கு முன்பாக அல்லது ஈசானத்திலும் கிழக்குக்குமிடையே அமையும்.

ஐவகை யாகசாலைகளுக்கும் முறையே நூறு, அறுபத்து நான்கு, முப்பத்தாறு, பதினாறு, என்ற எண்ணிக்கையில்தூண்கள் அமையும், மாவிலை, தோரணம், மாலைகள், பட்டு கொடி, கரும்பு, கமுகு, இளநீர் முதலியவற்றால் யாகசாலையை அலங்கரிப்பர். அஷ்டமங்கலம், தசாயுதம் என்பனவும்.

### யாகசாலையை அலங்கரிப்பன. மஹாபிஷேகம்:

பஞ்சாமிர்தம், பால், இளநீர் முதலிய சகல பொருட்களாலும் மூலமூர்த்திக்கும் அபிஷேகம் செய்து ஸ்நபனாஷேகம் செய்வது மஹாபிஷேகம் எனப்படும். இதன்பின் ஆசார்ய பூஜை நிகழும். சிவாசார்யர்களை உபசரித்து தட்சிணை தாம்பூலங்கள் வழங்கி நமஸ்கரித்து அவர்களது ஆசி பெறுவதுடன் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிறைவுபெறும். இரவு கல்யாண உற்சவம், திருவூஞ்சல் என்பன நிகழும்.

### மண்டலாபிஷேகம்:

கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கொண்ட ஒரு மண்டலத்துக்கு விசேஷஅபிஷேக ஆராதனைகள் நிகழும். திரபட்சம் (மூன்று பட்சங்கள் கொண்டது) ஒரு மண்டலம், ஒரு பட்சம் பதினைந்து நாள். எனவே நாற்பத்தைந்து நாட்களே மண்டலாபிஷேகத்திற்கு உரிய காலமாகும்.

### சங்காபிஷேகம்:

கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கொண்ட ஒரு மண்டலத்துக்கு விசேஷஅபிஷேகத்திற்கு உரிய காலமாகும்.

### சங்காபிஷேகம்:

நாற்பத்தைந்தாம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும். பூஜைக்குரிய உபகரணங்களுள் சங்கு மிகத் தூய்மையானது. சங்கில் விடப்படும் நீர் புண்ணிய தீர்த்திற்க்கு நிகராகிறது. நூற்றெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்திர சத சங்கம்) ஆயிரத்தெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்தர சஹஸ்ர சங்கம்) வசதிக்கேற்பச் சங்காபிஷேகம் நிகழும். பிரதான கும்பத்தில் வலம்புரிச் சங்கும் ஏனையவற்றிக்கு இடம்புரிச் சங்கும் உபயோகிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகபூஜை:

யாகசாலையில் பிரவேசிக்கும் சிவாசாரியார் முதலில் விக்நேஸ்வரரர் பூஜை, புண்யாகவாசனம் என்பவற்றைச் செய்த பின் சூரிய பூஜை, துவார பூஜை தோரணங்கள் திரிசூலங்கள், கொடிகள் ஆகியனவற்றின் அதிதேவதைகளுக்கான பூஜை என்வற்றையும் செய்வர்.

இதன்பின் பிரதான வேதிகையிலுள்ள ஸ்நபன கும்பங்களில் பஞ்சாசனை பூஜை, ஆவரண பூஜை என்பவற்றை நிகழ்த்திப் பலவித நியாசங்கள் மூலமாக மந்திர சக்திகளைக் கும்பத்திலே பதித்துப் பூஜிப்பர்.

பின்னர் பிரதான குண்டத்திலே பிரதான சிவாசாரியர் அக்கினி காரியம் செய்ததும் அதிலிருந்து அக்கினியைப் பிரித்தெடுத்து ஏனைய குண்டங்களுக்குரிய சிவாசாரியார்கள் தங்கள் குண்டங்களில் இட்டு அக்கினிகாரியம் செய்வர்.

இவ்வாறு பிரதான குண்டத்திலிருந்து அக்கினியை பிரித்துக் பூஜையுடனும் ஆரம்பிக்கும்.

ஸ்பர்சாகுதி:

யாகசாலையிலே அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து பூஜிக்கப்பட்ட தெய்வசாந்நித்தியத்தை பிம்பத்திலே ஒடுக்குவதே ஸ்பர்சாகுதி யாகும். அக்கினியுடன் கும்பத்தையும் கும்பத்துடன் பிம்பத்தையும் தர்ப்பைக்கயிறு, நூல் முதலியவற்றால் நாடீசந்தானம் செய்து (தொடுத்து) மும்முறை யாககுண்டத்திலும் மூலமூர்த்தியிலுமாக ஸ்பர்சாகுபதி செய்து இறுதியில் நாடீசந்தானத்தை மூலமூர்த்தியில் சேர்த்து விடுவர்.

பூர்ணாகுதி:

இறுதியில் பிரதான சிவாசாரியார் பிரதான குண்டத்தில் பூர்ணாகுதி வழங்கியதும் ஏனைய சிவாசாரியர்களும் தத்தம் குண்டங்களில் பூர்ணாகுதி கொடுத்துப் பிரதான குண்டத்தில் மஹாபூர்ணாகுதி வழங்கி ரஷை எடுத்துக் கும்பத்திற்குச் சாத்தி அதனை அனைவருக்கும் வழங்குவர்.

கும்ப உத்தாபணம்:

குறிக்கப்பட்ட சுபநேரத்தில் சகலவித தோஷங்களும் நிவர்த்தியாகும் பொருட்டு நவக்கிரகதானம், யாத்ராதானம் என்பன வழங்கிய பின் பரிசாரகரை அலங்கரித்து அவரை வாகனமாகப் பாவித்து அவர் சிரசில் பிரதான கும்பத்தை வைத்து மங்கல வாத்தியங்கள் முழுங்க ராஜோபசாரங்களுடன் வீதி வலமாக எழுந்தருளிவிப்பர்.

ஸ்தூபிக்கென அமைக்கப்பட்ட கும்பத்தையும் இதனோடு அல்லது முன்பே வலமாகக் கொண்டு வந்து முதலில் ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்தவர்.

கும்பாபிஷேகம்:

மங்கலவாத்தியங்களும், வேதகோஷங்களும் முழங்கப் பிரதான கும்பமும் அஷ்டவித்யேஸ்வர கும்பங்களும் மூலமூர்த்திக்கு முன்னர் வைத்து நியாசங்கள் செய்யப்பட்ட பின் அபிஷேகம் செய்யப்படும். மஹாஹவீர் நிவேதனம் என்னும் விசேஷநைவேத்தியத்தை நிவேதித்தபின் கதவைச் சாத்தி விடுவர்.

தசதர்சனம்:

இதன்பின் பண்ணிசை நிகழ்த்திக் கதவினைத் திறந்து மங்கலப் பொருட்களான பசு, நிறைகுடம், தீபம், கண்ணாடி முதலியவற்றையும், சுமங்கலியையும் தரிசிக்கச் செய்வர். பின்பு தர்மகர்த்தாக்கள், உபயகாரர் முதலியவர்களுக்கு அவிஷேசகம் நிகழும். (அவபிருத ஸ்நானம் என்று இதனைக் கூறுவர்.)

வேல் வேல்!

சண்முகக் கடவுள் போற்றி! சரவணத் துதித்தாய் போற்றி!
கண்மணி மருகா போற்றி! கார்த்திகை பாலா போற்றி!
தண்மலர் கடப்ப மாலை தாங்கிய தோளா போற்றி!
விண்மதி வதன வள்ளிவேலவா போற்றி! போற்றி!
சத்ருசங்காரவேற் பதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SivaRathy & Co

APPROVED BY CIMA. SAGE ACCOUNTANTS CLUB MEMBER

* 25 YEARS OF EFFICIENT SERVICE TO SUIT THE NEEDS OF THE CLIENTS

* VAT RETURNS
PAYROLLS
BUSINESS PLANS
& ADVICE

* TAX RETURNS
SELF ASSESSMENT
TAX & VAT
INVESTIGATIONS

* ACCOUNTS &
BOOK-KEEPING



CUTTING EDGE QUALITY AND PRICE ASSURED
100% GENUINE FRIENDLY SERVICE VISIT US
AND FEEL THE DIFFERENCE

CIMA
Chartered Institute of Management Accountants

MR.R.SIVANANTHARAJAH ACMA, CGMA
89 SPRINGFIELD DRIVE
ILFORD, ESSEX, IG2 6QS

TEL: 0208 518 1490 MOB: 07946545144

www.accountingilford.co.uk email: accountant.sivarathy@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கோடாத வேதனுக்கு நான் செய்த குற்றம் என்ன?

"புண்ணியஞ் செய்வாருக்குப் பூ உண்டு நீருண்டு" என்பது திருமந்திரத் திருமுறை சொல்கின்ற உண்மை. இறைவனின் அருள் இருந்தால்தானே அவனைப்பற்றி அறியவும் தொழவும் முடியும். இப்பிறவியில் எங்களுக்கு வாய்க்கும் ஆலய வழிபாடுகளும், இறைவனைப் பற்றிச் சிந்திக்கக் கிடைக்கும் நிமிடங்களும் முன்பு செய்த வினைத் தொகையினால் நமக்குக் கிடைப்பவை.

அருணகிரிநாத சுவாமிகள் செய்திருக்கக்கூடிய புண்ணியம் எவ்வளவாக இருக்குமென நினைத்துப் பார்க்கவே மலைப்பாக இருக்கின்றது. முருகப் பெருமானால் தாங்கப் பெற்று, குரு உபதேசம் பெற்று, ஜெபமாலை வழங்கப் பெற்று, ஆறெழுத்து மந்திரம் ஞான வேலால் நாவில் எழுதப்பெற்று, திருப்புகழ் பாட அடி எடுத்துக் கொடுக்கப்பட்டு இவ்வாறு அவர் முருகனால் பெற்ற சிறப்பை நாம் அளவிடவே முடியாது. அவர் அருளிய திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருஎழுகூற்றிருக்கை ஆகிய ஒன்பது நூல்களும் முருகனை இனிமையாகப் பாடிப் பரவ எமக்குக் கிடைத்துள்ள தமிழ் அமுதமாகும்.

வாக்கிற்கு அருணகிரி, கருணைக்கு அருணகிரி, "ஐயா அருணகிரி அப்பா, உனைப்போல மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்? என்றெல்லாம் போற்றப்படும் அருணகிரியார் கந்தரலங்காரப் பாடலில் தான் செய்த குற்றம் என்ன என பிரம்மாவிடம் வினவுகிறார்.

"கோடாத வேதனுக் கியான் செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடான னேதென் றணிகைக்குமராநின் றண்டையுந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாத கையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே"

திருத்தணிகையில் உள்ள முருகனின் தண்டை அணிந்த திருப்பாதங்களைத் தலை மேல் சூடிக் கொள்ளாத தலையையும், அவன் அழகையே நாடிச் சென்று தேடாத கண்களையும், அவனை வணங்காத கைகளையும், முருகப் பெருமானின் புகழைப் பாடிப் பரவாத நாக்கையும் வேதத்தை ஓதியுணர்ந்து அதன் வழியில் படைப்புத் தொழிலைக் கோணாமல் செய்கின்ற வேதியனாகி பிரம்மா எனக்கென்று தெரிந்து படைத்துள்ளானே. நான் என்ன பிழை செய்தேன்? என்பது அவருடைய மனவேதனையாக உள்ளது.

1324 திருப்புகழ்ப் பாடல்களையும், 106 கந்தரலங்காரப் பாடல்களையும், 51 மந்திரங்கள் எனப்படும் அநுபூதிப் பாடல்களையும், இன்னும் பல அற்புதமான பாடல்களையும் அருளிச் சென்ற அருணகிரியாரின் முறைப்பாடு முறையற்றதாகத் தெரிகின்றது.

அருணகிரிநாதரின் ஒரு பாடலை அனுபவித்தாலே அவருக்கு முருகப் பெருமானிடம் இருந்த ஈடுபாட்டையும் முருகனைப் பற்றிய தெளிவும் எங்களுக்குப் புலப்படும். அத்தகு பெருமையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற அருணகிரிநாதர் தனக்கு முருகனைப் பாடாத நாக்கும், அவன் திருக்கோலத்தைப் பார்க்காத கண்களும் மற்றையவையும் வந்து சேர்ந்துள்ளதே என்பது எப்படிப் பொருந்தும்?

இது முருகப் பெருமானிடம் அவர் கொண்ட ஆறாத அன்பை வெளிப்படுத்தும் வரிகள். எவ்வளவு பருகினாலும் தீராத் தாகத்தை உண்டாக்கிக் கொண்டே இருக்கும் முருகனின் தெய்விக அழகின் மீது அவருக்கிருந்த வேட்கையின் வெளிப்பாடு. அதனால்தான் முருகனிடம் சென்று அவன் அழகைக் கண்டு தொழ நாலாயிரம் கண்களை பிரம்மா தனக்குப் படைக்கவில்லையே என்று மற்றொரு கந்தரலங்காரப் பாடலில் வேதனைப்படுகின்றார்.

முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு இருநூற்றிற்கும் மேற்பட்ட ஆலயங்களுக்குப் போய் வழிபட்டு முருகனின் சிறப்பை அழகுத் தமிழில் தந்த அருணகிரியாரின் பாடல்களின் பல இடங்களில் இந்த முறைப்பாட்டைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

> "…..குமரன் பதாம் புயத்தை
> வணங்காத் தலை வந்திங்கெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்ததுவே"

குமரக் கடவுளின் அழகிய திருப்பாதங்களை வணங்காத தலை எப்படி எனக்கு இங்கு வந்து அமைந்தது என்று கவலைப்படுகின்றார்.

> "… முருகனைப் போற்றி அன்பாற்
> குவியாக் கரங்கள் வந்தெங்கே யெனக்கிங்ஙன் கூடியதே"

முருகனை கும்பிடாத கைகள் என்னிடம் எவ்வாறு வந்து சேர்ந்தது என்பதும் அவருடைய மனவேதனையைக் காட்டும் மற்றொரு கந்தரலங்காரப் பாடல் வரிகளாகும்.

அருணகிரியார் ஏன் இப்படிக் கவலைப்பட்டார் என்பதை எண்ணிப்பார்ப்பதும் இதன் மூலம் எங்களுக்கு என்ன சொல்ல முனைகிறார் என்பதையும் தேடுவதுமே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஞானிகள் மக்களிடம் தாம் கொண்டிருக்கும் அளப்பற்ற அன்பின் காரணமாக நாம் செய்கின்ற தவறுகளை தம்மேல் ஏற்று அத் துன்பத்தை அனுபவிப்பது அவர்களின் உயர் குணத்தின் அடையாளம்.

மாணிக்கவாசகர் தன்னை ஊத்தையேன், நாயேன், பிழையேன். பேய், கடையவன் என்றெல்லாம் சொன்னார் என்றால் அது இறைவன் முன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் பெருந்தன்மையால் மட்டுமல்ல. எம் ஒவ்வொருவரிடமும் அவருக்கிருக்கும் அன்பை அது காட்டுகின்றது. தன்னை ஞானி என்று கருதிக் கொள்ளாமல் அருகதையற்றவன் என்று பாடுவதால் அதைப் பாடும் நாம் உயர வேண்டிய அளவை உணர்த்துகின்றார். ஞானிகள் சமுதாயத்தின் மேல் கொண்டிருக்கும் மேலான நோக்கத்தின் காரணமாக இப்படித் தங்களைக் குறைத்துக் கொள்வதை நாங்கள் இனம் காண வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதர் முருகப் பெருமானின் பரிபூரண அன்பைப் பெற்றிருந்தும் தனது பாடல்களில் தனது ஞானத்தின் உயர்வைக் காட்ட வேண்டும் என்று அவர் முனையவில்லை. தனது பாடல் வாயிலாக முருகன் குடி கொண்டிருக்கும் திருத்தலங்களின் பெருமையையும், கந்தப் பெருமானின் திவ்ய அழகையும், அவனின் திருவருள் திறத்தையும் விளக்குகின்றார். அதேவேளை எங்களை உயர்த்துவதற்காக நாம் இழைக்கும் பிழைகளைத் தானே செய்வதாக முருகனிடம் முறையிடும் அன்பின் திறம் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்

நாம் இறைவனை வணங்கும் கால அளவையும், தன்மையையும் எண்ணிப்பார்த்து பெருமைப்பட வேண்டுமா இல்லை வெட்கப்பட வேண்டுமா என்பதை நோக்குவதற்கு இது இடம் தருகின்றது. எங்களை அடியார்கள் என்றும், பக்தர்கள் என்றும், இறைத் தொண்டர்கள் என்றும் அடையாளம் சொல்ல எங்களுக்கு உள்ள தகுதி என்ன என்பதை நாம் உற்று நோக்க வேண்டியுள்ளது.

அருணகிரியாரே தனக்கு முருகனை வழிபடாத உடம்பு வந்து வாய்த்ததே என்று வேதனைப்படுகின்றார் என்றால் நாம் எம்மாத்திரம்? எங்கள் நிலை என்ன?

“பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே” என்பது திருமுறை வரி. இறைவனைப்பற்றிப் பேசவில்லை என்றால் அது இறந்த நாள்கள் என்று கருதும் சிவனடியார்களின் கொள்கை எங்களை சிந்திக்க வைக்கின்றது.

நாவுக்கரசரும் தலையே நீ வணங்கு, கண்காள் அவனைக் காணுங்கள், காதுகளே அவன் புகழைக் கேளுங்கள், முக்கண்ணனை மூக்கே நீ முரல வேண்டும், வாயே நீ இறைவனை வாழ்த்து, நெஞ்சே நீ மங்கை மணாளனை நினைக்க வேண்டும், கைகளே சிவனை மலர் தூவிக் கூப்பித் தொழு என்று கட்டளையிடுகின்றார். அதைச் செய்யாத இந்த உடம்பால் பயன் என்ன? கறைக் கண்டன் வீற்றிருக்கும் கோயிலை வலம் வராத கால்களால் பயன் என்ன? என்று கேட்கிறார். எங்கள் ஒவ்வொருவரையும் கேட்பதாகத் திருமுறை அமைந்துள்ளது. இப்படிப்பட்ட நெஞ்சைப் பார்த்து நெஞ்சே நீ வா, நித்தலும் எம்பிரானுடைய கோயிலுக்குப் போய்த் தொண்டு செய்து தலையால் வணங்க வா என்று அழைக்கின்றார். இவ் அழைப்பும், கட்டளைகளும் நாவுக்கரசர் எங்கள் மேல் கொண்டுள்ள கருணையால் எழுதி வைத்த திருமுறைப் பாடல்களாகும்.

ஒரு தாய் பிள்ளை மேல் வைக்கும் அன்பு உயர்ந்ததா? பிள்ளை தாயிடம் கொள்ளும் அன்பு உயர்ந்ததா என்று கேட்டால் தாய் பிள்ளையிடம் வைக்கும் அன்பு பன்மடங்கு உயர்ந்தது என்பது உண்மை. அவ்வாறே தந்தை காட்டும் அன்பின் முன் தந்தையிடம் மகனோ மகளோ காட்டும் அன்பு தோற்றுவிடுகிறது.

இதையே அருணகிரிநாதரும் உணர்ந்து தனது பாடல்களில் அதைப் பதிவு செய்கின்றார். முருகப்பெருமான் எங்கள் மேல் கொண்டிருக்கும் அன்பின் காரணமாக சதா காலமும் எங்களையே நினைந்து கொண்டிருக்க எங்களுக்கு அவனை நினைக்காத மனமும், அவனைத் தொழாத உடம்பும் எவ்வாறு வாய்த்தது? பிரம்மன் ஏன் அவ்வாறு படைத்தான் என்பதாகப் பாடல்கள் அமைந்துள்ளன. இறைவன் அடியாருக்காகக் காத்திருக்கின்றான் என்பதும் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மீது வைத்திருக்கும் அளப்பற்ற அன்பின் முன் எங்கள் அன்பு வெகு சாதாரணமானது என்பதும் புலப்படுகின்றது.

இந்தக் கருணைக் கடலில் சிக்கித் தவித்து இறைவனின் திருவருள் இன்பத்தை விழுங்க முனைந்து அதனால் விக்கிக் கொண்ட தனக்கு தண்ணீர் பருகத்தரும் தாயிற் சிறந்த தத்துவனாக மாணிக்கவாசகர் இறைவனின் அன்பை விளக்குகின்றார்.

"வழங்குகின்றாய் உன் அருள் ஆரமுதத்தை
வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் என்
விதியின்மையால்
தழுங்கருந் தேன்னன்ன தண்ணீர் பருகத்தந்
துய்யக் கொள்ளாய்...."

என்ற திருவாசக வரிகள் எவ்வளவு ஆழமானவை. ஒரு தாயைப் போல் என்னைப் பேண நீ எனக்கு உன் திருவருள் அமுதத்தை தருகின்றாய். அந்த ஆரமுதத்தை நான் உண்ண முயலும் போது என் வினைப்பயனால் அதை என்னால் அனுபவிக்க முடியாமல் விக்கித் தவிக்கின்றேன். ஒரு குழந்தையைப் பராமரிக்கும் அன்புத் தாயாக நீ என்னுடன் இருந்து தண்ணீர் பருகத் தந்து என்னைக் காப்பாற்றும் அன்புத் தெய்வமே என்று பாராட்டுகின்றார். சுவாமி என்றும் தனது அருளைக் கொடுப்பதற்காக தன்னைத் தொடர்ந்து வருகின்றார் என்பதைப் "புறம் புறம் திரிந்த செல்வமே, சிவபெருமானே" என்றும் பாடியுள்ளார்.

இக்கருத்துக்களைப் பார்க்கும் போது கடவுள் எங்களைப்பற்றிய ஒன்றிய சிந்தனையுடன், பேரன்புடன், அம்மையாக, அப்பனாக இருக்கையில் பாவிகள் நாம் நன்றி கெட்டவர்களாகத் திரிகின்றோம் என்பது புலப்படுகிறது. முருகப்பெருமான் எங்களுக்காக பல வகையிலும் முயன்று எம் எதிரே வந்தாலும் அதை உணராதவர்களாக நாம் வாழ்கின்றோம். அத்தகைய உடல் உறுப்புக்களும், மனமும் எப்படி எங்களுக்கு வந்தமைந்தது? பிரம்மன் ஏன் இத்தகைய ஒரு பிறவியை எனக்குக் கொடுத்தான்? என்று நாம் வினவி முருகனின் பேரன்பை உணர வேண்டும் என்பது அருணகிரியாரின் சமுதாய நோக்காக உள்ளது.

முருகப்பெருமான் எங்களுக்குத் தந்தவை எல்லாம் மேலானவை. நாம் அதற்கு நன்றி தெரிவிக்க இயலாதவர்களாக இருக்கின்றோம். அந்தம் ஒன்றில்லா ஆனந்தத்தைப் பெற்றேன் உன்னிடமிருந்து. என்னிடம் இருந்து ஒன்றும் பெறவில்லையே! இத்தகைய பேரன்பிற்கு ஏற்ற கைம்மாறு ஒன்று இல்லையே என்பது உண்மை அடியார்களின் தவிப்பாக இருக்கின்றது.

இதற்கு என் மனம்தான் காரணம். எனக்கு வாய்த்த உடம்பும், மனமும் உன்னைச் சிந்திக்க விடாமல் தடையாக இருக்கின்றது என்பதாக அருணகிரியார் முருகனிடம் முறையிடுகின்றார்.

"ஓரவொட்டார். ஒன்றை உன்ன ஒட்டார். மலரிட்டு உன் தாள் சேர ஒட்டார் ஐவர். செய்வது என் யான்?...."



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முருகா உன் திருவடியின் பெருமையை ஆராய விடமாட்டார். ஓம் என்ற உண்மையை நினைக்க விடமாட்டார். மணம் பொருந்திய மலர்களால் உன் திருத்தாளை அர்ச்சனை செய்து உன்னை அடைய விடமாட்டார். நான் உன்னை வணங்கத் தடையாக என்னுடனே இருக்கும் ஐவர் செய்யும் தடையை நான் எப்படி வெல்ல முடியம் என்று எங்களுக்காக முருகனை வேண்டுகின்றார் அருணகிரிநாதர்.

இந்த நிலையில் இருக்கும் எம்மை இலண்டன் ஸ்ரீ முருகன் அழகான ஆலயத்தில் சதா அழைத்துக் கொண்டே வீற்றிருக்கின்றான். கந்தப் பெருமானை நன்றே விளங்கிய அருணகிரிநாத சுவாமியும் அங்கு மேற்கு நோக்கி உடன் இருந்து எங்களை வழி நடத்துகின்றார். ஆலயக் கும்பாபிஷேகத் திருவிழா எங்களனைவருக்கும் முருகப் பெருமானின் தாயன்பையும், பேராற்றலையும் உணர்ந்து அவனைத் தொழவும், அவன் பெருமையை உணரவும் அவனருளை நாடி வர வழி சமைத்துக் கொடுக்கும்.

“கொள்ளித் தலையி லெறும்பது போலக் குவலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொளிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயிலேறிய மாணிக்கமே.”

இவ்வுடம்பும், அறிவும் அவனை அறிய வழி விட வேண்டும்.

திருந்செந்தூரன் துணை வர வேண்டும்.

- சதாசிவம் ஆனந்ததியாகர்

08.06.2017


# Perfect Digital Photographic Studio

**Creating Poetry with Picture**

Over 28 Years of Experience


* *Digital Colour Lab Prints to Life Size*
* *Picture Framing Work Shop*
* *Passport, Visa, OCI, Driving Licence Photos Etc*
* *Studio Portraits*
* *Out Door Photography*
* *Canvas Printing*

Perfect Digital

211 High Street North,
East Ham, London, E6 1JG
Tel: 0208 5529 419
Email : perfectdigital@hotmail.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## AYYAPAN MANDALA PUJAI













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## AYYAPAN MANDALA PUJAI



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## CHARIOT FESTIVAL







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## CHARIOT FESTIVAL









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## CHARIOT FESTIVAL









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# LONDON SRI MURUGAN TEMPLE
## CHARIOT FESTIVAL


















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி சேத்ரம்

## முனைவர் தேவகி முத்தையா **M.A. M.Phil . Ph.d.**

லண்டன் ஸ்ரீ முருகன் கோவில் குட முழுக்கு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் என் அன்பு வணக்கம். காசி சேத்ரம் பற்றி லண்டன் ஸ்ரீ முருகன் கோவில் குடமுழுக்கு விழா மலரினிற்கு எழுதும் பணிக்கு எனக்கு அளவிலா மகிழ்ச்சி. மோட்ச புரிகள் என்று ஏழு தலங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகாபரி, துவாரகாவதி சைவ ஸப்தையதா மோசஷதாயிகா என்பது ஸ்லோகம். ராமஜன்ம பூமியான அயோத்யா, கிருஷ்ணபரமாத்மா பிறந்த பூமியான மதுரா, மாயா என்பது ஹரித்துவாரம் அதாவது கங்கை விண்ணிலிருந்து பூமிக்குப் பிரவேசம் செய்த தலம். குாசி என்ற புண்ணிய சேத்ரம், நகரேஷு காஞ்சி எனப்பெறும் காஞ்சி மாநகர், உஜ்ஜயினி மற்றும் கிருஷ்ண பரமாத்மா ஆண்டருளிய துவாரகா ஆகிய ஏழும் மோட்சபுரிகள் என்று குறிப்பிடப் பெறுகின்றன. இத்தலங்கள் பிறப்பது, வாழ்வது, இறப்பது என்ற மனித வாழ்க்கையின் ஆதி, நடு, அந்தம் என்ற மூன்று நிலைகளுக்கும் தலையாய இடங்கள் என்று கூறுவது புராணம். சேத்ரம் என்பது நெல் விளையும் இடம் என்று பொருள். அங்கு எவ்வாறு ஒரு நெல் பத்து, நூறாகி, ஆயிரம் லட்சமாகி செழிக்கின்றதோ அவ்வாறு இத்தலங்களில் செய்யும் நற்காரியங்களும் ஒன்று, பத்தாகி, நூறு ஆயிரமாகி, லட்சம் கோடியாகிப் பெருகி நற்பயனை அளிக்கின்றன.

காசியைப் பற்றி பொதுவான செய்திகளை முதலில் கூறி விடுகின்றேன். காசி மாநகரம் வட இந்தியாவில் உத்திர பிரதேச மாநிலத்தில் அலகாபாத்திலிருந்து 78 மைல் தொலைவில் உள்ளது. காசி என்னும் சொல்லுக்கு ஒளிமயமானது என்று பொருள். வாரணாசி என்று மற்றொரு பெயர் உள்ளது. காசி நகருக்கு வடக்கே வாராணா என்ற நதியும் தெற்கே ஆசி எனும் நதியும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்த நகரமாதலால் வாரணாசி என்று பெயர். இதனைப் பூலோகக் கைலாயம் என்றும் அழைப்பர். கந்த புராணத்தில் காசி காண்டம் என்னும் பகுதியில் உள்ள
ஒரு பாடல்:

காசியைக் குறித்துச் செல்லும்
கால்களே கால்களாகும்
காசியை வாழ்த்தும் நாவே
நாவெனக் கூறலாகும்
காசியின் கதைகள் கேட்கும்
செவிகளே செவிகளாகும்
காசியை இனிது காணும்
கண்களே கண்களாம் என்று கூறுகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று விசேஷங்களும் ஒருங்கே அமையப் பெற்றது காசி என்னும் புண்ணிய சேத்ரம். மூர்த்தி எனும் விசேணம் பற்றி முதலில் காண்போம். பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களுள் முதலாவதாகக் கூறுவது காசி விஸ்வேஸ்வரர் எனும் விஸ்வநாதர். ஆதி சங்கரர் நடைப் பயணமாக காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையில் பயணித்து பன்னிருஜோதிர்லிங்க சேத்திரங்களை நிறுவினார்.

இதில் தலையாயது காசி விஸ்வநாதம். காசி விஸ்வநாதரை யாராக இருந்தாலும் அருகில் சென்று கைகளால் ஸ்பரிசித்து வணங்கும் பேற்றினைப் பெறலாம். விஸ்வநாதர் எளிமையின் வடிவம். அவரது சௌலப்யம் சிறப்பு மிகு குணம். காசியில் உள்ள விஸ்வநாதரைத் தொடும் உரிமை அனைவருக்கும் உண்டு என்பதாலோ என்னவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியில் வாழும் மனிதர்களைத் தொட்டாலே பிறவித் துன்பம் கிடையாது என்று கூறுகிறது காசி காண்டம். ஜோதிர்லிங்கமான காசி விஸ்வநாதருக்கு மூன்று வேளையும் பூஜைப் பொருள்களை வழங்கி பூஜை செய்யும் அரிய பேற்றினைப் பெற்றவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர். விஸ்வேசருக்கு நாளும் பூஜை செய்யும் பேறு பெற்ற ஒப்பற்ற நிறுவனம் காசி நகரச் சத்திரம். இச்சத்திரம் விஸ்வேசர் கோவிலுக்கு அருகேயுள்ள குடோலியா சன்னதியை அடுத்து அமைந்த கட்டிடமாகும். கடந்த 200 ஆண்டுகளாகச் செயல்படும் இந்நிறுவனம் பசுமடமும், நந்தவனமும் உண்டாக்கி விஸ்வநாதருக்குப் பாலும், மலர்களும் அனுப்புகின்றது. உஷத் காலத்தில் பத்தாஸ் மிட்டாயும்,

உச்சிக் காலத்தில் பருப்புப் பொங்கலும் அர்த்த சாமத்தில் சர்க்கரைப் பொங்கலும், நகரச் சத்திரத்தில் இருந்து அனுப்பப்படும் பொருட்களைக் கொண்டு கோயில் மடப்பள்ளியில் செய்து நைவேத்யம் செய்யப்படுகின்றது. விஸ்வேஸ்வரருக்கு நாளும் மூ ன்று முறை பூஜை ஆபிஷேகம் அலங்காரப் பொருட்கள் நகரச் சத்திரத்திலிருந்து எடுத்துச் செல்லும் போது மேளம், தாளம் ஒலிக்க சம்போ, சம்போ சங்கர மகாதேவா என்று கோஷமிட்டுச் செல்வதைத் தெருக்களில் இருப்பவர்களும், கடைகளில் கட்டிடங்களில் உள்ளவர்களும் மரியாதையுடன் சென்று பார்த்து தலை வணங்குவர். ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த போதும் கூட சம்போ நேரப்படி தவறாமல் வரும் என்றும் பஞ்சாப் மெயில் தாமதமானாலும் கூட நகரத்தார் சம்போ நேரப்படி வந்துவிடும் என்பதும் காசியில் பழமொழி. குளிர் காலத்தில் ஐப்பசி மாதம் வசந்த பஞ்சமியிலிருந்து மாசி மாதம் சிவன் ராத்திரி வரை குளிர்காலச் சட்டை (மக்மல் பட்டு) காசி விஸ்வவாதருக்கு அணிவிக்க காசி நகரத்தார் கட்டளை உண்டு என்பதும் சிறப்பு.

காசி சேத்திரத்தில் கண்பார்வை படும் இடமெல்லாம் லிங்கஸ்வரூபம் இருக்கும். தரையில் பல இடங்களில் லிங்கஸ்வரூபம் இருப்பதால் இராமகிருஷ்ண பரமஹம்சர் மலஜலம் கூட காசி நகரத்தில் கழிக்காது நகருக்கு வெளியே செல்வார் என்றும் காஞ்சி மஹா பெரியவர் காசியில் வசிக்கும் காலங்களில் காலில் பாதுகையே அணியமாட்டார் என்றும் கூறுவர். காசியில் செயலேதும் புரியாமல் சும்மா படுத்திருந்தாலும் கூட உயர்ந்த யோகம் செய்வதற்கும் மேலாகும் என்பது பொதுவான கருத்து.

காசி விஸ்வநாதரின் தேவி விசாலாட்சி அம்மன் தேவிக்குத் தனிக் கொயில் 1893ம் ஆணடு நகரத்தார்களால் அமைக்கப்பெற்று இங்கும் 3 வேளை பூஜைக்கும் நகரச் சத்திரத்தில இருந்து
சம்போ உடன் பொருட்க்கள் அனுப்பப்படுகின்றது. தீபாவளியின்போது மட்டும் இரண்டு நாட்களுக்கு நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தில் உள்ள ஸ்வர்ண உற்சவ விசாலாட்சிஅம்மன் தரிசனத்திற்கு மண்டபத்தில் எழுந்தருளுகின்றாள்.

காசி என்றவுடன் விஸ்வேஸ்வரருடன் நினைவில் வர வல்லவள் தேவி அன்னபூரணேஸ்வரி. தனிக் கோயில் கொண்டிருக்கும் அன்னைதான் புவனங்கள் பதினான்கினுக்கும் அன்னம் பாலிப்பவள். விஸ்வரூபம் கொண்ட லிங்கோத்பவரின் முடியைப் பார்த்துவிட்டதாக அன்னப் பறவை வடிவம் கொண்ட பிரம்மா பொய் கூற, கோபம் கொண்ட சிவன் பிரம்மனின் ஒரு தலையைக் கொய்துவிட்டதாகவும் அந்தத் தலையானது சிவனின் கைகளை விட்டு அகலவில்லை என்றும் அந்தத் திருவோடு கொண்டு வீதி வீதியாக அவர் அலைந்ததாகவும், திருவோடுதனில் காசியில் அன்னபூரனேஸ்வரி பிக்ஷை இட்டவுடன் அது சிவனின் கைகளிலிருந்து மறைந்தது என்றும் கூறுகிறது புராணம். இன்றும் நாள்தோறும் அதிகாலையில் அன்னபூரணி அம்மனின் கோயில் நடைக்கதவு முதலில் திறக்கப் பெற்றதும் அபிஷேக அலங்காரங்கள் நடைபெறுகின்றது. பின்னர்தான் விஸ்வேஸ்வரருக்கு அபிஷேக அலங்காரம் நடைபெறுகின்றது. அன்னையிடம் வந்து அவர் பிக்ஷை பெற்றுக் கொண்டு செல்வதே இன்றும் வழக்கமாக உள்ளது. அன்னபூரணிக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் குபேரன் பூஜை செய்து வருவதாகவும் அதனால் பூட்டிய கர்ப்பகிரகத்தினுள் இருப்பதாகவும் கூறுவர். ஆண்டுதோறும் தீபாவளி சமயம் மட்டும் மூன்று நாட்களுக்குத் தங்க அன்னபூரணி பக்தர்கள் தரிசனத்திற்கு வெளிவருகின்றாள். தீபாவளியின் போது விஸ்வேஸ்வரர் கோயிலில் மிட்டாயத் தேரும் அன்னபூரணி கோயிலில் அன்னக்கூட்டும் விசேஷமான நிகழ்வுகள்.

கால பைரவர் திருக்கோயில் காசியில் பிரசித்தம். காசி நகரமே கால பைரவரின் காவல் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும், இங்கு வருபவர்கள் அவரது உத்திரவுக்குப் பிறகே நகரை விட்டு வெளியேறலாம் என்றும் கூறுவது உண்டு. கால பைரவர் சன்னதியில் வழங்கப் பெறும் கருப்புக் கயிறு மகிமை வாய்ந்தது. காசிப் பிரசாதம் என்றாலே விஸ்வேஸ்வர் கோயில் விபூதி, விசாலாட்சியின் செந்தூரக் குங்குமம் மற்றும் பைரவரின் கருப்புக் கயிறு ஆகும். காசி சேத்திரத்தில் பருந்து வட்டமிடாது. பல்லி திருவுளம் கூறாது என்று கூறுவர். இதற்குக் காரணமாக புராணக் கதை ஒன்றும் உண்டு.
இராமபிரான் இலங்கை வேந்தனைப் போர் புரிந்து வெற்றி கண்டு இராமேஸ்வரம் வந்தவுடன் தனக்கேற்பட்ட தோஷத்தைப் போக்கிக் கொள்ளவேண்டி சிவலிங்க பிரதிஷ்டை செய்து வணங்க எண்ணி அனுமனைச் சிவலிங்கத்தைக் கொண்டுவர காசிக்கு அனுப்புகின்றார் அனுமன் காசிக்குச் சென்று அங்கே கருடன் வட்டமிட்டுப் பறந்ததும், பல்லி திருவுளம் சொல்லியதுமான இடத்தில் இருந்த சுயம்பு லிங்கத்தை எடுத்துக் கொண்டு இராமேஸ்வரம் திரும்பினார் காசியும் அதன் சுற்றுப்புறமும் பையிரவர் காவலுக்கு உரிய பிரதேசமானபடியால் பையிரவர் இசைவு இன்றி லிங்கத்தை எடுத்தபடியால் அனுமனக்கும் பையிரவருக்கும் போர் மூண்டது. அப்பொழுது அனுமன் கருடன் வட்டமிட்டதையும், பல்லி திருவுளம் சொல்லியதையும் கூறினார்.

அது கேட்ட பையிரவர் அன்று முதல் கருடனும், பல்லியும் காசியில் முறையே பறக்கவும் திருவுளம் சொல்லவும் கூடாது என்று சாபமிட்டதாகவும் உள்ளது வரலாறு.

இப்புனித சேத்ரத்தில் அறிவு ஒளி பெற்ற ஆன்றோர் ஆதி சங்கர பகவத்பாதாள், புத்தர் போன்ற மஹான்கள், கபீர்தாஸ், பாரதியார் போன்ற கவிஞர்களும் இங்கு வாழ்ந்தனர். உஸ்தாத் பிஸ்மில்லா கான். பண்டிட் ரவிசங்கர் போன்ற உலகப் பிரசித்தி பெற்ற கலைஞர்களும் காசிவாசிகள். பண்டிட் மதன்மோகன் மாளவியா இங்கு நிறுவிய வாரணாசி ஹிந்திப பல்கலைக் கழகம் புகழ் வாய்ந்தது. காசிநகரின் அருகாமையில் அமைந்துள்ள சாரநாத்தில்தான் புத்தர் போதிமரத்தின் கீழ் ஞானஒளி பெற்றார். இந்திய நாட்டின் அடையாளச் சின்னமான அசோகர் தூணும் இங்குதான் உள்ளது. புத்தகயா, அலகாபாத், திரிவேணி சங்கமம் ஆகியவை காசிக்கு மிக அருகில் உள்ள விசேஷமான தலங்கள்.

மூர்த்தி தலம் மகிமை பார்த்தாகி விட்டது. அடுத்து தீர்த்தம். காசிக்கு நிகரான பதியுமில்லை, கங்கைக்கு நிகரான நதியுமில்லை என்பார்கள். பாரத நாட்டில் எத்தனையோ நதிகள் உற்பத்தியாகி புரண்டோடுகின்றன. அவற்றுள் ஸப்த புண்ணிய நதிகள் என்று நாம் கூறுவது கங்கா, யமுனா, சரஸ்வதி, காவேரி, துங்கபத்ரா, கிருஷ்ணா, கோதாவரி போன்றவை. இவற்றுள் தலையாயது கங்கா. கங்கையில் மூழ்கி எழுந்தாலும் நமது அத்தனை பாவங்களும் அகன்று விடும். மானிடர் அனைவரது பாவத்தையும் தான் வாங்கிக் கொண்டு தனது புனிதம் மட்டும் சிறிதும் மாறாமல் என்றும் ஜீவநதியாகத்தான் கங்கை பாரத பூமியில் புரண்டொடுகின்றாள். காசி மஹா சேத்திரத்திற்குச் சென்றால் அங்கு நிகழ்வன கண்டால் இது நமக்குப் புரியும். காசியில் தீர்த்தமாடும் கட்டங்கள் காட் என்பன 64. இதில் மணிகர்கணிகா கட்டத்துக்குச் சென்றால் அங்குத் துறையில் மரணம் அடைந்தவர்களின் பூத உடல்கள் அக்கினி மூட்டப்பட்டு முக்கால் வீதம் ஏன் அரை வீதம் மட்டும் எரிந்த நிலையிலேயே கங்கையினுள் தள்ளப்படுகின்றன. எத்தனையோ உடல்கள் தள்ளப்பெற்றும் கங்கையில் சிறிதும் துர்நாற்றம் வீசுவதில்லை. காசியில் பிணம் நாறாது, பூ மணக்காது என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையின் நீரை கலசங்களில் அடைத்து பல ஆண்டுகள் வரை வைத்திருந்தாலும் அந்நீர் கெடுவதில்லை. விஞ்ஞானிகள் இதற்கு காரணம் கங்கையில் ஒருவித பாசி (Algae) விளைவதாகவும் இந்தப் பாசி நதியில் கலக்கும் அத்தனை கழிவுகளையும் அப்புறப்படுத்தி நீரைத் தூய்மையாக வைத்திருக்கும் சக்தி கொண்டது என்று கூறுகின்றார்கள். கோடான கோடி மக்களின் பாவங்களைச் சுமந்தாலும் தனது தூய்மை மட்டும் சிறிதும் மாறாத கங்கை " எந்தப் புனிதப் பெற்றோரின் மகள்? " எனும் கேள்வி என்னுள் எழுந்து என்னை வியப்பில் ஆழ்த்தும்.

இமயமலையில் உதித்த கங்கை பெரும் இறுமாப்புடன் கரைபுரண்டோடிக் கொண்டிருக்கின்றாள். 100 அஸ்வமேத யாகங்களை நடத்தினால் இந்திரப் பதவி கிடைக்கும் என்பதால் பகீரதனின் முன்னோர்கள் அஸ்வமேத யாகங்களை நடத்துகின்றார்கள். அந்த யாகத்தை நிறைவு பெறாமல் கெடுப்பதற்காக அஸ்வத்தைக் குதிரையை கபில மகரிஷியிடம் கொண்டுசென்று பாதாளத்தில் கட்டி வைக்கின்றார்கள் (கபில மகரிஷியின் இருப்பிடமான பாதாளம் தான் தற்போதைய கலி.்.போர்னியா மாகாணம் என்பதனை இங்குக் குறிப்பிட விழைகின்றேன்).

சத புத்திரர்கள் எனப்படும் 100 பேரான பகீரதனின் முன்னோர்களை உயிர்பிக்க வேண்டும். அதற்குக் கங்கையை கொண்டு வரவேண்டும் என்று பகீரதன் சிவபெருமானை எண்ணி கடும் தவம் புரிகின்றான். கங்கையை ஆகாயத்திலிருந்து நேரடியாக பூமிக்கு வரவழைத்தால் அவளது வேகத்தைப் பூமி தாங்க முடியாது என்பதால் சிவபெருமான் அவளைத் தனது தலையில் வாங்கி வேகம் குறைத்து பூமியில் பாயவிடுகின்றார். அவள் பூமியில் பாய்ந்தோடும் போது ஜன்னு முனிவர் யாகம் வளர்த்துக் கொண்டிருக்க அவளது வேகம் தனது யாகத்தைக் கெடுத்து விடும் என்று அஞ்சி கங்கையை அவர் குடித்துவிடுகின்றார். பகீரதன் தான் இத்தனை பிரயத்தனம் செய்து கொண்டுவந்த கங்கையை மீண்டும் புவியோர்க்குத் தரவேண்டும் என்று பிரார்த்திக்க ஜன்னு முனிவர் கங்கையைத் தனது வலது காதிலிருந்து வெளியே பாயச் செய்கின்றார். இதனால் கங்கைக்கு ஜான்வி ஜன்னுவின் மகள் என்ற பெயரும் உண்டு. நம் வலது காதில் கங்கை இருப்பதாக நம்பிக்கை இன்றும் இருப்பதால்தான் பூஜை, ஹோமம் ஆகியன செய்யும் போது தும்மலோ, கொட்டாவியோ வந்துவிட்டால் அந்த அசுத்தம் நீங்க பூஜை செய்வோர் வலது காதைத் தொட்டுக்கொள்ளும் பழக்கம் உண்டு. அதில் இருக்கும் கங்கை நமக்குப் புனிதம் தந்துவிட்டதாகப் பொருள்/ஐதீகம்.

கங்காதேவி ஈன்றெடுத்த திருமகன்தான் பாண்டவர்களும் கௌரவர்களும் பிதாமகர் என்று பெரும் மரியாதையுடன் அழைத்த பீஷ்மாசாரியார் ஆவார். கங்கையின் மைந்தன் என்பதால் காங்கேயன் என்றும் இவருக்குப் பெயருண்டு. தன் தந்தைக்காகத் தான் கடும் பிரம்மச்சர்யம் பூண்ட உத்தமர். ஆன்மீக உலகிற்கு விஷ்ணு சஹஸ்ரநாமத்தை ஈன்ற மஹான். தனது மரண நேரத்தைத் தானே தேர்ந்தெடுக்கக் கூடிய வரம் பெற்றவர் என்று பல சிறப்பகளை உடைய பீஷ்மரைப் பெற்ற தாய் கங்காதேவி.

காசியில் தண்டம், முண்டம், பிண்டம் ஆகிய மூன்றும் விசேஷமாக செய்யப் பெற வேண்டியவை. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று புண்ணிய நதிகளும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் முண்டம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் காசியில் விஸ்வநாதருக்குத் தண்டமிட வேண்டும். இறுதியாக கயாவில் பித்ருக்களின் பொருட்டு பிண்டம் இட வேண்டும். கயாவில் உள்ள வடவால மரத்தின் அடியில் திருமாலில் பாதத்தில் போடப்படுகின்ற பிண்டத்தால் பித்ருக்கள் உய்தி பெறுகின்றார்கள். காசியில் இறந்த ஆன்மாக்களை அமபிகை தன் மடியில் கிடத்தி இளைப்பாற்றி விஸ்வேஸ்வரர் பிரணவத்தை அவர்களது காதுகளில் உபதேசிப்பார் என்பது புராண வரலாறு. மணிகர்கணிகா துறையில்தான் இறந்தவர்களி காதில் பிரணவ மந்திரம் உபதேசிக்கப் பெறுகின்றது. மணிபரவளம் என்பது மந்திரம், கர்ணிகை என்பது காது. இதன் காரணமாகவே இந்தத் துறைக்கு மணிகர்ணிகா என்று பெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ மாதவம் புரிந்தவர்கள் கங்கைக் கரையில் காசியில் வாழ்ந்திருக்கின்றாாகள். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். சேது பந்தனத்தில் அணிலின் பங்கு என்பது பெரியது. அந்த அணில் மீது படிந்த மணலில் ஒரு துளி என்பதுதான் எனக்குப் பொருந்தும். எனக்கு எப்பொழுதுமே மூன்று விஷயங்கள் ரொம்ப பிடிக்கும். அவை தாமரை, கிளி, கங்கை. முதன் முதலில் ரிஷிகேஷத்தில் கங்கைக்குள் கால் பதித்த வேளையை என்னால் மறக்க இயலாது. காசியில் என் கணவரது அன்புப் பெற்றோர்களின் அஸ்தியைக் கரைக்கச் சென்றதும், மீண்டும் சில ஆண்டுகளுக்குப் பின் தங்க அன்னபூரணியை தரிசிக்கச் சென்றதும் என் நினைவில் நீங்காத இடம் பெற்ற சம்பவங்கள். அந்த நினைவுகளை இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு (சுமார் 17 ஆண்டுகள்) மீண்டும் புத்துயிருடன் பிறக்கச் செய்திருக்கிறார் விஸ்வேஸ்வரர். அதற்குக் காரணம் லண்டன் ஸ்ரீ முருகனின் ஆசியும் குடமுழுக்கு விழாக் குழுவினரின் அன்பும் தான். இந்த அரிய வாய்ப்பினை நல்கிய காசி விஸ்வேஸ்வரருக்கும் அன்னபூரணிக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு Ragubhir Singh அவர்களது Ganga Sacred River of India எனும் நூலில் நான் கண்ட காளிதாஸரின் பாடல் ஒன்றையும் ஆதி சங்கர பகவத்பாதாளின் சௌந்தர்யலஹரியில் உள்ள பாடல் ஒன்றையும் கூறி முடித்துக் கொள்கின்றேன்.

When the waters of the Ganga and the Yamuna mingle it appears as though diamonds and sapphires were woven together in a string; as though a flock of white swans had suddenly run into another flock of black swans; as though a garland of white lotus buds were interspersed with blue lotuses; as though a streak of lightening had merged into a sheet of darkness; as though a clear blue sky spotted with woolly clouds of autumn.

**Kalidas Raguvamsam**
**Canto XIII**

சௌந்தர்யலஹரியின் 54வது ஸ்லோகம்

பவித்ரீ கர்த்தும்ந: பசுபதி பராதீன உற்ருதயே
தயமித்ரைர்-நேத்ரைர் ரருண தவல ச்யாம்ருசிபி
நத: சோணோ கங்கா தபண தனயேதி த்ருவமமும்
த்ராயாணாம் தீர்த்தானா முபநயஸி ஸம்பேத மநகம்

பசுபதிக்கு நிகரான கருணை உள்ளம் கொண்டவளே. தயைக்கு இருப்பிடமாகத் திகழும் உன் கண்கள் சிவப்பு, வெளுப்பு, கருப்பு என்ற வர்ணங்களைக் கொண்டவையாக உள்ள. அது எதற்கு ஒப்பாக இருக்கிரதென்றால் மேற்கு நோக்கி செல்லும் சிவந்த நீரிணை உடையை சோணபத்ரா ஆறு (சரஸ்வதி) வெளுப்பான கங்கை மற்றும் சூர்யபுத்திரியான கறுப்பு வண்ணம் கொண்ட யமுனையும் சங்கமிப்பது போல் இருப்பதால் உனது கண்களே எங்களது பாவங்கள் அனைத்தையும் போக்கி புனிதமாக்க வல்லவை என்று கூறுகின்றார்.

அன்னையின் நயன தீக்ஷையில் நம் பாவங்கள் அனைத்தும் நீங்கி நாம் உயர்வு பெறுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Our first debut in India is at Guruvayoor

# Kerala Group of Hotels

## (A London based chain of Restaurants)

**NIVEDYAM**

RESTAURANT

Devanganam Residency (Owned by GMA)
North Inner Ring Road ,Guruvayur



### KERALA GROUP OF RESTAURANTS

**Abi Ruchi**
42, Stock Newington
Church Street
London N16 0LU
T. 020 7923 4564

**Cocum**
9 Approach Rood
Rayners Park
London SW 20 8BA
T. 020 8540 3250

**Cocum**
71 Castle Street
Cambridge CB3 0AH
T. 01223 366668
T. 01223 2569

**Cocum**
20 Bridge Road
Hampton Court
East Molesey
Surrey KT8 9HA
T. 020 8979 1531
T. 020 8941 3540

**Har Krishnan's Kitchen**
31A, Zetland Road
Bristol BS6 7AH
T. 01179 42 22 99

**Malabar Junction**
107 Great Russell St.
London WC1B 3NA
T. 020 7580 5230

**Krishna's Inn**
4 Byron Place
Triangle South
Bristol BS1 8JT
T. 01179276864

**Radha Krishna Bhavan**
86 Tooting High Street
Tooting SW17 0RN
T. 020 8767 3462
T. 020 8682 0969


**Ragam**
57 Cleveland St
London W1T 4JN
T. 020 7636 9098

**Head Office**

**The Kerala Group of Restaurants**
86 Tooting High Street, Tooting SW17 0RN
T. 020 8767 3462, M 077758 33754
www.keralagroup.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri
Valli's



Florists . Exotic Flower Imports . Flower Garland Specialists . Event Design & Decor

www.vallisuk.com

29-33
Ealing Road
Wembley
Middlesex
HA0 4YA
Phone 0208 903 0888

76
Church Road
Manor Park
London
E12 6AF
Phone 020 8514 7777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## THIRUKKARTHIKAI DEEPAM














Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**There are many reasons why people prefer to bank with SBI UK. What's yours?**

sbiuk.com
**0800 532 532**

**State Bank of India**
United Kingdom

CITY OF LONDON | BIRMINGHAM | COVENTRY | EAST HAM | GOLDERS GREEN | HARROW | HOUNSLOW | ILFORD | LEICESTER | MANCHESTER | SOUTHALL | WOLVERHAMPTON

20,000 STATE BANK GROUP BRANCHES IN 37 COUNTRIES • 300 MILLION CUSTOMERS • IN THE UK SINCE 1921
Personal Banking | Corporate Finance | Trade Finance | Money Transfer | NRI Services

*Your property may be re-possessed if you do not keep up with your mortgage repayments. You are responsible for making monthly repayments even if your property does not have a tenant. SBI's Buy-To-Let and commercial mortgages are not regulated by the FCA or PRA.

Authorised and regulated by Reserve Bank of India and Prudential Regulation Authority. Subject to regulation by the Financial Conduct Authority (FCA) and limited regulation by the Prudential Regulation Authority. Details about the extent of our regulation by the Prudential Regulation Authority and Financial Conduct Authority are available from us on request. State Bank of India is a member of the Financial Services Compensation Scheme established under the Financial Services and Market Act 2000. The Financial Services Compensation Scheme protects deposits held with our UK branches. Payments under this scheme are limited to £85,000 of your total deposits with us in the UK. In practice, this means that each eligible depositor will be compensated up to a maximum of £85,000 of their total deposits. Terms and conditions apply. For more information and clarification, visit us at our website www.sbiuk.com or visit your local branch or call 0800 532 532. The contact centre is open Monday, Tuesday, Wednesday and Friday 9.00am to 6.00pm, Thursday 9.00am to 5.00pm (effective from 02 March 2017), Saturday 9.00am to 3.00pm and Sunday closed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## WIDHAARAMBAM









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ


சிவாகம வாசஸ்பதி, வ்யாகரண சிரோமணி
**சிவஸ்ரீ Dr. செ.வா. C. கார்த்திகேய சிவாச்சாரியர்**
சைவாகம பேராசிரியர்
ஸ்ரீவேங்கடேச்வர வேத பல்கலைக்கழகம்
திருப்பதி.


## கும்பாபிஷேகத்தில் பூர்வாங்க க்ரியைகள்

### ப்ரதிஷ்டை - கும்பாபிஷேகம்

நமது ஸநாதன தர்மத்தின் ஆணிவேரான ஆலயங்களை நிர்மாணிக்கும் போது கர்ஷணம் (உழுதல்) முதலான செயல்களை ஆகமங்களில் உள்ளவாறு செய்தல் வேண்டும். அவ்வாறு புதியதான ஆலயத்தில் புதியதான மூர்த்திகளுக்கு பிம்பசுத்தி முதலான க்ரியைகளைச் செய்து ப்ரதிஷ்டை செய்யப்பட வேண்டும்.

ஆலயங்களில் செய்யப்படும் ப்ரதிஷ்டை எனப்படும் கும்பாபிஷேகமானது நான்கு விதமாக சொல்லப்பட்டுள்ளது. அவைகள் ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என்பதாகும்.

**ஆவர்த்தம்** - புதியதாக ஆலயத்தை நிர்மாணம் செய்து புதியதான மூர்த்திகளை ப்ரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தல் **ஆவர்த்தப்ரதிஷ்டை** என்று சொல்லப்படும்.

**அநாவர்த்தம்** - ஸ்வயம்பூ முதலான பிம்ப, லிங்கங்களில் மூர்த்தி ஸாந்நித்யத்தை அதிகரித்தலின் பொருட்டும், மந்த்ரபூர்வகமாக ஸ்தாபிக்கப்பட்ட பிம்ப லிங்கங்கள் மற்றும் ஆலயங்களில் பாதிக்கும் மேலாகவோ அல்லது முழுவதுமாகவோ ஜீர்ணம் (அழிவு) ஏற்பட்டால் அப்படிப்பட்ட பிம்ப, லிங்கங்கள் மற்றும் ஆலயங்களை மறுபடியும் மந்த்ரபூர்வகமாக ப்ரதிஷ்டை செய்யப்படுவது **அநாவர்த்த ப்ரதிஷ்டை** என்று சொல்லப்படும்.

**புனராவர்த்தம்** - ஆலயங்களில் மூர்த்தி ப்ரதிஷ்டை செய்யப்பட்டு முதன்முதலில் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட பிறகு குறிப்பிட்டகாலத்திற்குப்பிறகு பிம்பத்தின் ஸாந்நித்யத்தின் பொருட்டும், பராமரிப்பு பணிகளின் பொருட்டும், பிம்ப, லிங்கங்களில் ஏற்படும் சிறிய அளவிலான ஜீர்ணோத்தாரனத்தின் பொருட்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் செய்யப்படும் கும்பாபிஷேகமானது **புனராவர்த்த ப்ரதிஷ்டை** என்று சொல்லப்படும்.

**அந்தரிதம்** - பிம்பம், லிங்கம் மற்றும் ஆலயங்களில் அனாசாரங்கள் ஏற்பட்டாலும், ஸ்பர்ச தோஷங்கள் ஏற்பட்டாலும், நடக்கக்கூடாத செயல்கள் நடைபெற்றாலும் ப்ராயச்சித்தரூபமாக செய்யப்படும் கும்பாபிஷேகமானது **அந்தரித ப்ரதிஷ்டை** என்று சொல்லப்படும்.

இவ்வாறாக நான்கு விதமான கும்பாபிஷேகம் எனப்படும் ப்ரதிஷ்டைகளில் குரு ப்ரார்த்தனை முதலாக விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம், ப்ராஹ்மணானுஜ்ஞை ம்ருத்ஸங்க்ரஹணம் முதலான பூர்வாங்க க்ரியைகள் செய்யப்படவேண்டும். அவ்வாறான பூர்வாங்கக்ரியைகளின் சிறுவிளக்கமே இக்கட்டுரைத் தொகுப்பாகும்.

## குரு ப்ரார்த்தனை

நாம் எந்த செயலைச் செய்யும் போதும் நமக்கு குருவருளும் திருவருளும் முக்யமானதாகும். இவ்விரண்டும் இல்லையேல் நம்மால் எக்காரியத்தையும் சரியாகச் செய்ய முடியாது. அவ்வாறாகவே நமக்கு எச்செயலைச் செய்வதானாலும் குலதெய்வத்தின் அனுமதியும், இஷ்ட தெய்வத்தின் அருளும் முக்யமானதாகும். தெய்வத்திடம் நாம் செய்யும் அபராதத்தை குருவின் திருவருள் கொண்டு நீக்கிவிடலாம். ஆனால் குருவினிடம் நாம் செய்யும் அபராதத்தை தெய்வத்தாலும் போக்க இயலாது. அத்தகைய உயர்வான குருவை நாம் எப்போதும் நினைத்துக் கொண்டு இருத்தல் வேண்டும் என்பதின் பொருட்டு ஒவ்வொரு செயலின் ஆரம்பத்தின் போதும் குரு ப்ராத்தனையைச் செய்ய வேண்டும். **ஸ்ரீஸத்குரு சரணாரவிந்தாப்யாம் நம:** என்பதின் பொருள் நான் என் குருவின் தாமரைக்கொப்பதான இரண்டு பாதங்களையும் நமஸ்கரிக்கின்றேன் என்பதாகும்.

## விக்னேஶ்வர பூஜை

விக்னேஶ்வரரின் பெருமை அளவிடமுடியாதது. அனைத்து செயல்களும் இடையூறு இன்றி நிறைவேறுதல் கணபதியின் பெருங்கருணையால் மட்டுமே நடைபெறும். அதனாலேயே நாம் கணபதியை முழுமுதற்கடவுள் என அழைக்கின்றோம். எந்தவொரு செயலை ஆரம்பிக்கும் முன்பும் விக்னேஶ்வர ப்ரார்த்தனையைச் செய்ய வேண்டும்.

மஞ்சளினால் கூம்பாக பிடித்துவைத்து அதில் விக்னேச்வரரை ஆவாஹனம் செய்து பூஜித்து அர்ச்சனைகள் செய்து நிவேதனம் செய்வித்து கற்பூர ஹாரத்தி செய்து உபசாரங்களைச் செய்து, நான் ஆரம்பிக்கும் இச்செயலானது இடையூறு இல்லாமல் நிறைவேற வேண்டும் என ப்ரார்த்தனை செய்ய வேண்டும். பிறகு புண்யாஹவாசன ஸங்கல்பம் முடிந்தபிறகு அந்த மஞ்சளினால் ஆன பிள்ளையாரை யதாஸ்தானம் செய்விக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புண்யாஹவாசனம்

பு என்ற அக்ஷரம் பாபத்தை போக்கடித்தலையும், ண்ய என்ற அக்ஷரம் தேஹ ஶுத்தியையும், ஹ என்ற அக்ஷரம் இடத்தின் ஶுத்தியையும் சொல்வதால் இதற்கு புண்யாஹம் என்பதாக பெயர் சொல்லப்படுகிறது. வாசனம் என்றால் உச்சரித்தல். புண்யாஹத்தைச் செய்யும் மந்த்ரங்களை உச்சரிப்பதனால் இந்த க்ரியைக்கு புண்யாஹவாசனம் எனப் பெயர்.

நம்மால் செய்யப்படும் க்ரியைகள் ஶுத்தமான இடத்திலேயே நடைபெறவேண்டுமாதலால் நம்மையும் இடத்தையும் தூய்மைப்படுத்தும் செயலாக இந்த புண்யாஹவாசனம் செய்யப்படுகிறது.

புண்யாஹவாசன மந்த்ரங்களினால் ஶுத்தம் செய்யப்பட்ட இடங்களில் செய்யப்படும் க்ரியைகள் பூர்ணபலனை நமக்கு அளிக்கவல்லது. ஆகையால் அனைத்து க்ரியைகளின் ஆரம்பத்திலும் கண்டிப்பாக புண்யாஹவாசனம் செய்தல் வேண்டும்.

## ப்ராஹ்மணானுஜ்ஞா

நாம் தினமும் பரார்த்த லிங்கத்தை தரிசிக்க வேண்டும் என்பது நியமமாகும். அதனாலேயே "கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழி சொல்லப்பட்டது. அவ்வாறாக ஒவ்வொரு ஊரிலும் உள்ள கோவிலில் சதுர்வேத பாராயணம் தினமும் செய்ய வேண்டும். "ப்ராஹ்மணோ வை ஸர்வா தேவதா:" என்பதாக வேதம் ப்ராஹ்மணர்களுடைய உயர்வைச் சொல்கின்றது. அவ்வாறாக நமது வைதிக க்ரியைகளில் அனைத்து செயல்களுக்கும் ப்ராஹ்மணர்களுடைய அனுக்ஞையை (அனுமதியைப்) பெறுதல் வேண்டும். முதலில் ப்ராஹ்மணர்களை அழைத்து ஆஸனம் அளித்து, உபசாரங்கள் செய்து தக்ஷிணை அளித்து நாம் செய்யப்போகின்ற செயலைச் சொல்லி அதற்கு அனைவரும் உறுதுணையாக இருந்து செய்தல் வேண்டும் என ப்ரார்த்தனை செய்து அனுமதி பெறுதல் வேண்டும்.

## தேவதானுஜ்ஞா

ஆலயங்களில் விசேஷமான முறையில் பூஜை முதலானவைகளைச் செய்யும் போது அந்தந்த ஆலயத்தின் ப்ரதான மூர்த்தி முதலான மூர்த்திகளிடம் முறையாக அனுமதி பெறல் வேண்டும். முதலில் அனுக்ஞா பாத்ரத்தை எடுத்துக்கொண்டு கோவிலை வலமாக வந்து மூலாலயத்தில் ஆஸநாத்யாவரணபூஜை வரை செய்து பிறகு நாங்கள் தங்களுடைய ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை செய்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என ப்ரார்த்தனை செய்து அனுமதியைப் பெற வேண்டும். அவ்வாறாகவே மற்ற உபாலயங்களிலும் ப்ரார்த்தனை செய்ய வேண்டும்.

## யஜமான ஸங்கல்பம்

எந்த ஒரு செயலுக்கும் ஸங்கல்பம் மிகவும் முக்யமானதாகும். கல்பம் என்ற சொல்லுக்கு நினைத்தல் என்பது பொருள். இங்கு ஸம் என்ற உபஸர்கம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொட்டு (Prefix) நல்ல என்ற பொருளைத் தரும். ஆகவே ஸங்கல்பம் என்ற சொல்லுக்கு **நல்லதை நினைத்தல்** என பொருளாகும்.

நாம் கும்பாபிஷேகம் முதலான மிகப்பெரிய ஸத்கார்யங்களைச் செய்யும்போது அதன் மூலம் உலக நன்மை பெற வேண்டி யஜமானர் / யஜமானர்கள் ஸங்கல்பம் கண்டிப்பாக செய்தல் வேண்டும். இவ்வாறான ஸங்கல்பத்தின் போது நம்முடைய குறிக்கோள்களை இறைவனிடத்தில் விண்ணப்பிக்க வேண்டும். ஒவ்வொரு க்ரியைகளுக்கும் ஒவ்வொருவிதமான ஸங்கல்பம் சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக ஸர்வே ஜநா: ஸுகினோ பவந்து என்பதாக நினைத்து உலகத்தில் உள்ள ஜீவராசிகள் அனைத்தும் தர்ம மார்க்கத்தில் ப்ரவர்த்திக்க வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்து நாமும் நமது ஸந்ததிகளும் ஸ்ரீபரமேஶ்வரரின் அனுக்ரஹத்தினால் இஹ பர ஸுகத்தை அடையவும், அந்தந்த க்ஷேத்ரத்தில் உள்ள அனைவரும் தர்ம மார்க்கத்தின் மூலமாக அனைத்துவிதமான நற்பயன்களை அடையும் பொருட்டும் மஹாஸங்கல்பத்தைச் செய்து கொள்ள வேண்டும்.

## தீபஸ்தாபனம்

ஜ்யோதி: ப்ரபத்யே தியா என்பது சைவ ஸித்தாந்தஸாராவளி வாக்யமாகும். ஸதாசிவர் ஜ்யோதி ஸ்வரூபமானவர். எங்கும் நிறைந்திருக்கும் நிஷ்கள ஸ்வரூபரான பரமேஶ்வரரையே நாம் ஜ்யோதிஸ்வரூபராக த்யானிக்கின்றோம். அவ்வாறு கர்ப்பக்ருஹத்திலே தீபஸ்வரூபராக பரமேஶ்வரரே இருக்கின்றார். ஆலயங்களில் நாம் தீபத்தில் பரமேஶ்வரரை வழிபட்டு சந்த்ர ஸூர்யர்கள் உள்ளவரையில் இவ்வாலயத்தில் இந்த தீபமானது ஜ்வலித்துக்கொண்டிருக்கவேண்டும் என ப்ரார்த்தனை செய்து தீபஸ்தாபனத்தைச் செய்ய வேண்டும்.

## தனபூஜை

ஆலயங்களில் கும்பாபிஷேகம் செய்வதற்கு முன்பாக தனபூஜை செய்யப்படவேண்டும். ஏனெனில் பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை, அருளில்லார்க்கு அவ்வுலகில்லை என்பது முதுமொழி. அதற்கேற்ப கும்பாபிஷேகத்திற்கும், அதன்பிறகு மண்டலபூஜைகளுக்கும், நித்ய நைமித்தக காம்ய பூஜைகளுக்கும் பொருளானது அத்யாவஶ்யமாகும். அவ்வாறு தேவைப்படும் ஸ்வர்ணம் முதலான நாணயங்கள், நவரத்னங்கள் முதலான த்ரவ்யங்களைக் கொண்டு தனபூஜை செய்யப்படவேண்டும்.

யஜமானர் யஜமானர்கள் கும்பாபிஷேகம், நித்ய நைமித்திக பூஜைகளுக்குத் தேவையான ஸ்வர்ணம் முதலான த்ரவ்யங்களை ஆசார்யரிடத்தில் ஸமர்ப்பிக்க வேண்டும். ஆசார்யர் அந்த ஸ்வர்ணம், நவரத்னங்கள் முதலானவைகளை வைத்து பூஜை செய்ய வேண்டும்.

கும்பாபிஷேகத்தில் செய்யப்படும் க்ரியைகள் அனைத்தும் தெய்வாம்சம் பொருந்தியவைகள். அவ்வாறாகவே இந்த ஸ்வர்ணம் முதலாவைகளில் உள்ள ஸாமான்ய தோஷங்கள் நீங்கி ஸத்விநியோகம் செய்யப்படவேண்டும் எனவும், இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்ரவ்யங்களும் தெய்வாம்சம் பொருந்தியவைகளாக இருக்க வேண்டும் எனவும் ப்ரார்த்தனை செய்ய வேண்டும்.

கும்பாபிஷேகத்திற்கு முன்பாகவே ஆலயத்தில் தினந்தோறும் நடைபெறக்கூடிய நித்ய பூஜைகளுக்குண்டான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். யஜமானர் அல்லது நிர்வாகத்தினர் கோவிலுக்கு என தனது சொத்தில் ஒரு பகுதியை நித்ய பூஜைகளுக்கும், அர்ச்சகர்களுக்கும் மற்றும் ஏனைய செலவினங்களுக்குமாக பிரித்து நிர்ணயம் செய்து தனபூஜையைச் செய்தல் வேண்டும்.

## கோபூஜை

கோ ப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம் லோகாஸ்ஸமஸ்தா: ஸுகினோ பவந்து. என நாம் நித்யமும் ஆத்மார்த்த பரார்த்த பூஜைகளில் இறைவனித்தில் ப்ரார்த்தனை செய்து வருகிறோம். கோ என்றால் பசு. அவ்வாறு பசுவிற்கு முதலிடம் நம் ப்ரார்த்தனைகளில் சொல்லப்பட்டதிலிருந்து பசுவின் பெருமையை நம்மால் அறியமுடிகிறது. பசுவினுடைய சரீரத்தில் அனைத்து தேவதைகளும் நித்யம் வஸிக்கின்றனர். கோபூஜையின் மூலம் நாம் அனைத்து தேவதைகளையும் பூஜித்தவர்களாகிறோம். அதனாலேயே நித்யமும் ஆலயங்களில் கோபூஜை செய்யப்பட்டு வருகின்றது. பசுவின் பெருமையை பல ஆகமங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. வேதம், ஸ்தோத்தரங்கள் என அனைத்து நூல்களும் பசுவின் பெருமையை பலவாறாகக்கூறுகின்றன. பசுவின் பல அங்கங்களில் பல தேவதா ஸ்வரூபங்களை பல நூல்கள் விவரித்துள்ளன. ஸகலதேவதைகளின் இருப்பிடமாக பசு இருக்கின்றது. பசுவினிடமிருந்து கிடைக்கும் பால், தயிர், நெய், கோமயம், கோஜலம் முதலானவைகளால் பஞ்சகவ்யம் தயாரிக்கப்படுகிறது.

## கஜபூஜை

ஆலயங்களில் ஸுப்ரபாத பூஜையின் போது கோதர்சனமும் ஸ்வாமியின் பூஜைக்குப்பிறகு கோபூஜையும் கஜபூஜையும் செய்யப்பட்டு வருகின்றது. முழுமுதற்கடவுளான கணபதி யானைமுகத்தினராகவே உள்ளார். இதிலிருந்து கஜபூஜையின் முக்கியத்துவத்தை நாம் அறியலாம்.

இந்த்ரனுடைய ஐராவதம் எனப்படும் யானையானது பாற்கடலிலிருந்து உற்பத்தியானது. கஜபூஜை நமக்கு அளவில்லா ஐஶ்வர்யத்தைத் தரவல்லது. உயர்ந்ததான வாஹனமாக கஜவாஹனம் சொல்லப்பட்டுள்ளது. அதனாலேயே இக்காலத்தில் சிறந்த வித்வான்களை கௌரவிக்கும் விதமாக யானையின் மேல் அமர்த்தி வலம்வரச் செய்தல் வழக்கில் உள்ளது. மேலும் நாட்டின் அரசனும்கூட யானையின்மேல் வரும் வழக்கம் உள்ளது.

அவ்வாறாவே பூஜையின்போதும் பரமேஶ்வரரே இந்த ப்ரபஞ்சத்தின் கர்த்தா (தலைவர்) என்பதை உணர்த்தும் பொருட்டும், இவ்வுலகில் ஐஶ்வர்யங்களின் பொருட்டும், ஸாம்ராஜ்யத்தின் பொருட்டும் கஜபூஜை செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்ருத்ஸங்க்ரஹணம்

**ம்ருத்** என்றால் மண். **ஸம்** என்றால் நல்ல, **க்ரஹணம்** என்றால் எடுத்தல். ம்ருத்ஸங்க்ரஹணம் என்றால் தெய்வகார்யத்தின் பொருட்டு நன்முறையில் புனிதமண் எடுத்தல் எனப்படும்.

எல்லாவிதமான பாபங்களை போக்கடித்தலும், புண்யத்தைத் தருவதும், எல்லாவிதமான தோஷங்களை நீக்குதலும் ஜீவராசிகளுக்கு மங்களத்தைத் தருவதும், ஸர்வ ஶாந்தியைத் தருவதுமென ம்ருத்ஸங்க்ரஹணத்தின் பலன் சொல்லப்பட்டுள்ளது.

ப்ரதிஷ்டை, உத்ஸவம், ஸ்நபனம், கும்பாபிஷேகம், ப்ராயச்சித்த கர்மாக்கள், தீக்ஷை, அஷ்டபந்தனம் மற்றும் மற்ற மங்கள கார்யங்களுக்காக அங்குரார்ப்பணம் செய்ய வேண்டும். அதன்பொருட்டு ம்ருத்ஸங்க்ரஹணம் செய்யப்பட வேண்டும்.

புனிதமான நதிக்கரை, புண்யதீர்த்தக்குளம், ஆலயத்தின் நந்தவனம், புற்றுஅடி, கடற்கரை, வில்வமரத்தடி முதலான இடங்களிலிருந்து புனிதமண்ணை எடுத்தல் வேண்டும்.

இவ்வாறான ஏதாவதொரு புனித இடத்தில் மந்த்ரங்களினால் சதுஷ்பதம் செய்து பூஜித்து அதன் நடுவில் பூமிதேவியை பூஜிக்கவேண்டும். அதைச்சுற்றி இந்த்ராதி லோகபாலர்களை பூஜித்து ஶஸ்த்ர மந்த்ரத்தால் மண்வேட்டியை பூஜித்து உபசாரங்களைச் செய்து, அஸ்த்ர மந்த்ரத்தால் மூன்று முறை மண்ணை எடுத்து மூலமந்த்ரத்தால் ஸ்தாலியில் சேர்க்க வேண்டும். பூமியைத் தோண்டியதற்காக அந்த இடங்களில் யவம் முதலான தான்யங்களை போட்டு மண்ணால் ஸமப்படுத்தவேண்டும். பட்டு வஸ்த்ரங்களால் அந்த ஸ்தாலியை மூடி வாத்யத்துடன் கூட ஆலயத்தை அடையவேண்டும்.

## ப்ரவேஶ பலி:

நூதனமாக ஆலயங்கள் மற்றும் க்ரஹம் நிர்மாணிக்கும் போதும் ப்ரவேஶபலி என்ற க்ரியையை கண்டிப்பாகச் செய்ய வேண்டும். பழைய ஆலயங்களில் நூதனமான உபாலயங்களோ அல்லது நூதன ப்ரதிஷ்டையோ செய்ய வேண்டி இருந்தால் மட்டும் ப்ரவேஶபலி செய்யப்பட வேண்டும்.

க்ராமம், ஆலயம் முதலியவைகளின் அபிவ்ருத்திக்காகவும், ராஜா மற்றும் தேசத்தின் நன்மைக்காகவும், ஸ்தலத்தில் வசிப்போரின் ஸுகத்தின் பொருட்டும் ப்ரவேஶபலி க்ரியையைச் செய்ய வேண்டும்.

க்ராமத்திலோ அல்லது நகரத்திலோ ஆலயங்கள் அமைக்கும் முன்பாக அந்தந்த இடங்களில் எட்டு திக்குகளிலும் உள்ள யக்ஷன், முதலானவர்களை பூஷணி மற்றும் மற்ற பலி த்ரவ்யங்களால் த்ருப்தி செய்து அவர்களை அவர்களுடைய ஸ்தானத்திற்கு செல்லும்படி ப்ரார்த்தித்து அந்தந்த இடங்களில் இந்த்ரன் முதலான எட்டு திக்பாலகர்களை ஸ்தாபித்து பூஜை செய்ய வேண்டும். அவர்களை ஸதா ஸர்வகாலமும் இந்த இடத்தை ரக்ஷிக்கவேண்டுமாய் ப்ரார்த்தனை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரக்ஷோக்னஹவனம்

ஆலயங்களில் யாகபூஜைகளுக்கு விக்னமானது பலவிதமாக வரும். ஆகவே எல்லாவிதமான விக்ன நிவ்ருத்திக்காகவும் ரக்ஷோக்னஹோமம் செய்யப்படவேண்டும்.

ஆலயங்களில் பசு, பக்ஷி, ம்ருகங்கள் முதலானவைகள் மரணித்தாலோ, அனாசாரங்கள் முதலியவைகள் நடந்தாலோ மற்றும் எல்லாவிதமான தோஷநிவ்ருத்தியின் பொருட்டும் ரக்ஷோக்னஹோமம் செய்யப்பட வேண்டும்.

வேதிகையின் மத்யத்தில் பத்மம் அமைத்து அதில் ஒரு கலசத்தை வைத்து அதில் ரக்ஷோக்னதேவரையும், தக்ஷிணவேதிகையில் மட்டையுடன்கூடிய தேங்காயை வைத்து ஸதாஶிவரையும், உத்தரவேதிகையில் ரக்த வஸ்த்ரத்தின் மேல் கட்கம் (கத்தி) யையும் வைத்து பூஜிக்க வேண்டும். பிறகு பலியின் பொருட்டு ஸ்தண்டிலம் அமைத்து பலியைத் தந்து பிறகு அக்னிகார்யம் முதலானவைகளைச் செய்ய வேண்டும்.

## வாஸ்து ஶாந்தி:

வாஸ்து என்ற சொல்லிற்கு வஸிப்பிடம் - இருப்பிடம் என்று பொருள். பரமேஶ்வரர் இருக்கும் இடத்தில் உள்ள தோஷங்களைக் நீக்கி அங்கு தெய்வ ஸாந்நித்யத்தை ஏற்படுத்துவதன் பொருட்டு செய்யப்படும் க்ரியை வாஸ்துஶாந்தியாகும்.

ஸ்ரீபரமேஶ்வரர் அந்தகாசுரனை ஸம்ஹாரம் செய்யும் காலத்தில் ரணபூமியில் சிவபெருமானுடைய வியர்வைத்துளி விழுந்தது. அது மிகப்பெரிய அஸுரனாக உருவெடுத்து கோரமான பசியினால் உலகையே விழுங்க முற்பட்டது. அப்போது பரமேஶ்வரரின் ஆக்ஞைப் படி வீரபத்ரர் அந்த அஸுரனை கீழே தள்ளி அவன் எழுந்திருக்கமுடியாமல் அவன்மீது ப்ரஹ்மா முதலான 53 தேவதைகளை வஸிக்கச்செய்யுமாறு பணித்தார். அவ்வஸுரனுடைய பசி நீங்குவதன் பொருட்டு உலகவடிவிலான பூஷணிக்காயை உணவாகக் கொடுத்தார். அவ்வஸுரனுக்கு வாஸ்துபுருஷன் என்று பெயர். வாஸ்துமண்டலத்தில் மத்யத்தில் ப்ரஹ்மாவும், மற்ற தேவதைகள் ஒவ்வொரு அங்கங்களையும் அதிஷ்டித்து இருக்கின்றனர். அதனாலேயே நாம் ப்ரம்மகலசத்தை வாஸ்துமண்டலத்தின் நடுவில் வைத்து பூஜிக்கின்றோம்.

வாஸ்துமண்டலங்கள் பல விதமாக சொல்லப்பட்டுள்ளன. அதில் தற்போது ப்ரஸித்தமாக உள்ள பதங்கள் மண்டூகம் மற்றும் பரமசாயி எனப்படும். மண்டூகபதத்தில் 64 பதங்களும், பரமசாயி பதத்தில் 81 பதங்களும் சொல்லப்பட்டுள்ளன. இவ்விரண்டு பதங்களிலும் மொத்தம் 53 தேவதைகள் சொல்லப்பட்டுள்ளன. பதங்களுக்கு ப்ரத்யேகமான நிறங்களும், ப்ரத்யேகமான பலி த்ரவ்யங்களும் சொல்லப்பட்டுள்ளன. பூஜை, பலி, ஹோமம் முடிவில் வாஸ்துபுருஷ உருவத்தைச் செய்து பூஜித்து அதை தீயிட்டு ஆலயத்தை வலம்வந்து முடிவில் ஈஶானத்தில் விஸர்ஜனம் செய்ய வேண்டும். பிறகு ஆசார்யர் முதலானவர்கள் ஸ்நானாதிகளைச் செய்து அடுத்த க்ரியையைத் தொடரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்குரார்ப்பணம்

அங்குரார்ப்பண க்ரியை நாம் செய்யக்கூடிய க்ரியைக்கு மங்களத்தைத் தரவல்லதாகும். சாஸ்த்ரப்படி எடுத்துவரப்பட்ட ம்ருத்திகையை தனி யாகசாலையிலோ அல்லது யாகசாலையின் வாயு பாகத்திலோ வைத்து அங்குரார்ப்பண பூஜையைத் செய்ய வேண்டும். ப்ரதிஷ்டை, உத்ஸவம், மற்றும் அதிவாஸத்துடன் கூடிய க்ரியைகளுக்கோ அல்லது அதிவாஸம் அல்லாத ஸத்ய (உடனக்குடன்) செய்யும் க்ரியைகளுக்கோ அங்குரார்ப்பணம் செய்ய வேண்டும். மூன்று கலசங்கள் வைத்து பூஜை செய்ய வேண்டும். காலதேசவர்த்தமானத்தை அனுஸரித்து 12 முதல் அதிகமான பாலிகைகள் வைத்து பூஜிக்கலாம். யாகசாலை பூஜைகள் நடக்கும் தினங்களில் காலை, மாலை இருவேளைகளிலும் அங்குரார்ப்பணபூஜையைச் செய்ய வேண்டும். க்ரியையின் முடிவில் அங்குரார்ப்பணத்தை விஸர்ஜனம் செய்ய வேண்டும். பாலிகைகளில் அங்குரங்களின் தன்மையைப் பொருத்து பலன்களை அறியவேண்டும்.

## ப்ரதிஸரபந்தனம் (ரக்ஷாபந்தனம்)

ப்ரதிஸரபந்தனம் என்றால் ரக்ஷாபந்தனம் (காப்பு கட்டுதல்) எனப்படும். யாகசாலையில் ரக்ஷாஸூத்ராங்களுக்கு பூஜை செய்யவேண்டும். சிவலிங்கத்திற்கு லிங்கத்தின் ருத்ரபாகத்திலும், பீடத்தின் நாளப்பகுதியிலும், ஆண்தெய்வங்களுக்கு வலது கையிலும், பெண் தெய்வங்களுக்கு இடது கையிலும், வ்ருஷபத்திற்கு கொம்பிலும் ரக்ஷாபந்தனத்தைச் செய்ய வேண்டும்.

ஆசார்யருக்கும் ரித்விஜர்களுக்கும் வலதுகையில் ரக்ஷாபந்தனத்தைச் செய்யவேண்டும். ரக்ஷாபந்தனம் செய்யப்பட்ட ஆசார்யர், ரித்விஜர்கள் முதலானோர்களுக்கு ஆசௌசம் முதலான தோஷங்கள் ஏற்படாது. ரக்ஷை என்பது காப்பு (காத்தல்) என்பதாகவும், பந்தனம் என்றால் கட்டுதல் எனவும் பொருள்படும்.

## கும்பாலங்காரம்

கும்பாலங்காரத்தில் கும்பம் என்ற பதம் கடம், கலசம், வர்த்தனீ ஆகிய அனைத்தையும் பொதுவாக குறிக்கும். அலங்காரம் என்பது நாம் தேவதா மூர்த்தியை கும்பத்தில் எழுந்தருளச்செய்வதின் பொருட்டு கலசத்தை இறைவனுடைய ஶரீரமாக மாற்றுவதற்காக ஸூத்ரவேஷ்டனம் வஸ்த்ரதாரணம் முதலியவைகளால் அலங்கரித்தலாகும். கும்பாலங்காரத்தில் மந்த்ரவடிவான கும்பம் தேவதா ஸ்வரூபமாகவும், அதன் அலங்காரமானது அங்கங்களாகவும் கருதப்படுகின்றன. ஸ்வர்ணம், ரஜதம், முதலான உலோகங்களால் தேவதா கும்பங்கள் சொல்லப்பட்டுள்ளன.

கும்பாலங்காரத்தின் போது தேவதா ஸ்வரூபமான கும்பத்திற்கு அடியில் வைக்கப்படும் ஸப்த தான்யங்கள் தேவதையினுடைய ஸப்த ஆஸனங்களாகும். கும்பத்திற்கு வெளியே பூசப்படும் செம்மண் ரக்தமாகவும், சுற்றப்படும் நூல் நாடி நரம்புகளாகவும். உள்ளே போடப்படும் மண் வகைகள் மாம்ஸமாகவும், புனித நீரானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதஸ், மஜ்ஜாவாகவும், அந்தக்கூர்ச்சம் எலும்பாகவும், ஸ்வர்ணம் நவரத்னங்கள் முதலியவை ஶுக்லமாகவும், தேங்காய் ஶிரஸ்ஸாகவும், பட்டு முதலான வஸ்த்ரங்கள் மேல் தோலாகவும், பஹிக்கூர்ச்சம் சிகையாகவும், பத்ரங்கள் ஜடையாகவும், மந்த்ரங்கள் உயிராகவும் உள்ளன.

கும்பாலங்காரத்தின் ஒவ்வொரு பொருளும் மந்த்ரங்களுடன் கூடியதாகவே அமைக்கப் படுகின்றன. ஆகவே அனைத்து பொருட்களும் மந்த்ர ஶக்தியோடு கூடியிருப்பதால் கும்பாலங்காரம் செய்யப்பட்ட கும்பம் இறைவனின் வித்யாதேஹகும்பம் என அழைக்கப்படுகிறது

## கலாகர்ஷணம்

மூலபிம்பத்திலிருந்து வித்யாதேஹ வடிவான கும்பத்தில் பரமேஶ்வரரின் கலைகளை அல்லது கலைகளின் ஒரு பகுதியை ஆகர்ஷணம் செய்வது கலாகர்ஷணம் என்று அழைக்கப்படுகிறது.

ஆகமங்களில் சொல்லப்பட்ட லக்ஷணங்களை உடைய ஆசார்யர் மந்தரவடிவான கும்பத்தை இறைவனின் முன்பு நிறுத்தி கலாகர்ஷணம் செய்வித்து கும்பாபிஷேகத்தின் பொருட்டு தாங்கள் இக்கும்பத்தில் எழுந்தருளி அனுக்ரஹம் செய்ய வேண்டும் என ப்ரார்த்தனை செய்ய வேண்டும்.

மூலாலயத்திலிருந்து கலாகர்ஷணத்தின் பொருட்டு ஶாந்தி ஹோமமும், பிறகு யாத்ரா ஹோமமும், க்ஷண ஹோமமும் செய்ய வேண்டும். பிறகு ஆலய ப்ரதக்ஷிணமாக யாகசாலை ப்ரவேசம் செய்து யாகபூஜைகளைச் செய்ய வேண்டும்.

---------------


"A Reservoir of Hope with a Road Map to your Life"




Dr.Sri.Jayaprakash Kutty

Astro Palm Specialist &
Spiritual Healer




Sri Swamiji

Astrology & Palm Reading
Numerology & Gemstone Consultation
Other Psychic Consultation

Aura Reading & Cleromancy
Clairvoyance & Distant reading
Temple Golden Consultation

Swamiji Dr.Sri.Jayaprakash Kutty is a true reservoir of hope for tens of thousands of people in India and across the globe over the past three and half decades. He is the elder of son of Prof. TMR. Kutty and has got his own mellifluent style of predictions and predicted for more than a million people across globe. Even though he has got this inherent quality from his great world renowned father. he need not even look at the face or Palm of any body to give apt and absolute prediction! The voice of any body is enough to catch and absorb the problems past, present and future, and gives immediate solutions. The Thiru Thevar Devasthanam is more than 300 year old and with traditional worship.

Thiru Thevar Pazhani Murugan Devasthanam

Panangattiri(P.O), Kollengode, Palakkad Dt., Kerala St., India.

Contact : Mobile : +91 9495546859, 9495835429 , Whatsapp + 91 9495835429
TelePhone : +91 04923266469 , E-mail : astrologerjpkutty@gmail.com
jayaprakashkutty@palmjyothisham.com, web:www.palmjyothisham.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் சுரக்கும் பேரழகன்
# இலண்டன் ஸ்ரீ முருகன்

மதிப்பிற்குரிய பக்தப்பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையான நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் வழிபட்டு வந்தது தமிழ் முதல் முதற் கடவுள் திரு முருகன். ஐரோப்பா கண்டத்தில் உலகின் தலை சிறந்த நாகரிகமான இங்கிலாந்து இலண்டன் மாநகரில் இந்துக்களின் சாதனையாக வானளாவி தோன்றி அருகுபோல் வேரூன்றி ஆல்போல் வளர்ந்து நின்று பக்தர்களின் சரணாலயமாக ஏழாவது படை வீடாக அமர்ந்து அனைத்து மக்களுக்கும் கற்பக விருட்சமாக அருள்பாலித்து வரும் நம் இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம் உருவாகிய வரலாறு.

ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்னதாக நல் வாழ்வாதாரத்தைத் தேடியும், வியாபார நிமித்தமாகவும் நாகரீக இலண்டன் மாநகருக்கு புலம்பெயர்ந்த நம் முன்னோர்கள் அக் காலகட்டங்களில் பலதரப்பட்ட இன்னல்களுடன் அவரவர்கள் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிசெய்து கொண்டு அதே வேளையில் நம் மக்களை ஆன்மீக வழியில் நடத்திச் செல்லவும் நம் சமயம், தமிழ் கலாச்சாரம் இவைகளை நம் வருங்கால சந்ததியினர்கள் கடைபிடிக்கும் விதமாகவும், கலந்து ஆலோசித்து, அத்துடன் கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதினை நன்குணர்ந்து, அதற்கான நல்வழி இறைவழிபாடு ஒன்றே என்று தீர்க்கமான முடிவெடுத்து அதன்படி நம் தமிழ்க் கடவுள் திரு முருகனை வைத்து வழிபடுவது என தீர்மானித்து பேருள்ளம் கொண்ட அன்றைய பெரியோர்கள் 1975 ஆம் ஆண்டில் முதன் முதலாக இந்த இலண்டன் மாநகருக்கு ஏற்றவாறு ஆடம்பரம், அலங்கார புருஷனாக நமது திருமுருகன் திருஉருவப்படத்தை வைத்து இலண்டன் ஸ்ரீ முருகன் என பெயர் சூட்டி வடமேற்கு இலண்டன் திரு திருமதி மெய்யப்பன் அவர்கள் இல்லத்தில் 20B, Harrington Squres, London NW1 குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட பக்தர்களுடன் தொடங்கப்பட்டது.

அதன் பின்னர் படிப்படியாக பலதரப்பட்ட மக்களின் ஒருங்கிணைந்த உழைப்பால் பல்வேறு இடங்களில், மற்றும் அரங்கங்களில் தற்காலிகமாக அமர்ந்து அருள்பாலித்து வந்த முருகன் 1978 ஆம் ஆண்டில் கிழக்கு இலண்டன் ஈஸ்ட்ஹாம் மானோர்பார்க்கில் Plashet பள்ளியில் அமர்ந்து ஒவ்வொரு மாதமும் முறைப்படியான பூஜை முறைகளுடன் அருள்பாலித்து வந்தார். அதனைத் தொடர்ந்து அன்றைய நம் சமுதாயத்தினர்கள் அரும்பாடு பட்டு டாக்டர் அழகராஜா அவர்கள் தலைமையில் 1983 ஆம் ஆண்டில் திரு முருகன் ஆலயத்திற்கென ஒரு இடத்தை வாங்கி திரு இராஜேந்திர ஸ்தபதி அவர்களால் ஆகம சாஸ்திரங்கள்படி ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சிவன் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ முருகன் ஆகிய தெய்வங்களுக்கு தனித்தனியாக கருவறைகள் அமைக்கப்பெற்று ஒரு சிறப்பான ஆலயத்தை உருவாக்கி 1984ஆம் ஆண்டு பிப்ரவரி 12ம் தேதி தமிழகத்தில் தலை சிறந்த சிவாச்சாரியர்கள் சிவஸ்ரீ அய்யாமணிசிவம் சிவாச்சாரியர், சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் ஆகியோரின் தலைமையில் மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பக்தர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் கருத்தில்கொண்டு ஆலய தலைவர் திரு சி சம்பத்குமார் அவர்கள் தலமையில் ஆலய உறுப்பினர்கள், அறங்காவலர்கள்/நிர்வாகக் குழு, ஆலய சிவச்சாரியார்கள், மேலாளர் சக உழியர்கள் அனைவரும் நன்கு கலந்து ஆலோசித்து கோயில் அருகாமையிலுள்ள பல வீடுகள், வியாபார கட்டிடங்கள் ஒவ்வொன்றாக வாங்கி ஸ்ரீ முருகன் ஆலய விஸ்தரிப்புக்கென்று போதிய அளவு இடங்கள் வாங்கிய பின்னர் புதிய கோவில் வரைபடம் தயார் செய்து 1997ஆம் ஆண்டு- London Borough of New Ham Council – Planning Application கட்டிட அனுமதிக்காக விண்ணப்பிக்கப்பட்டு 1999ஆம் ஆண்டு புதுக்கோயில் கட்டுவதற்கான அனுமதி பெறப்பட்ட பின்னர் உலகின் பல பாகங்களில் ஆலயங்கள் பல அமைத்து புகழ் பெற்ற பத்மஸ்ரீ திரு முத்தையா ஸ்தபதி மற்றும் Freeman – Local Architect அவர்கள் மூலம் நமது இந்து சமயத்திற்கென்று அன்றைய வசதிக்கேற்ப அனைத்து வசதிகளுடன் இராஜ கோபுரத்துடன் கருங்கல்லினாலான ஒரு உன்னதமான ஆலயத்தை முதன் முதலில் ஐரோப்பா கண்டத்தில் கட்டி முடித்து 2005 மே மாதம் 22ஆம் தேதி தமிழ் நாட்டில் தலைசிறந்த சிவாச்சாரியார் பெருமக்கள் முறையே டாக்டர் சிவஸ்ரீ பிச்சைக்குருக்கள், சிவஸ்ரீ சந்திரசேகர பட்டர், சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார், இலங்கையைச் சேர்ந்த கீரிமலை சிவஸ்ரீ நகுலேஸ்வர சிவாச்சாரியார், நமது ஆலய தலமைக் குருக்கள் கயிலை நாகநாதசிவம், மற்றும் நமது ஆலய அனைத்து சிவாச்சாரியார்கள் அத்துடன் இலண்டன் மாநகரில் அமைந்துள்ள ஏனைய அனைத்து ஆலய சிவாச்சாரியார்கள் ஒத்துழைப்புடன் அனைத்து பக்தகோடிகள், பிரமுகர்கள் சூழ மகா கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடைபெற்றது.

இரண்டு கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 ஆண்டுகள் பூர்த்தியாகி இன்று நமது ஆலயம் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர் வரும் 3.7.2017 திங்கட்கிழமை அன்று காலை வெகு விமரிகையாக நடைபெற உள்ளது. இத்தருணத்தில் பக்தப்பெருமக்கள் அனைவரும் வந்திருந்து அனைத்து பூஜைகளிலும் கலந்துகொண்டு முருகன் திருவருள் பெறவேண்டுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அளவிற்கு மிகச் சிறப்பான ஆலயத்தை உருவாக்கி தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து நிற்கும் அளவிற்கு உயர்த்திய நல் இதயங்களை இத்தருணத்தில் உங்கள் அனைவரது சார்பாகவும் மலர் தூவி வாழ்த்தி வணங்குகிறோம். கனவாக நினைத்து நிஜமாக உருவாக்க பாடுபட்ட நல்ல உள்ளங்களில் ஒருசிலர் இன்று நம்மோடு இல்லாவிட்டாலும் பெரும்பாலான நல் இதயங்கள் இந்த ஆலயத்தின் வளர்ச்சியினை கண்டுகளித்து இறையருள் பெற்று பேரானந்தமாக வாழ்வதை நாம் நம் கண்கூடாக காண்கின்றோம்.

கடல் தாண்டி உலகத்தின் எந்த கண்டத்தில் வாழ்ந்தாலும் தமிழன் தன் சமயம், தமிழ் கலாச்சாரத்தை என்றென்றும் தன்னுடன் நிலைநிறுத்திக் கொள்வான் என்பதற்கு இன்று இலண்டன் மாநகரில் எழுந்தருளிய திருத்தலங்கள், சைவ சமய ஸ்தாபனங்கள், மற்றும் கலை கலாச்சார மையங்கள் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தருணத்தில் சமயத்தையும், கலாச்சாரத்தையும் வாழையடி வாழையாக கடைபிடிப்பதில் தமிழனுக்கு நிகர் தமிழன் தான் என்று கூறிக்கொள்வதில் பெருமிதம் கொள்கின்றோம்.
நமது இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம் இவ்வளவு சிறப்புற்று முதல் தேர் வீதி உலா வந்த ஆலயம், இராஜ கோபுரத்துடன் கூடிய முதற் கற்கோயில், 1008 வலம்புரி சங்குள் கொண்ட ஆலயம் என அனைத்திலும் முதன்மை பெற்று விளங்குவதன் சிறப்புக்கு காரணம் இறையருள் என்று பொதுவாக அமைந்தாலும் நமது ஆலயச் சிவாச்சாரியர்களின் பூஜை முறைகள், ஒருங்கிணைந்த அறங்காவலர்கள், நிர்வாகக்குழு சிறப்பு அம்சம் இப்படி அனைத்தும் இருந்தபோதிலும் இவை அனைத்திர்க்கும் சிகரம் வைத்தாற் போல் நம் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் நம் இலண்டன் ஸ்ரீ முருகன் மேல் வைத்துள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையும் அவ்வாறு வரும் பக்தர்களுக்கு தாய் வீட்டிற்கு வந்து செல்லும் உணர்வும் உபசரிப்பும் தான் முக்கிய காரணமாகும்.
மேலும் நாம் அடுத்ததாக செய்து முடிக்கவேண்டியவைகளில் மிக முக்கியமானது ஆலயத்திற்கென்று சமயக்கூடம் / திருமணமண்டபம், அதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருவதுடன் மேற்கொண்டு பணிகளை வெகு விரைவில் தொடங்க இருக்கின்றோம் என்பதனை அறியத்தருகின்றோம்.
1975ம் ஆண்டு முதற்கொண்டு இன்றுவரை நம் ஆலயத்தின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவிபுரிந்து வரும் அனைத்து உறுப்பினர்கள், பக்தப்பெருமக்கள் மேலும் கோவிலில் நித்திய பூஜைகள், அனைத்து திருவிழா உபயங்கள், அன்றாட உபயங்கள் செய்து வரும் பக்தப்பெருமக்கள், தேர்த் திருவிழா போன்ற விசேட நாட்களில் நமக்கு உறுதுணையாக நின்று தொண்டாற்றி வரும் தொண்டர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
இத்தருணத்தில் ஆலய அறங்காவலர்கள், நிர்வாகக் குழுவினர்கள், ஆலய சிவாச்சாரியர்கள், மேளாலர், உதவி அலுவளர், நமது ஆலய ஆஸ்தான சிற்பிகள், மடப்பள்ளி பரிசாரகர் மற்றும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் அயராத உழைப்பும் நமது ஆலய வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளதை பாராட்டி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
மனித வாழ்க்கையில் ஏற்படுகின்ற சோதனைகளையும், வேதனைகளையும் நீக்கி மகிழ்ச்சியையும்,வெற்றிகளையும், உலக அமைதியையும், சமதானத்தையும் பெறுவதற்கு மிக முக்கிய மான இறைவன் திருவருளை பெற்றுத் தருகின்ற ஆலயங்கள் இன்றியமையாதவை. அதுவும் அயல் நாடுகளில் வாழ்கின்ற நமது சமுதாயத்தினர் அமைதியோடும் மகிழ்ச்சியோடும் வாழ்ந்திடவும் நமது இளைய சமுதாயத்தினர் சிறந்த கல்வி அறிவோடும் நற்பண்புகளோடும் மொழிப் பற்றும் சமய ஈடுபாடும் குடும்ப மேன்மையும் கொண்டு நல்வாழ்வில் சிறந்திடவும் இது போன்ற மகா கும்பாபிஷேகத்தையும் அதற்கு முன்பாக நடைபெறும் யாக பூஜை ஹோமங்களையும் தரிசித்து கலியுக வரதனாக, வினைதீர்க்கும் வேலனாக, குறைதீர்க்கும் குமரனாக விளங்கும் இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானின் பேரருளைப் பெற்று பெருவாழ்வு வாழ பிரார்த்தித்து உலகில் அமைதியும் சமாதானமும் மக்களின் மகிழ்ச்சியும் பொருளாதார மேன்மையும் விஞ்ஞான வளர்ச்சியும் இயற்கை மாறாமையும் பெருகி மக்கள் பெருவாழ்வு வாழ வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி நிறைவு செய்கின்றேன்.

இங்ஙனம்
ப. தட்சிணாமூர்த்தி, செயலாளர், இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## THAI POOSAM











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI POOSAM










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI POOSAM









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI POOSAM









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## THAI POOSAM









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI POOSAM













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI POOSAM

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI POOSAM









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## THAI POOSAM















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## THAI POOSAM











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## THAI POOSAM

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI POOSAM

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## THAI POOSAM

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## THAI POOSAM

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## Temple Renovation - 2017









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE
## Temple Renovation - 2017









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI MURUGAN TEMPLE

## Temple Renovation - 2017















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# LONDON SRI MURUGAN TEMPLE

## Temple Renovation - 2017













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவியல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிழ்ச்சி அளிக்கும் நிகழ்ச்சி

ஒரே தலைவரின் தலைமையில்
**London Sri Muruagan**
மகாகும்பாபிஷேகம் (03.07.2017)

> **"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட**
> **திரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி**
> **குளித்த வேல்கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்**
> **துளைத்தவேல் உண்டேதுணை"** எல்லாம் வல்ல

லண்டன் ஸ்ரீமுருகன் துணையுடன் காலம் உருண்டோடிக் கொண்டிருக்கிறது. ஆனால் நமது லண்டன் ஸ்ரீ முருகனின் வற்றாத பெருங்கருணை மட்டும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

முருகனின் தந்தையின் பெயர் பூண்டவர் பிரதம குருக்கள் கயிலை நாக நாத சிவம் (குருர்) அவருடன் சங்கக்குருக்கள், மற்றும் உதவி குருக்கள் (சிவாகாரியார் குழுமம்).

தொடர்ந்து 12 வருடநிறைவாக இரண்டாவது மகாகும்பாபிஷேகம் நடைபெற அருள் புரிந்து கொண்டிருக்கும் முருகன் இவன் நமது ஸம்பத்குமாரன் லண்டன் ஸ்ரீமுருகன் இவனது கோயில் இன்றைக்கு பேராலயமாக எழுந்து நிற்கிறது இதற்கு தலைவர் திரு எஸ்.சம்பத்குமார் தலைமையில் தொடர்ந்து இரண்டாவது மாககும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்பது முருகன் அருள் விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மாகும்பாபிஷேகத்திற்கு ஒருவர் தொடர்ந்து ஆலய தலைவராக இருப்பது மிகவும் அரிது அது எமது **London Sri Muragan** திருவருளால் அந்த பாக்கியம் பெற்றவர் தலைவர் திரு சம்பத்குமார் அவர்கள். London Sri Murugan முழு அரவணைப்பும் கிடைக்கபெற்றவர் என்பதில் எந்த சந்தெகமும் இல்லை அதேபோல் தொடர்ந்து இரண்டு கும்பாபிஷேகத்தில் ஒரே பதவியில் இருந்து அரும் பணியாற்றியவர்கள் அறங்காவலர்கள்

**திருமதி சிவஜோதி (Chairman)**
**திரு பழனியப்பன்** (செட்டியார்)
**திரு இராமதாஸ்**

இவர்களுடன் அறங்காவலர்களாக திரு ஆர்.அன்பானந்தர், திரு நரச்சிம்மன், இவர்கள் இணைந்து அறங்காவலர்களாக 2வது கும்பாபிஷேகம் நிறைவேற்றுவது முருகனின் அருட் பெரும் கருணை.

அதே போல் திருமதி புஷ்பா ரகுவரன் கணக்காளராக இருந்து தொடர்ந்து 2வது மாகும்பாபிஷேகம் காண்கின்றேம். அதேபோல் காரியதரிசி, திரு. தட்ஷணமூர்த்தி இவர்களுடன் இணைந்து செயல்யற்றுகின்றனர். அதுடன் நிர்வாக சபையில் உள்ள பல அன்பர்கள் இவர்கள் இப்பணி தொடர லண்டன் ஸ்ரீ முருகன் திருவருள் தொடர லண்டன் ஸ்ரீ முருகன் திருவருர் பாலிக்கட்டும்.

இவன் நமது முருகன் ஸம்பத்குமாரன் லண்டன் ஸ்ரீமுருகன் இவனது கோயில் இன்றைக்கு பேராலயமாக எழுந்து நிற்கிறது. இதற்கிடையில் எந்தனையோ அன்பர்களின் உடல் உழைப்பு பண உதவி, அவன் நமக்கு வாழ்வு தந்தான்.

நமது ஆலய அலுவலக பொறுப்பாளர் திரு டி.சேகர் அவர்களும் 2வது மாகாகும்பாபிஷேகம் நிறைவேற்றும் தொண்டில் தொடர்கிறர். தொடர்ந்து இரு கும்பாபிஷேகம் சேவையாற்றி முருகன் திருவருட் கடாடட்ஷம் கிடைக்கபெற்றார். இலண்டன் ஸ்ரீ முருகன் நிர்வாகத்தினர் எந்தவொரு காரணத்தை முன்நிறுத்தியும் வழிதவளுமல் இலங்கை, தமிழ்நாடு (இந்தியா) நாடுகளில் கணிக்க பெற்ற வாக்கிய பஞ்சாகமுறைபடி பஞ்சாங்க நாட்காட்டிகளை ஒத்த அடுத்த நாட்களில் விழாக்களையும் பூஜைகள் நல்ல நேரம் நாட்களின்படி நடப்பதும் இக்கோவிலின் தனிப்பெரும் சிறப்பாகும் வாக்கியபஞ்சாக்கத்தின் பெருமையை நிலை நாட்டி வரும் பெருமை எமது கோவிலிற்கும் நிர்வாகத்திற்கும் புகழ் பரப்பி வருகின்றது. என்பது வரும் தெய்வீக செய்தியாகும்.

**"மேன்மை கொள்சைவந்தி விலங்குக"**
**"உலகமெல்லாம்"**

வா என்று அழைத்து வரம் அருளும் லண்டன் ஸ்ரீ முருகப் பெருமான் அவன் நம்மை அழைத்து வைத்து அருள் புரிந்து காப்பாற்றுகிறன்.

**"கல்லால் நற்பணிபுரிந்தோர்**
**கல்லொன்றுக்கு ஒரு கற்பம் கந்தவேட்பில்**

**நல்லார்வமுடன் இருப்பர் தேரியற்றி**
**விளவு நனிநடத்தல் செய்தோர்**

**பல்லாண்டு குமரன் உயர் பதத்திருப்பர்**
**நெய்விளக்குப் புனித தீபம்**

**வில்லாரும்படி புரிந்தோர் பலகற்பங்க**
**கந்தவரை மேவி வாழ்வர்"**

– மயூரகிரிப் புராணம்

**"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் ஸ்ரீ முருகன் கோவில்
2வது குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா
சிறப்புற நல்வாழ்த்துக்கள்

Since 1980

37
வருட
சேவையில்

வாணி ஏஜென்ஸி

VANEE'S AGENCY

e-fx-Dealers

317, High St North, London E12 6SL
Tel:0208471 8366 Fax: 020 8552 0930
Email: anpan4@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகியல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலண்டன் திருமுருகன் துதி



மருவுவார் முருகன் மலரடி மன்னு மனத்தினர்க்குத்
திருவார் நிதியும் திடனும் தெளிவும் சிறந்தோங்கும்
பெருவாழ்வும் புகழும் பிறவியாம் பிணியறுக்கும்
குருவாம் திருவருளும் கூடும் இக்குவலயத்தே

இடத்தே குறமாமகள் எதிர்ப்புறத்தே எழில்
மடந்தை மருவிட மாமயிலேறிடும் மாமாயன்
கடம்பணியும் கந்தன் இலண்டனுறை குமரன்
திடமுறவே பேரருள் பொழியும் திறமது வியப்பே

தன்னடியார் பொருட்டாகப் படைநாயகம் தாங்கியவர்
என்னாளும் எமக்கூனம் உண்டாயில் எதிர்வந்து
முன்னாக நின்றது தீர்த்தருள் கோலக்குறமாமகள்
தன்னாயகன் இலண்டன் தனிநாயகன் தேவர்நாயகனே

## இலண்டன் திருமுருகன் இன்னமுதப் பிள்ளைத்தமிழ்

### பிள்ளையார் துதி

கனிந்து உருகிநாள்தோறும் காதலாகி கும்பிடுவார்க்கு
இனியவன் எளியன் இந்தமிழ் நயக்கும் ஈசன் கணநாதன்
பனிவெண் பிறையொடு ஆறு சடையணி பரமன் பாலன்
புனிதத்துயர் புனித் அம்மூத்தபிரான் சரண் காப்பு



### காப்புப்பருவம்

அன்னை புவனேஸ்வரியும் அரனாம் புவனேஸ்வரரும்
அலர் மேல் மங்கை உடனுறை திருமலை அச்சுதனும்
மன்னும் உயிர்கள் உருவாக்கும் பிரமன் வாணி மாதாவுடன்
முன்னம் வந்து காத்திடுக முருகப் பிள்ளை தனை
வன்மை நிறைந்த வல் அரக்கர் வலியை தொலைத்து
வான் நாடும் வாழ்வும் ஈந்தவனை தேவர் மாதர் காக்க
அன்னும் மயிலும் போலும் அழகு மங்கையருடையானை
அறம் வளர் இலண்டன் அண்ணல் முருகனை காத்திடுக
இன்னமும் சின்னவனாய் நிற்கும் இளையவனை இனிது காக்க

### செங்கீரைப்பருவம்

வரமருளும் மாவள்ளலாக நிற்கும்
        வண்ணமயிலேறும் வள்ளி காந்தன்
வளமை மிகு இலண்டனிலும்
        சீர்கோயில் கொண்ட சந்திரவதனன்
உரிய வரன் முறையில் தூபதீபம்
        உன்னதமாம் மயூரபுட்ப இடபதீபம்
உத்தமகும்ப நட்சத்திர தீபமும்
        பஞ்சஆரத்தியுடன் தீபங்கள் காட்டி
சுரர் மகிழ கண்ணாடிகுடை சாமரை
        சாந்தியளி விசிறி ஆலவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ மங்கல வாத்தியமும் ஒலித்து
சமர்ப்பிக்க சத்தியமாய் அருள
பிரிட்டனிலே பனிபடர் தேம்சோரம் பெரிய
கோயிலுடை செங்கோ செங்கீரை
பற்றாக உனையே கொள் பக்தர்க்கருள்
பரம அழகே செங்கீரை

## தாலப்பருவம்

தங்கப் பழைமைத் தமிழ்ப்புலவர்தூய தமிழால் பாராட்ட
திருவளர் தமிழ்ச்ச சொல் முருகாற்றுப்படையில் மிகமகிழ்ந்து
சங்கத் தொட்டில் தவழ்ந்து ஏறி கபிலர் பரண நக்கீரர்
சாரும் இவர்கள் போற்றிடவே நடுவிருந்து தமிழ் மகிழ
பங்கமில்லா கவி ஆயும் பரமன் புதல்வன் பாரெல்லாம்
பெரிய தமிழும் சங்கதமும் பல்கிப் பெருக இலண்டனிலும்
தங்கக் கோயில் கொண்ட தலைவா தாலோ தாலேலோ
தமிழின் தமிழே நம் தவமே கந்தத்துரையே தாலோ தாலேலோ

## சப்பாணிப்பருவம்

நேயம் உருக நினைவு உருக்கி நெய்யும் உருக்கி
நினைவும் உருக நால்வேதம் ஓதி நல் வேள்ளி புரி
தீய வினையழி சிவாச்சார்ய திருக்கூட்டம் நிறையும்
திண்மை வளரும் இலண்டனிலே ஆணவமொடு கன்மம்
மாயை எனும் மலமகற்றி முக்தியாம் பெருவாழ்வருள் மன்னவா
மாமரம் பிளந்தொரு மயூரமேறி அடியர் மனமேறும்
சேயே செக்கச் சிவந்த பிள்ளாய் சப்பாணி கொட்டியருளே
சீருடை பல்மொழியும் போற்றும் செம்மலே கொட்டுக சப்பாணி

## முத்தப்பருவம்

கத்தும் கடல் பல தாண்டியும் கருத்தில் நின்னையே
கொண்ட கருணையாளர் தேம்சு நதியோரம் கனிவில்
தத்தம் பரிவால் சமைத்திட தரணி போற்றும் கோயில்
தமிழும் சைவம் தழைத்திடவே கற்றளியாய் பிரிட்டன்
பத்தியில் மிளிர வந்த பரமனே பரலோகமருள் தேவசேனா
பண்புமிகு இகவாழ்வருள் வள்ளியோடுறைய கண்டு கண்
முத்தம் சொரி அன்பர்க்கருள் முதல்வ முத்தம் தருகவே
மும்மை தமிழ் வளர் ஏழாம்படை வீட்டு முருகா முத்தம் தருகவே

## வருகைப்பருவம்

தங்கத் திருநாண் இடையசைய தமிழ் பேசு நவமணியசைய
தனு முதலாய ஐம்படைக்கலமசைய வியர்வை அசையவே
எங்கும் புரளும் சிற்றாடை எழிலாய் அசைய தோளில்
ஏமற்றமருளும் உபவீதம் அசைய அசைய
பொங்கும் ஜோதியுடனாக சல்சல் என்றே பொலிந்தசைய
புன் நகை எழு பொய்மையழிய புண்ணியங்கள் பெருகவென்றே
திங்கள் வதன இலண்டன் நகர தெய்வச்சுடரே வருக வருகவே
திவாகரனாதி ஒன்பதின்மருமே அடியார்க்கு நலமருள வருக வருகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலிப்பருவம்

குற்றமில் நின்னை குறைவறு விஞ்ஞானத்தால் விண் ஓடங்களால்
கோதறப் பற்றி வீடு கட்டவும் முனையும் விண்ணேறிகள் மிக
உற்ற இலண்டனில் யாவரும் வணங்கிட உயர் கோயில் கொண்டு
உத்தம ஆங்கிலேய மாதரும் ஆடவருமே லோட் முருகாவென்று
பற்றுமிக உற்று புண்ணியநீறொடு உருத்திராக்கம் புனைந்து
போற்றவே எந்தப் பேதமுமின்றி அருள் பரபிரம்மாய
நாற்றிசையும் வணங்கும் நாயகனுடனே அம்புலி நீ ஆடவாவே
நவமணி புனை பேரழகு தேவனுடன் அம்புலி ஆடவாவே

## சிற்றில் பருவம்

கட்டுஞ் சதங்கை கலின் கலின் என்றே காலில் ஒலி எழுப்ப
கவின் மிக ஒழுகும் காவடிகள் தம் தோள்களின் மீதேற்றி
இட்டமுடனே வனைந்த இன்பட்டு இடையே அணிந்து தமிழ்
இனிய கவசமுடன் புகழ் பல பாடியாடிடும் அடியர் கூடி
தட்டும் தவிலிசை தாளமுடனே எழஎழ
மகிழ்ந்தாடதரணியில் நாகரீகப்புகழ் இலண்டனிலும்
கரகோஷமொடு விண்
முட்டும் கோபுரக் கோயில் வாழ் முதல்வரே சிற்றில்
சிதையலாமோ?
மூவருமாய முதல்வரே எம் செல்வரே சிற்றில்
சிதையலாமோ?



## சிறுபறைப்பருவம்

மனமுவந்து முன் மத்தளம் முழக்கிட மாசுகள் அழித்தருளும்
மாமலரோன் தாளம் சோகம் நீக்கும் மாபடகம் பாவநீக்கம்
வினவு பேரிகை பிரீதி தரவே குடமுழவாம் பெரு வாத்தியமும்
விண்ணுலக இன்பம் தந்திடும் யாழ் வீணை வயலின் மிருதங்கம்
தனமருளும் குழல் இதுவாய நரம்பு துளை தோற் கருவி எல்லாம்
தாராளமாய் ஒலிக்க தண்ணருள் சுரக்கும் தயாபர சண்முகனே
மனுக்குலம் வாழ அருள் மாயவனே கொட்டுக சிறுபறையே
மா இலண்டன் மாமுருகனே மண் மகிழ சிறுபறை கொட்டியருளே

## சிறுதேர்ப்பருவம்

தேமேவு பல மணி பொலி மகுடத்தழகும் கோடி
திங்கள் முக்க கருணை அழகும்
பூமேவு பவள புன்னகையழகும் அருளொளுக
பார்த்தருளும் ஈராறு திருவிழியினழகும்
காமேவு சிகையழகும் கனக மணி மாா்பழகும்
கண்குளிர காட்டி இலண்டனிலும் அரசோச்சும்
மாமேவு அரக்கன் வலி தொலை மன்னவனே
மன்னிட்டு தமிழ் தேர் உருட்டியருளே முக்தி
முதலாய சுகமெல்லாமருள் முருகா
சிறுதேருருட்டியருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலிமலித்வீபம் என்று புராணங்களில் சொல்லப்பெறும் ஐரோப்பாவில் இலண்டன் நகரில் தேம்ஸ்நதியோரம் தெய்வசிகாமணியான முருகன் கோயில் கொண்டிருக்கிறான்.

அழகிய கற்றளிக் கோயிலாக எழுந்திருக்கிற இத்தலத்தில் அவனுக்கு அமைந்த அழகிய நாமம் ஸ்ரீ முருகன் என்பன் தான். ஆம்... அந்தத் திருமுருகன். இது ஆறுபடைவீடுகளுடன் ஐரோப்பாவில் உள்ள ஏழாம் படைவீடு, இதைச் சொன்னவர் திரு முருக, கிருபானந்தவாரியார் ஸ்வாமிகள்.

இப்பொருமான் பேரில் அழகிய தமிழில் பிள்ளைக்கவி ஒன்று வேண்டும் என்று கோயிலின் ஆயுட்கால உறுப்பினர். இராஜதுரை அன்பானந்தர் ஆவலுற்றார். அது நீர்வை. தி.மயூரகிரி சாமாவின் ஊடாக நிறைவேறியிருக்கிறது. இப்பிள்ளைத் தமிழில் புதுமைகள் பல உண்டு. 14.05.2011 ஒரே நாளில் இரவில் சில மணி நேரத்தில் பாடப்பட்டதால் பக்திக்கே முதன்மையுமுண்டு.

முக்கியமாக, செங்கீரைப் பருவப்பாடலில் ஒரே பாடலில் சோடச உபசாரம் என்ற பதினாறு வகை உபசாரம் பற்றி கூறப்பட்டுள்ளது.

அம்புலிப்பருவத்தில் சந்திரனில் வீடுகட்ட முனையும் வேடிக்கை பற்றி நகைச் சுவையாக சொல்லப்படுகிறது. லோட் முருகா என்று ஆங்கிலேயர் வழிபடுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிற்றில் பருவத்தில் இலண்டனில் காவடியாட்டம் பற்றிக் கூறப்படுவதுடன் பெரிய கோபுரக் கோயில் உள்ளதும் சொல்லப்படுகிறது.

சிறுபறைப்பருவத்தில் கோயிலில் வாசிக்கப்படும் வாத்தியங்கள் பற்றியும் அவற்றால் உண்டாகும் பலன் பற்றியும் கூறப்படுகிறது. சிறுதேர்ப்பருவத்தில் முருகனின் சொல்லொணாத அங்க அழகு பேசப்படுகிறது.

இப்பாடல்களின் பயனும் பொருளுமாய் நிற்கும் பரமன் திருமுருகன் பாதக் கமலங்களுக்கு இப்பாடற் பாமாலை சமர்ப்பணமாகட்டும்...

## இலண்டன் திருமுருகன் திருவூஞ்சற் பாமாலை

**காப்பு**

சீர்பூத்த பிரித்தானிய நாட்டின் மேவும்
சீலம் நிறை இலண்டனாம் பதியில் மன்னிப்
பார்பூத்த உயிரெல்லாம் பண்பில் வாழப்
பயன்பூத்த திருவருளைப் பரக்க வீசி
ஏர்பூத்த அருளாட்சி இயற்றி நிற்கும்
எழில் பூத்த திருமுருகன் மேல் ஊஞ்சல்
பேர்பூத்த தீந்தமிழால்ப் பாட கணநாதன்
பிணைபூத்த திருவடிகள் காப்பதாமே

**நூல்**

நலனோங்கு நால் வேதம் கால்களாக
நயனோங்கு சக்தியொளிர் விட்டமாக
வலனோங்கு மந்திரநூல் புரியதாக
வல்ல பெரு உபநிடதம் கயிறதாக
புலனோங்கும் பிரணவமே பலவகையாக
பனி நீர்த் தேம்சு நதி ஓரம் விளங்கு
கலனோங்கு பெருங்குடி நிறை இலண்டன்
கல்யாண வேலவரே ஆடிர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரந்தரன் மாலயன் அரனார் புகழ்ந்து வாழ்ந்த
பொருவரிய கணநாதர் மருங்கில் காக்க
நிரந்தரமும் அமரரெல்லாம் நெருங்கி ஏத்த
நிலமிசை அந்தணர் நால் வேதமோத
அரந்தை கெடுத்தருள்கென மாந்தர் வேண்ட
அகமெல்லாம் நெக்குருகி அடியர் போற்ற
கரங்குவித்து யாவரும் இறைஞ்சும் இலண்டன்
கல்யாண வேலவரே ஆடீர் ஊஞ்சல்

மதிகுலவும் இந்திரையாள் வடம் தொட்டாட்ட
மனம் மகிழ்ந்து மலரவனார் தாளம் போட
துதி குலவும் நாரதர் மங்கல கீதம் பாட
சுரமகளிர் நடனமிட இசையும் ஓங்க
விதிகுலவு வேதவொலி விளங்கி விஞ்ச
விரவும் அன்பில் அடியர் வாழ்த்திசைக்க
கதிகுலவு தலமகிமை இலண்டன் கோயில்
கல்யாண வேலவரே ஆடீர் ஊஞ்சல்

வழியடியர் வாழ்த்திசைத்தே அன்பு கூர
வார்த்த புனல் பெருக்கெடுத்தே உடல் நனைப்ப
பழியறியாச் சிவனெறியின் பண்பு கூர
பாங்கரெல்லாம் செழுந்தமிழே பயின்றுமேவ
மொழி மதங்கள் கடந்த ன்பு பெருகியோட
முந்துதமிழ்த் திருப்புகழின் பெருமையோங்க
கழிமேவு நெய்தல் இலண்டன் மேய
கல்யாண வேலவரே ஆடீர் ஊஞ்சல்

ஞானத்தன் வேலாட சேவலாட
ஞாலமதில் திருமுருகன் அருளும் ஆட
மோனத்தின் இதழாட முறுவலாட
மோகனமாமயிலாட படைகளாட
வானத்தின் மதியாள் அழகாயாட
வளர் அழகு வள்ளியவள் விரும்பியாட
கானத்தின் கலையாகும் இலண்டன் மேவும்
கல்யாண வேலவரே ஆடீர் ஊஞ்சல்

விந்தைமிகு சீர் பழனாபுரியின் மீதும்
விளங்கு பரங்குன்றின் சாரல் மீதும்
சுந்தரனாய் சுவாமிமலை உச்சிமீதும்
சுகமருளும் பழமுதிர்சோலையுள்ளும்
சிந்தை நிறை செந்திலம்பதியின் மீதும்
நெழுந்தணிகை மேலும் நடமாடும் செல்வா
கந்தமிகு நில வளமும் நீர்வளம் சேர் இலண்டன்
கல்யாண வேலவரே ஆடீர் ஊஞ்சல்

அலைக்கவரும் சூர் முதல் அரக்கர் மாய
ஆறு மாமுகத்தழகும் பொலியத் தோன்றி
நிலையாக அன்பர்க்கருள் நிமலன் நீயே
நிலவும் திருப்பதமே சரணாகக் கொண்டோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்கமுறாமல் காத்தே அருள் நமதுயிரே
கருங்குழலி வள்ளி தனைக் கவர்ந்த கோவே
அலை மோதும் தேம்சோரம் கோயில் கொண்ட
அழகுக் கல்யாண வேலவரே ஆடீர் ஊஞ்சல்

சீராரும் கடப்ப மலர்த் தெரியல் சூடி
சினத்தரக்கர் மடிய ஒரு செவ்வேல் ஏந்திக்
காராரும் கானகத்தில் வள்ளியைக் கண்டே
காதலித்துக் கடிமணம் செய் காந்தன் நீயே
பேராரும் பெரிய சிவனார் மகிழ அருளொடு
பிரணவத்தின் பொருள் சொன்ன பாலமூர்த்தி
ஏராரும் எழில் இலண்டன் கற்றளிக் கோயில்
ஏந்தையே கல்யாண வேலவரே ஆடீர் ஊஞ்சல்

ஆறணியும் சிவன் சுதரே ஆடீர் ஊஞ்சல்
அழகு நிறை கோடி அற்புதரே ஆடீர் ஊஞ்சல்
பேறளிக்கும் பெருமானே ஆடீர் ஊஞ்சல்
பெருமைசெறி சற்குருவே ஆடீர் ஊஞ்சல்
நீறணியும் குணநிதியே ஆடீர் ஊஞ்சல்
வள்ளி தேவசேனா நாயகரே ஆடீர் ஊஞ்சல்
காரணியும் நதிசூழ் இலண்டன் மேவும்
கல்யாண வேலவரே ஆடீர் ஊஞ்சல்

வேத நூலந்தணரும் வாழி வாழி
விண்ணவரும் ஆவினமும் வாழி வாழி
மாதம் மும்மாரி மழை மலிந்து வாழி
மன்னவன் செங்கோலும் வாழி வாழி
காதலெனும் பக்தி நெறி வாழி வாழி
கற்பொடு சீரொழுக்க நெறி வாழி வாழி
சீதம் நிறை இலண்டன் மாநகரும் வாழி வாழி
சீர் கல்யாண வேலவரும் வாழி வாழி

## தேரேறி வருக எம் துயர் தீர...

சூரன் செய் மாயம் தொலைத்திட்டே தேவர்க்காய்
ஈரஞ் செய் ஏந்தல் அரணமாம் பேரன்பைக்
காட்டுகிறான் ஈராறு கைகள் வரமருள
நீட்டுகிறான் தேரேறி வந்து

நொந்து வருபவர் தம் நோயகல வேல் பிடிக்கும்
கந்தனாம் இலண்டன் குமரேசன் இந்தினெழில்
முகம் காட்டி முறுவல் காட்டியே அருள் கிறான்
நிகரில் தேரேறி வந்து

அரனாகி அரியாகி அமர்சீர் முருகப்
பிரானார் கருணைக் கடலாம் உருகும்
அடியார் துயரம் அறுத்தருள்வான் அன்பாய்
வடிவாய் தேரேறி வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவியல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி

பல்பொருள் அங்காடி

உங்களுக்குத் தேவையான அனைத்து
மளிகைப் பொருள்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

## Bureau de Change

## SAKTHI CASH & CARRY

**MANORPARK**

245 - 247, High Street North, London E12 6SJ

**GANTS HILL**

639 - 643 Cranbrook Road, Gants Hill- ESSEX IG2 6SX

Tel: 020 020 3876 7999

Web: www.sakthi.co.uk, email: info@sakthi.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முருகனின் அருள் பெருகும் பாடல்கள்

### வேல் வேல்!

சண்முகக் கடவுள் போற்றி! சரவணத் துதித்தாய் போற்றி!
கண்மணி மருகா போற்றி! கார்த்திகை பாலா போற்றி!
தண்மலர் கடப்ப மாலை தாங்கிய தோளா போற்றி!
விண்மதி வதன வள்ளிவேலவா போற்றி! போற்றி!

- சத்ருசங்காரவேற் பதிகம்

### கந்தரலங்காரம்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

- அருணகிரிநாதர்

### திருமுருகாற்றுப்படை

அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றுநெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா வென் றோதுவார் முன்!

- நக்கீரர்

### கந்தபுராணம்

மூவிரு முகங்கள் போற்றி! முகம் பொழி கருணை போற்றி!
ஏவருந்துதிக்க நின்று இராறுதோள் போற்றி! காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி! திருக்கைவேல் போற்றி! போற்றி!

- கச்சியப்பசிவாசாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்முகா சரணம்

வேலா! சரணஞ் சரணமென்
மேல் வெகுளாம லினி
மோயினுங் கடைக் கண்பார்
பருப்பத வேந்தன் மகள்
பாலா! குறுமுனி யார்க்குந்
திருப்புகழ்ப் பண்ணவர்க்கும்
ஆலால முண்டவர்க்கும் உபதேசித்த
ஆண்டவனே!

- முருகரந்தாதி

## கந்தர் சஷ்டி கவசம்

தேவர்கள் சேனாபதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தாபோற்றி!
வெற்றி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக் கோரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!

- தேவராய சுவாமிகள்

## திருப்புகழ்

நாரியர்க ளாசையைக் கருதாதே
நானுனிரு பாதபத் மமு நாட
ஆரமுத மானசர்க் கரை தேனே
ஆன அனுபூதியைத் தருவாயே
காரணம தானவுத் தமசீலா
கான குறமாதினைப் புணர்வோனே
சூரர்க் கிளை தூளெழப் பொரும்வேலா
தோகைமயில் வாகனப் பெருமாளே!

- திருப்புகழ்

## திருவருட்பா

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!
அன்பெனுங் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே!
அன்பெனுங் கரத்தமர் அமுதே!
அன்பெனுங் கடத்துள் அடங்கிடும் கடலே!
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே!
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே!
அன்புருவாம் பரசிவமே!

- திருவருட்பா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

நிறைமதி முகமெனு
 மொளியாலே
நெறிவிழி கணையெனு
 நிரகராலே
உறவுகொள் மடவர்க்
 ளுறவாயே
உனதிரு வடியினி
 யாருள்வாயே
மறைபயி லரிதிரு
 மருகோனே
மருவல ரசுரர்கள்
 குலகாலா
குறமகள் தனைமண
 மருள்வோனே
குருமலை மருவிய
 பெருமாளே



## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளங்க சுரக்க மன்னன் கோன்முறை யரசு செய்க குறைவியலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

M.Mani
Mob: 93811 63558, 94449 03558

CAPITAL IMPRESSION

Brochures | Books | Posters | Calendars | Pamphlets
Binding | Lamination & All types of Printing works

No.5/1, Pertho Street, Royapettah, Chennai - 600 014
(Near VM Street, Gill Adharsh School)
capitalimpression2014@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம் வருக நன்றி

# SURIYA JEWELS

TEL : 020 8552 2224



ஈஸ்ட்ஹாம் மாநகரில் ஓர் புதிய உதயம்

## சூரியா ஜூவல்ஸ்

உங்கள் மனம் கவர்ந்த புத்தம் புதிய
டிசைன்களில் அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு

## சூரியா

வைரத்தாலிக் கொடி நவரத்தின கற்கள்
பதித்த மோதிரங்கள் புதிய டிசைன்
தோடுகள் விதம் விதமான சங்கிலிகள்
மோதிரங்கள் ஜிமிக்கிகள் காப்புகள்
மிகவும் மலிவான விலைக்கு
நாட வேண்டிய ஒரே இடம்

## சூரியா ஜூவல்ஸ்

**தங்கத்திற்கு
கடன் சேவை**

# SURIYA JEWELS

292 High Street North Eastham
London E12 6SA Tel : 020 8552 2224



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Guruvayur Sri Krishna Temple

Composed by: **Mrs Kannamma Sampathkumar**

A holy shrine that evokes fervent faith in the hearts of the religious, the Guruvayur Sri Krishna Temple is one of Kerala's most famed places of worship. The temple, dedicated to Lord Krishna who is an avatar of Lord Vishnu, is also famously referred to as 'Bhuloka Vaikunta,' the 'Holy Abode of Vishnu on Earth'.The deity, popularly and lovingly referred to as Guruvayurappan, is a four-armed Krishna, who stands carrying the Panchajanya (conch), the Sudarsana Chakra (discus), Kaumodaki (the mace) and a lotus with a garland made of holy basil.

The temple is a treasure trove of historical lore and legend, finding a mention in Tamil literature dating back to the 14th century. The Cennas Namboodiris, who are by tradition the designated tantris (high priests), conduct the worship in the manner prescribed by Adi Sankara.Stories abound about the transformative and miraculous powers of the deity and the shrine. The Sri Naradiya Purana mentions how the grandson of the Pandavas, Janamejaya, cursed with leprosy, was healed by taking refuge at Guruvayuruppan's feet.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

However, despite its claim to greatness, the temple did go through a phase of penurywhen Kerala was ruled by the Perumals, who were worshippers of Lord Siva and did not care much for Vaishnavite shrines. The Perumals were patrons of the Siva temple at Mammiyur; such was the shift of loyalties to the Mammiyur temple that the Guruvayur temple was left penniless, to the point that even the temple lamp could not be lit on most days.

But the temple's fortunes changed fortuitously with a well-timed blessing. Legend has it that a sage approached the Mammiyur temple for food and hospitality for a night. The temple authorities pretended they had nothing to spare and scornfully directed him to the neighbouring Guruvayur temple, knowing fully well that the temple was in a state of disrepair. When the holy man entered the precincts of the Guruvayur temple, he was courteously received by a Brahmin boy, who offered him a sumptuous meal. The satisfied sage pronounced a blessing: "I came here from the Mammiyur temple, because they said there was nothing there. They told me that there was plenty here. Let it be so henceforth!" It is said that from that day on, the fortunes of the Mammiyur Siva temple began to decline, and that of the Guruvayur temple began getting better by the day.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is said that the idol worshipped at the shrine dates back more than 5,000 years; however, there is no historical data to corroborate this. The eminent historian Prof. K V Krishna Iyer says Brahmins began settling at Kodungalloor during the period of Chandra Gupta Maurya (321-297 BC). Trikkunavay, mentioned in the Guruvayur shrine-related documents, is the same as Thrikkanamathilakam or Mathilakam mentioned in the Dutch and British records; this place was situated in between Guruvayur and Kodungalloor. Guruvayur was the subordinate shrine of Trikkunavay, which was destroyed by the Dutch in 1755. Iyer deduces that this means that the Guruvayur shrine must have come into existence before 52 AD.The central shrine that we see today is said to have been rebuilt in 1638. By the end of the 16th century, Guruvayur had become most popular pilgrimage centre in Kerala. The temple was looted repeatedly and rebuilt almost miraculously each time. The Dutch raided Guruvayur in 1716, followich which it was rebuilt in 1747. In 1766, Hyder Ali of Mysore captured Kozhikode (Calicut) and then Guruvayur. This was followed by Tipu Sultan setting fire to the temple in 1789; but timely rains prevented it from burning down. The idol was hidden underground and the Utsava vigraha was taken to Ambalapuzha by Mallisseri Namboodiri and Kakkad othikkan.

After Tipu was defeated in 1792, the idol and the Utsava vigraha were re-installed on September 17 that year. From 1859 to 1892, the Chuttambalam,the Vilakkumatam, the Koothambalam and Sastha shrine were renovated and roofs made of copper sheeting were put up. In 1900, Sri Konthi Menon fixed the hours of worship and led the drive to keep the temple premises clean. He set up the big bell and reconstructed the Pathayapura (granary). In 1928, the Zamorin once again become the administrator of Guruvayur.

On November 30,1970, a massive fire broke out in the temple. It raged for five hours, but the Sreekovil, the Vigraha, sub-shrines of Ganapathy, Sastha, Bhagavathy and flagstaff remained unaffected. People from all walks of life, irrespective of religion, fought the fire together in a remarkable display of cultural harmony. Of the festivals celebrated at the temple, the Vrischika Ekadasi (Suklapaksha) deserves a special mention. It falls in the Mandala season (November-December). The Navami (9th day) and Dasami (10th day) are also considered very important. Ekadasi Vilakku starts a month before the Ekadasi day, with offerings by different persons, families and organisations. On Navami day, the Vilakku is lit with ghee as an offering by the Kolady family. The Dasami Vilakku, which used to be an offering of the Zamorin Raja, is now conducted by the Guruvayurappan Sankeerthana Trust.

The GuruvayurUtsavam, on the other hand, lasts for 10 daysin the month of Kumbham (February-March). It signifies the restoration of divine Chaithanya. Before the Utsavam, a Brahmakalasam is performed for the purification and energisation of the deity's powers. After the Brahmakalasam, the flag is hoisted, heralding the Utsavam. It is also a display of cultural brilliance, with processions, illumination and fireworks.A speciality of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Guruvayur Utsavam is that no noisy explosives are used, unlike the festivals at most Kerala temples.

Another significant part of the Guruvayur temple is the Punathoor Kotta, the elephant yard that is home to the 56 elephants belonging to the temple. Also called the Anakotta, it houses the largest population of captive male Asian elephants. These elephants have been donated by devotees to the temple. Because of their association with the temple, devotees consider several of these elephants as living forms of Lord Guruvayurappa himself. Guruvayur Keshavan is the most famed tusker; even though he died four decades ago, the tusker is still remembered fondly. Every year on his death anniversary, homage is paid to a life-sized statue of the late tusker, followed by a grand feast for the elephants.As its history and traditions show, the Guruvayur temple is not just a symbol of religious distinction but an icon of cultural harmony as well.

**OM NAMO NARAYANAYA**



**Mrs Kannamma Sampathkumar**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைப் பெருமானாம் கார்த்திகேயன்

சூரனாகிய கொடியோர் அழியவும், தேவர்களாகிய நல்லோர் வாழவும் அவதரித்தவன் கந்தப்பெருமான். அருவமாகவும், உருவமாகவும், அநாதியாகவும், பலவாகவும், ஒன்றாகவும், பிரம்மாகவும் நின்று பரசிவ சோதிப்பிழம்பு கருணைபொழிவும் ஆறுவதனங்களோடும் பன்னிரு கரங்களோடும் சரவணப் பொய்கையில் தாமரை மலரில் முருகப்பெருமானாக அவதாரம் செய்தருளியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகே உருவான முருகன் சரவணப்பொய்கையில் ஆடும் திருவிளையாடல்களைக் கண்டு மெய்மறந்த திருமாலாதிய தேவர்கள் கார்த்திகை மாதர்கள் என்று அழைக்கப்பெறும் ஆறு முனிபத்தினிகளையும் அழைத்து முருகனுக்கு திருமுலைப்பாலூட்ட வேண்டும் என்று வேண்டினார்கள்.

தீர்த்திகை கங்கை தன்னில திகழ் சரவணத்தில் வந்த
மூர்த்திகைக் குழவியே போல் முதற்புரி ஆடல் நோக்கி
ஆர்த்திகை புறாத உள்ளதது அரிமுதல் அமரர் யாரும்
கார்த்திகைத் தெரிவைமாரை விழித்திவை கழறலுற்றார்

கார்த்திகை மாதர்கள் அறுவரும் சரவணப்பொய்கையை அணுகி எம்பெருமானைத் துதித்த போது "அடியார்கள் சிந்தையில் நினைப்பதை நிறைவு செய்பவன்" ஆகிய முருகன் அவர்கள் அறுவரின் பொருட்டு, ஆறு குழந்தைகளாக தன்னை பிரித்து நின்று அருளினான்.

மறுவரும் ஆறலாகம் மாதர் மூவிருவர் தாமும்
நிறைதரு சரவணத்தின் நிமலனை அடைந்து போற்றி
உறுநாகள் தமக்கு வேண்டிற்றுதவுவோன் ஆதரலாலே
ஆறுமுக ஒருவன் வேறாய் அறுசிறார் உருவங்கொண்டான்

கார்த்திகை மாதர் அறுவரும் ஆளுக்கொரு குழந்தையாய் பாலூட்டித் தரலாட்டி, சீராட்டிப் பாராட்டி வளர்த்தன். அக்குழந்தைக் கடவுளும் பல லீலைகளைச் செய்து வளர்ந்தருளினன்.

இவ்வாறு சிவனாரின் திருநுதலில் தோன்றி குழந்தையாய் வளர் குமரனை காண அம்மையப்பரும் ரிபாரூடராக எழுந்தருளினர். அப்போது உள்ளத்தே தோன்று ஆசையின் அதிகாரிப்பால். உமையவள் ஆறு குழந்தைகளையும் ஒன்றாக அணைக்க, அங்கே ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களுமாய்... ஒருங்கிணைக்கப்பட்டதால் "ஸ்கந்தன்" என்றழைக்கப்பட்டான்.

அவ்வமயம், சிவபெருமானும் இடப்பாகத்தே உமையவள் எழுந்தருள, இருவருக்கும் நடுவே குழந்தைக் குமரவேள் எழுந்தருளினான். இவ்வாறு மூவரும் ஒருங்கே அமைந்த காட்சி "சோமஸ்கந்த வடிவம்" என்று போற்றப்படலாயிற்று இதனைக் கண்ட கார்த்திகைப் பெண்கள் சிவபெருமானைப் போற்றித் துதித்து நின்றனர். எம்பெருமான் அவர்கள் மீது கருணை கொண்டு.

கந்தனை நீர் போற்றிய கடனால் இவன் உங்கள்
மைந்தன் எனும் பெயராகுக மகிழ்வால் எவரேனும்
நுந்தம் பகலிடை இன்னவன் நோற்றாள் வழிபடுவோர்
தந்தங்குறை முடிந்தே பரந்தனை நல்குவடம் என்றான்

"கார்த்திகை மாதர்களே, நீவிர் முருகனை வளர்த்ததால் இவன் உங்கள் மகன் என்ற பொருளில் கார்த்திகேயன் என்ற பெயர் பெறுவான். உங்கள் தினமான கார்த்திகை நாளில் யார் முருகனை வழிபடுகிறார்களோ அவர்களது குறைகளை நீக்கி இக சுகம் திருதோடு பரசுகமும் அருளுவோம்" என்றருளினார் சிவபெருமான். நாமும் கார்த்திகையில் விரதமிருந்து கந்தன் திருவடிகளைப் பணிந்து அவனருளால் இன்புறுவோமாக.

**ஆர்.அன்பானந்தர்**
அறங்காவலர்
இலண்டன் ஸ்ரீ முருகன் கோவில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலண்டன் ஸ்ரீ முருகன் கோவில்
2வது மஹா கும்பாபிஷேகம்






# 2 வது குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா சிறப்புற நல்வாழ்த்துக்கள்

இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சுப்ரமணியசுவாமி, திருப்பரங்குன்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பாலசுப்ரமணியசுவாமி, திருச்செந்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பழநி ஆண்டவர், பழநி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சுவாமிநாதசுவாமி, சுவாமிமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சுப்ரமணியசுவாமி, திருத்தணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சோலைமலைமுருகன், பழமுதிர்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

# LONDON SRI MURUGAN TEMPLE

**Registered Charity No.: 271097**

## TEMPLE OPENING HOURS

**MONDAY- FRIDAY**
Morning 8.00 a.m. - 1.00 p.m
Evening 5.00 - 9.30 p.m

**SATURDAY - SUNDAY**
Morning 8.00 a.m. - 2.00 p.m
Evening 5.00 - 9.30 p.m

**POOJA HOURS**
Morning - 9.00 a.m.
Midday - 12.00 noon
Evening - 7.30 p.m

78, Church Road, Manor Park, London E12 6AF, Entrance Via Browning Road,
Tel: 020 8478 8433, Fax: 020 8478 0407 **www.londonsrimurugan.org**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACKNOWLEDGMENTS

The Trustees and Management Committee of
London Sri Murugan Temple
Wish to express their deep gratitude to
All Priests, Administrative Manager, Sculptors and
other Staff for their invaluable service in making the
Maha Kumbhabishegam a resounding success

Rt Hon Stephen Timms MP,
New Ham Mayor and Councilors

Local Police Department

Ashford Partnership LLP

All advertisers for their generous support

Temple Legal Team

Bank of Baroda for their financial support

All Devotees, Members,
Well-wishers, for their generous donations
towards Maha Kumbhabhishekam 2017

Volunteers for their devoted service

All contributors to the Maha Kumbhabhishekam
Commemorative Magazine

Flowers from Akilan Enterprise & Sri Valli

Newspaper and media coverage

Capital Impression Printers, Chennai

and All those who have contributed
in one-way or another



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுபம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

*India's International Bank*

**We are proud to be associated with Sri Murugan Temple and its trustees since beginning and convey our best wishes on 12th Maha Kumbhabhishekam of Sri Murugan Temple.**



**All your banking needs under one umbrella since last 60 years**

- Customized range of loan products
- Corporate, SME, Retail banking needs
- NRI services - Local banking needs that help you to connect with INDIA
- 24 X 7 - E banking facilities
- Rupee Remittances to India with No Charge - (Terms and conditions apply)

**BANK OF BARODA UK BRANCHES**

| | | | | |
|---|---|---|---|---|
| London - EC1Y 2BD<br>T - 020 7457 1515 | Aldgate - E1 1NL<br>T - 020 7480 0000 | Southall - UB1 1QD<br>T - 020 8574 1324 | Wembley - HA0 4TL<br>T - 020 8902 7407 | Tooting - SW17 7TR<br>T - 020 8767 6469 |
| Birmingham - B21 9SU<br>T - 012 1523 5973 | Manchester - M4 5JJ<br>T - 016 1832 5588 | Kenton - HA3 0RB<br>T - 020 8909 1739 | Leicester - LE4 6AS<br>T - 011 6266 3970 | Ilford - IG1 2RT<br>T - 020 8514 8609 |

Website: https://bankofbarodauk.com http://www.bankofbaroda.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org